
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா ௨0 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU




முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 27 புதன்கிழமை (12.08.2015) பக்கங்கள் 20 ஓசை – 345

# வடக்கில் வேண்டாம் மேலதிக படையினர்



(யாழ்ப்பாணம்)

தேவைக்கு அதிகமாகவும் மக்களுடைய இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாகவும் வடக்கு, கிழக்கில் படையினர் நிலைகொண்டிருப்பதை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சுன்னாகத்தில் நேற்று இடம்பெற்ற கண்ணகி மற்றும் சபாபதிப்பிள்ளை நலன்புரி முகாம்களில் வாழும் மக்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உங்களது சொந்த இடங்களில் நீங்கள் மீளக்குடியமர வேண்டும் என்பதில் எவ்வளவு விருப்பத்துடன் இருக்கின்றீர்களோ. அதேபோன்றுதான் உங்களை உங்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த வேண்டும் என்ற அக்கறை எனக்கும் உள்ளது.

இதனடிப்படையில், கடந்த காலத்தில் எமக்குக் கிடைத்த குறைந்த அரசியல் பலத்தைக்

(19) ஆம் பக்கம் பார்க்க

விழிப்பாய் இருப்பாய் தமிழா !

## மீண்டும் ஏமாற்ற அனுமதிக்க முடியாது

### சமஷ்டியை கையில் எடுத்தது ஏன்?

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற படுகொலைக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களே காரணம்.

இறுதி யுத்தத்தின் போது தொலைபேசிகளைத் துண்டித்து புலிகளின் மௌனிப்புக்கு இவர்களே காரணமாக இருந்தார்கள். எனது தாய் மீது ஆணையாக இதுவே உண்மை என அடித்துக் கூறுகிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தனது தாய் மீது சத்தியம் செய்தார்.

மகிந்தவுக்கு இன்னொரு கூட்டணியாகியுள்ள சுமந்திரன் தலைமையிலான கூட்டமைப்பின் தலைவர்கள் பச்சைப் பொய் கூறுகிறார்கள். புலிகளின் தலைவரை தேசியத்தின் தலைவர் என்றார்கள். பின்னர் பயங்கரவாதிகள் என்றார்கள் இது வரலாறு. அன்று மே 18 ஆம் திகதி



அதிகாலை 1 மணிக்கு புலிகளின் தலைவர்கள் தொலைபேசியில் முள்ளிவாய்க்கால் நிலைமையைக் கூறி மக்களையும், தம்மையும் காப்பாற்றக்கூறியபோது அரசுடனான பேச்சு

(19) ஆம் பக்கம் பார்க்க

## டோனி பிளேயர் கொழும்பில்

(கொழும்பு)

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் இரு வார விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்துள்ளார்.

இங்கிலாந்தின் சட்டத்துறையில் பிரபலமான ஒருவராக கருதப்படும் அவரது மனைவியான செரி பிளேயர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தலைமன்னார் - இராமேஸ்வரம் நெடுஞ்சாலை திட்டத்துக்கு பச்சைக்கொடி

(கொழும்பு)

இராமேஸ்வரத்தையும் தலைமன்னாரையும் இணைக்கும் தொடருந்து மற்றும் நெடுஞ்சாலை இணைப்பு வழியை உருவாக்குவது தொடர்பாக இந்திய அரசாங்கம் இதுவரையில் இலங்கையிடம் அதிகாரபூர்வமான தகவலைப் பரிமாறவில்லை என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாக்கு நீரிணை வழியாக இந்த இணைப்பை ஏற்படுத்தும் திட்டம் தொடர்பான சாத்திய

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிகளிடம் மீட்ட தங்கம் ஜப்பான் வியாபாரிக்கு விற்பனை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான தங்கத்தின் ஒரு பகுதி ஜப்பான் நாட்டு வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர் சுமன தேரர் தெரிவித்துள்ளார்.

அதற்கான ஆவண ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும், தான் அவற்றை நிதி மோசடி விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கே.பி.எனும் குமரன் பத்மநாதன், மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, கோத்தாபய ராஜபக்ஷ, காமினி செனரத், அஜித்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீதும் ஐ.எஸ்.இலக்கு

(கொழும்பு)

சர்வதேச ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் எதிர்வரும் ஐந்து வருட காலப் பகுதிக்குள், உலகத்தில் கைப்பற்றவிருக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்கியுள்ளதாக பி.பி.சி.உலக செய்திச் சேவையின் முக்கிய நிருபர்களில் ஒருவரான அன்ட்ரூ ஹொஸ்கின் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் ஐரோப்பா, ஆபிரிக்கா, மத்திய மற்றும் தென் ஆசிய நாடுகளின் பெருந்தொகையான நிலப்பரப்பை ஐ.எஸ்.ஐ.எஸ் ஆக்கிரமிக்கும் வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டே அவர்கள் தற்போது லிபியா, சவுதி அரேபியா, டியூனீசியா போன்ற நாடுகளில் தமது தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் டெயிலி எக்ஸ்பிரஸ் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

## அழைப்பாணை இரத்து

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் விமல் வீரவன்ச ஆகிய இருவருக்கும், விசாரணைக்கென நிதி மோசடி குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் விடுக்கப்பட்டிருந்த அழைப்பாணைகள் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைய, மேற்படி இருவரையும் பொதுத் தேர்தலுக்கு முன்பு விசாரணைக்கு எடுக்கவோ, அழைக்கவோ போவதில்லை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

## முன்னாள் ஜனாதிபதி ஒருவரும் தேர்தல் கண்காணிப்பில்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கென இலங்கை வந்துள்ள 15 பேரைக் கொண்ட பொதுநலவாய நாடுகள் அமைப்பின கண்காணிப்புக் குழுவில் முன்னாள் ஜனாதிபதியொருவரும் இடம் பிடித்துள்ளார்.

2009-2014 காலப்பகுதியில் மோல்டா இராஜ்ஜியத்தின் ஜனாதிபதியாக இருந்த கலாநிதி ஜோர்ஜ் அபேலாவே மேற்படி பொதுநலவாய நாடுகளுக்கான கண்காணிப்புக் குழுவுக்கு தலைமை தாங்கி இலங்கை வந்துள்ளார். 67 வயதான இவர் மோல்டா தேசத்தின் தொழிலாளர் கட்சியின் முக்கியஸ்தருமாவார்.

# உணர்ச்சிப் பேச்சுக்களை நம்பி கூட்டமைப்பிற்கு துணை போய்விட்டோம்

## இணுவில் மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு



மக்களால் தெரிவு செய்யப்படும் அமைச்சர்களையோ, நாடாளுமன்ற உறுப்பினர்களையோ நேரில் சந்திக்கவோ, கலந்துரையாடவோ முடியாமல் இருக்கின்ற சூழலில் இலகுவில் சந்தித்துக் கலந்துரையாடக் கூடியதாக உள்ளவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமேயென இணுவில் வாழ் மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இணுவில் பகுதிக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் விஜயம் மேற் கொண்டு மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் நடைமுறைச்சாத்தியமாகாததும், வர்வசனப் பேச்சுக்களையும் நம்பி, நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து, அவர்களை வெற்றி பெறச் செய்திருந்தோம்.


ஆனால், எமது வாக்குகளால் வெற்றியைப் பெற்றுக் கொண்டவர்கள் எமது நலன்சார்ந்த, மேம்பாடு சார்ந்த விடயங்களில் பாராமுகமாகவே இருந்து வருகின்றமை வேதனையளிக்கிறது.

அதிலும் குறிப்பாக, நாம் அவர்களை சந்திக்க விரும்பினாலும்கூட எம்மை சந்திப்பதற்கு அவர்கள் ஒருபோதும் விரும்பியதில்லை. மாறாக, மக்கள் சந்திப்புக்களை அவர்கள் புறக்கணித்து வருகின்றனர் என்பதுடன், அவர்களைச் சந்திபபது என்பது இயலாத காரியமாகவே உள்ளதென்றும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, அம்மக்கள் பிரதிநிதிகளின் தேவைப்பாடுகள் பிரச்சினைகள் தொடர்பிலும் செயலாளர் நாயகம் அவர்கள் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) உடனிருந்தார்.

# முருகேசு சந்திரகுமாரின் நூல்கள் வெளியீடு




(பளை)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் மக்களை நோக்கிய நாடாளுமன்ற உரைகள் அடங்கிய வாழ்வை மீட்கும் குரல், வாழ்வுக்கும் விடுதலைக்கும் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா இன்று இடம்பெறவுள்ளது.

இதில் 1995 தொடக்கம் 1998 வரை நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட காலத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக வாழ்வை மீட்கும் குரல் எனும் நூலும், 2012 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் நாடாளுமன்றில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு வாழ்வுக்கும் விடுதலைக்கும் எனும் நூலாகவும் தொகுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகனின் தலைமையில் பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் இந்நூல்களின் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

இதில், வெளியீட்டுரையினை கவிஞரும், ஊடகவியலாளருமான திரு.சி.கருணாகரன் நிகழ்த்தவுள்ளார். சிறப்புரைகளை யாழ் பல்கலைக்கழக ஓய்வுநிலை துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களும், சிகரம் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் திரு.கோ.றுஷாங்கனும், நிகழ்த்தவுள்ளனர்.

கடந்த 2010-2011 ஆகிய நாடாளுமன்ற உரைகளின் தொகுப்பு "உரிமைக்கும் உயர்வுக்கும்" நூல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் அருள்மிகு ஆத்திசூடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதிஸ்டா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் 9.20 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது

எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும்.

நல்லூர் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ முத்துஸ்ரீ நிவாசக்குருக்கள் கும்பாபிஷேகக்கிரியைகளை நடத்தி வைக்கவுள்ளார். (10)

# வியாபார நிலையங்களுக்கு விடுமுறை

நெல்லியடி வர்த்தக சங்கத்திற்கு உட்பட்ட வியாபார நிலையங்கள் நாளை மறுதினம் மூடபபடவுள்ளன.

வருகின்ற வெள்ளிக்கிழமையானது ஆடிஅமாவாசை தினமாக இருக்கின்றபடியினால் முழுமையான விடுமுறை தினமாக அனுஷ்டிக்குமாறு நெல்லியடி வர்த்தக சங்கத்தின் தலைவர் என்.யோகேந்திரன் கடை உரிமயாளர்களுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளார். (18)

# அமர்வுகள் ஒத்திவைப்பு

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறுவிருந்த கரவேட்டி மத்தியஸ்த சபையின் அமர்வுகள் நடைபெறமாட்டாது எனவும் இந்த அமர்வுகள் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வழமை போன்று நடைபெறும் எனவும் மத்தியஸ்த சபையின் தலைவர் எஸ் நற்குணலிங்கம் தெரிவித்துள்ளார். (01)

# சுன்னாகத்தில் மருத்துவமுகாம்




(சுன்னாகம்)

லங்கா சித்தாயுர்வேத மருத்துவக் கல்லூரியின் மாபெரும் சித்தாயுர்வேத மருத்துவ முகாம் நாளை முற்பகல் 8.30 மணி முதல் 3.00 மணி வரை சுன்னாகம் சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சிறுவர் நோய்கள், நாட்பட்ட வாத நோய்கள், தோல நோய்கள், பெண் நோயியல், பொது வைத்தியம் என்பன பற்றிய சிகிச்சை முறைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் நோய் சம்பந்தமான ஆலோசனைகளும் துறை சார்ந்த மருத்துவர்களால் வழங்கப்படுவதோடு, இலவச மருந்து விநியோகமும் இடம்பெறவுள்ளது. அத்துடன் இரத்ததான நிகழ்வும் இங்கும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (85)

# அளவெட்டியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டில் இருந்தோர் ஆலயம சென்றவேளை தருணம்பார்த்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டு அறையினுள் உள்ள அலுமாரியில் இருந்த ரூபா 30 ஆயிரம் பணத்தினையும் 5 பவுண் நகையையும் களவாடிச் சென்றுள்ளனர்.


இச்சம்பவம் நேற்று பிற்பகல் 11 மணியளவில் அளவெட்டி வடக்கு அம்மன்கோவிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டுக்காரர் கோயிலுக்குச் சென்ற வேளை வீட்டின் பின்கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் இப்பணத்தினையும் நகையினையும் களவாடிச்சென்றுள்ளனர்.

இருப்பினும் ஏனைய நகைகளும் பெருந்தொகை பணங்களும் இருந்த அலுமாரி திருடர்களால் கூரிய ஆயுதங்களால் கொத்தப்பட்ட போதிலும் கோயிலுக்குச் சென்ற வீட்டுக்காரர் திரும்பிவருவதனை அறிந்த திருடர்கள் வீட்டின் பின்மதிலால் தப்பிச்சென்றுள்ளனர்.

இவ்வாறு கள்ளர்களின் நடமாட்டம் இப்பிரதேசத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளமையானது மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. (85)





தம்பன் கடவை மன்னம்பிட்டி ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவப்பெருவிழா அண்மையில் இடம்பெற்ற போது. (85)



4





1 2 3 5 6 7 8 9 10

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



X

ஏமாறும் வாக்காளன் ஒருநாள் ஏமாற்றும் வேட்பாளனையே ஏமாற்றி விடுகின்றான். -யதார்த்தக்கவிராயர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நம்பி வாக்குப் போடலாமா?

சர்வதேசத்துக்குத் தமிழர்களின் ஒற்றுமையைக் காட்டுவதற்காக தமிழர்கள் எல்லோரும் தங்களுக்கே வாக்களிக்க வேண்டும் என இம்முறையும் கூசாமல் மேடைகளில் முழங்குகிறார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

விடாமல் முருங்கை மரம் ஏறும் விக்கிரமாதித்தன் தோள் வேதாளத்தைப் போல, இவர்களும் எல்லாத் தேர்தல்களிலும் சர்வதேசத்திற்கு ஒற்றுமையைக் காட்டக் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

கடந்த ஆறு ஆண்டுகளில் இதுவரை தமிழ் மக்கள் மத்தியில் ஐந்து தேர்தல்கள் நடந்துள்ளன. ஐந்திலும் தமிழ் மக்கள் ஒற்றுமையைக் காட்டியே வாக்களித்திருக்கிறார்கள்.

ஆனால் ஐந்துமுறை காட்டியும் சர்வதேசத்திற்கு அந்த ஒற்றுமையைக் காணத் தெரியவில்லை என்றால், அந்தச் சர்வதேசத்தை ஒரு நல்ல கண் டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்டுவதை விட்டுவிட்டு, ஆறாவது முறையும் ஒற்றுமையைக் காட்டும்படி தமிழ் மக்களை ஏன் சும்மா ஆய்க்கினைப் பண்ணிக் கொண்டிருக்கிறது கூட்டமைப்பு?

தமிழ் மக்கள் என்னதான் விழுந்து விழுந்து ஒற்றுமையைக் காட்டினாலும், சர்வதேசத்தைப் புரிந்துகொண்டு, சாத்தியபூர்வமான ஒரு தீர்வுத் திட்டத்தைப் பேசக்கூடிய நேர்மைத்திறம் கூட்டமைப்பிடம் கிடையாது. அதற்கு அவர்களுக்குள்ளேயே ஒற்றுமையான நிலைப்பாடென்று எதுவுமில்லை; அப்படி ஒன்றுக்கு அவர்களால் வரவும் முடியாது.

தங்களுக்குள்ளே ஒற்றுமையான ஒரு கருத்தோ செயற்பாடோ இல்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள், தமிழ் மக்களிடம் ஒற்றுமையைக் கேட்பது தங்களது சொந்தப் பதவி லாபத்திற்கே தவிர வேறொன்றையும் வெட்டிப் புடுங்குவதற்காக அல்ல என்பதை இன்னமும் விளங்கிக் கொள்ளாமல் யாரேனும் இருக்க முடியுமா?

இனியும் எதையோ தாங்கள்தான் சாதிக்கப் போவதாகக் கூறி வாக்குக் கேட்பவர்களிடம் உள்ள ஒற்றுமையின் லட்சணத்தை விளங்கிக்கொள்ள, நேற்று ஒரே நாளிலேயே வந்த பத்திரிகைத் தலைப்புச் செய்திகள் இரண்டைப் பாருங்கள்:

"தேர்தலுக்குப் பின் வரும் புதிய ஆட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தரத் தீர்வை நிச்சயம் பெறுவோம் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் யாழ்ப்பாணத்தில் சூளுரை" இது ஒரு செய்தித் தலைப்பு.

"தென்னிலங்கை அரசுகள் ஒருபோதும் தமிழர்களுக்குத் தீர்வை வழங்காது – மாலுசந்தி தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்" இது மற்றொரு செய்தித் தலைப்பு.

தமிழர்களை மகா கேனையர்கள் என்று நினைத்துக் கொண்டா இந்த வேட்பாளர்கள் பேசுகிறார்கள்?

தீர்வு வரும் என்கிறார்களா அல்லது வராது என்கிறார்களா? தென்னிலங்கை ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்களா அல்லது நடத்த முடியாது என்கிறார்களா?

கட்சியின் தலைவர் ஒரு விதமாகச் சூளுரைக்கும் போது, அதே கட்சியைச் சேர்ந்த அந்த "ஊடகப் போராளி" ஏன் வேறு விதமாக உளறுகிறார்?

இரண்டுமே, மக்களுக்கு எதையாவது அந்நேரம் ஆவேசப் படும்படியாகச் சொல்லி ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக்கொண்டு பிறகு பின்புறத்தைக் காட்டிப் போய்க் கொண்டிருக்கலாம் என்பதற்குத்தானே?

தமிழ் மக்களுக்கான தீர்வு என்ன? அதைப் பெறும் வழிமுறை என்ன? கட்சியின் திட்டம் என்ன? என்பதையெல்லாம் தங்கள் கட்சிக்குள் இவர்கள் பேசிக் கொள்வதேயில்லையா?

தங்களுக்குள்ளேயே பேசாதவர்கள், வேறு யார் எவரிடம் போய்ப் பேசித் தீர்வுக்கு நேர்மையாக முயற்சிப்பார்கள் என்று, எங்களை இவர்கள் நம்பச் சொல்கிறார்கள்? - ஆசிரியர்

# முஸ்லிம் காங்கிரசின் ஆதரவு இல்லாமல் ஐ.தே.க. ஆட்சியமைக்க முடியாது

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆதரவு இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியால் ஆட்சி அமைகக முடியாது. எமது கட்சி பெறப்போகும் பத்து ஆசனங்களைக் கொண்டுதான் ஐக்கிய தேசியக் கட்சி அரசு பலமடையும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

15 வருடங்களாக நாம் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கப் போராடினோம். ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு தடவைகள் நாம் பந்தயம் கட்டிய குதிரை வெல்லவில்லை. ஆனால், இந்த முறை நாம் பந்தயம் கட்டிய குதிரை வென்றதோடு அதில் சவாரி செய்யவும் செய்கிறோம்.

மகிந்தவின் ஆட்சியில் எமக்குப் போதுமான அரசியல் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இருந்தும், கட்சியைப் பாதுகாப்பதற்காக அந்த அரசில் இணைந்து இருந்தோம். புலி பதுங்குவது பாய்வதற்கு என்பது போல், ஆட்சி அதிகாரத்தை எமது கையில எடுப்பதற்காக சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இப்போது வென்றுவிட்டோம்.

இப்போதுதான் நாம் விரும்பியவாறு எமது பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. எமது கட்சி இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியால் ஆட்சி அமைக்க முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது. நாம் பெறப்போகும் பத்து ஆசனங்கள் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசைப் பலப்படுத்தும்.

திருகோணமலை மாவட்டத்தின் அரசியல் அதிகாரத்தை எமது கைகளில் எடுப்பதன் மூலம் தான் இந்த மாவட்டத்தைப் பூரணமாக அபிவிருத்தி செய்ய முடியும். அதற்காக நாம் இந்தத் தேர்தலில் பாடுபட வேண்டும்.

இப்போதுதான் முஸ்லிம் காங்கிரசுக்கு வசந்த காலம் பிறந்து இருக்கின்றது. இந்தச் சந்தர்பத்தைப் பயன்படுத்தி நாம திருமலை மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதோடு எமது துரோகிகளையும் தோற்கடிப்போம் என்றார்.

# தர்ம இராச்சியம் அமைக்க வந்தவர்கள் ஐ.தே.க. வில் இணைந்ததே நகைச்சவை

## பெத்தேகம சமித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

தர்ம இராச்சியமொன்றை அமைக்க வந்த சம்பிக்க ரணவக்க, அதுரலிய ரத்ன தேரர் போன்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டமையே மிகப் பெரிய நகைச்சுவையாகும் என தென் மாகாணசபை உறுப்பினர் பெத்தேகம சமித தேரர் தெரிவித்துள்ளார்.

அதிகார மோகம் காரணமாக ரத்ன தேரர், சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர்.

அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் கைப் பொம்மையாக மாற்றமடைந்துள்ளனர்.

யானையின் மீது ஏறி அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்றனர்.

இந்த முயற்சிகளை புள்ளடியின் பலத்தினால் மக்கள் முறியடிக்க வேண்டும்.

பௌத்த சாசனத்தையும், பௌத்த அடையாளங்களையும் அடகு வைத்து விற்று தர்ம இராச்சியமொன்றை அமைக்க ரத்ன தேரர், சம்பிக்க போன்றவர்கள் இன்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டமை இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய நகைச்சுவையாகும். இவர்கள் தான் நாட்டில் தர்ம இராச்சியத்தை அமைப்பதாகத் தெரிவித்து நாட்டை விற்றுத் தின்றவர்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் மத்திய வங்கி பிணைமுறி தொடர்பில் பேசிய சம்பிக்கவின் வாய் பூட்டப்பட்டுள்ளதா, என நாம் கேள்வி எழுப்புகிறோம் என பெத்தேகம சமித தேரர் காலியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.

# சடலங்களை தோண்டி அரசியல் நடத்துகிறது ஐ.தே.க

## டிலான் பெரேரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

சடலங்களைத் தோண்டி அரசியல் நடத்தும் அளவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதா என கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா. இவ்வாறு சடலங்களைத் தோண்டி அரசியல் நடத்த வேண்டுமானால், தங்களுக்கும் தோண்ட நிறைய சடலங்கள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று, நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்த ஊட கவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிபபிட்டார். குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிபெறும் என மூன்று கருத்துக் கணிப்பு முடிவுகள் குறிப்பிடுகின்றன. இவற்றில் புத்திஜீவிகளினால் ஒரு கருத்துக் கணிப்பும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இருவரினால் ஒரு கருத்துக் கணிப்பும், சட்டத்தரணிகள் சிலரினால் ஒரு கருத்துக் கணிப்பும் மேற்கொளளப்பட்டுள்ளது.

இந்த மூன்று கருத்துக் கணிப்புக்களுக்கு அமையவும், ஒன்றின் முடிவில் கூட்டமைப்பு 118 ஆசனங்களையும், மற்றையதன் முடிவிற்கு அமைய 114 ஆசனங்களையும், மூன்றாவது கருத்துக் கணிப்பிற்கு அமைய 112 ஆசனங்களையும் பெற்றுக்கொள்ளும் எனக் கூறப்படுகின்றது. இந்த சகல முடிவுகளுக்கு அமையவும் கூட்டமைப்பு கண்டிப்பாக வெற்றி பெறும் என்பது உறுதியாகியுள்ளது.

இதனால் ஐக்கிய தேசியக கட்சியினர் தமது தேர்தல் செயற்பாடுகள் தொடர்பில் மிகவும் வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ளனர். அவர்களின் தேரதல் செயற்பாடுகள் வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ளதனால் இன்று புதைக்கப்பட்ட சடலங்களைத் தோண்டி தேர்தல் பிரசாரம் செய்கின்றார்களா? என்று கேட்கின்றேன்.

அவ்வாறு சடலத்தை தோண்டி அரசியல் செய்யவேண்டுமானால் எங்களுக்கும் தோண்டுவதற்கு நிறைய சடலங்கள் இருக்கின்றன எனத் தெரிவித்தார்.

# சர்வதேச சவால்களுக்கு முகங்கொடுக்க பிரதமர் ரணிலால் மட்டுமே முடியும்

## கூறுகிறார் சம்பிக்க ரணவக்க

இலங்கை அரசுமீதான சர்வதேச சவால்களுக்கு முகம் கொடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே முடியும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றி பெற்றிருந்தால் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கும் வடக்கில் தொடர்நதும் மக்களை அடக்க முடியாது. இராணுவ சப்பாத்துக்களால் மக்களை அடக்கி வைத்திருந்தால நாட்டில் உரிமைக்கான கலவரம தலைதூக்கியிருக்கும்

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் மூலம் நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாப்பதுடன் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தவும் சர்வதேச சவால்களிலிருந்து விடுவிக்கவும் முடிந்துள்ளது.

இதேவேளை மகிந்த கூட்டணி வெற்றி பெற்றிருந்தால் இராணுவத்தை சர்வதேச குற்றவாளி கூண்டில் நிறுத்தியிருப்பார்கள். நாட்டையும் இராணுவததையும் பாதுகாத்தது ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையும் ஆகும்.

வடக்கில் மீண்டும் புலிகள் தலைதூக்கியுள்ளதாக மகிந்த பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். வடக்கில் தொடர்ந்தும் மககளை அடக்கினால் உரிமைக்கான போராட்டம் தலைதூக்கும் என்றார்.

# தமிழ் மக்களின் விமோசனத்துக்கு என்ன செய்ய வேண்டும்?

சங்கர சிவன்

**வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டியோ பிரதேச சுயாட்சியோ உடனடியாகச் சாத்தியமானதல்ல. அதற்காக அந்த இலக்கைக் கைவிடவும் கூடாது. முதலில் சாத்தியமான தீர்வை ஏற்றுக் கொண்டு படிப்படியாக இலக்கை நோக்கி முன்னேற வேண்டும். தென்னிலங்கையில் புலமையாளர்களுடன் கருத்துப் பரிமாறலை மேற்கொள்ளல், சிங்கள மக்கள் மத்தியில் அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமான மனோநிலையை உருவாக்கும் வகையில் செயற்படுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தென்னிலங்கை அரசியல்வழிச் சமூகத்தில் முழுமையான அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்க முடியும். கூட்டமைப்பு இதற்கு மாறாகவே செயற்படுகின்றது.**

தமிழ் மக்களின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்போவதாகத் தேர்தல் களத்தில் நிற்கும் எல்லாக் கட்சிகளும் கூறுகின்றன. இவர்கள் கூறுவதைத் தமிழ் மக்கள் அப்படியே நம்பிவிடக் கூடாது. நிதானமாகவும் யதார்த்த பூர்வமாகவும் சிந்தித்து நல்ல முடிவுக்கு வரவேண்டும்.


தேர்தல் முடிந்ததும் தனது கட்சி அமைக்கும் அரசாங்கம் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம வேட்பாளர் கூறுகிறார். அந்தத் தீர்வு என்னவென்று அவரால் சொல்ல முடியாது. ஏனென்றால் ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒரு தீர்வும் இல்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட எல்லா ஆலோசனைகளையும் எதிர்த்த வரலாறு தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு. இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற சகல வன்முறைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியே சூத்திர தாரியாக இருந்திருக்கின்றது. இனப் பிரச்சினைக்கான அதன் தீர்வை முன்வைக்க இப்போதும் ஐக்கிய தேசி யக் கட்சித் தலைமை தயாராக இல்லை. இந்த நிலையில் கட்சியின் யாழ்ப்பாண வேட்பாளர் கூறுவ தெல்லாம் வெறும் ஏமாற்று வார்த்தைகள்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் தாங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வேட்பாளர்கள் என்று உரிமை கோருகின்றார்கள். மற்றைய எல்லா மாவட்டங்களிலும் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுபவர்கள் மகிந்த ராஜபக்ஷவின் அணியைச் சேர்ந்தவர்களாக இருக்கையில் இங்கு மாத்திரம் அந்த மாற்றம் எப்படி? மேலும் இவர்களின் வேட்பு மனுவில் கட்சியின் செயலாளர் என்ற முறையில் கையொப்பம் இட்டிருப்பவர் மகிந்த ராஜபக்ஷவின் அணியைச் சேர்ந்த அனுர பிரியதர்சன யாப்பா என்பதும் குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை இதுவரை மக்களுக்கு இவர்கள் சொல்லவில்லை.



கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சி காலாவதி ஆகிப்போன ஒரு நாடு இரண்டு தேசம் என்ற கோட்பாட்டைத் தூக்கி வைத்து ஆகாயத்தில் கோட்டை கட்டுகின்றது. இலங்கையில் தமிழ் மக்கள் ஒரு தேசம் (நேஷன்) என்பதைக் கோஷங்கள் மூலம் யதார்த்தமாக்க முடியாது. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் படிப்படியாக வலுப்படுத்திச் சுயாட்சி அமைப் புக்கான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் செயற்படுவதன் மூலமே இக்கோட்பாட்டை யதார்த்தமாக்க முடியும். இப் படியான வேலைத்திட்டம் எது வும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிடம் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டி என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றது. ஆறு வருடங்களாக எந்தக் கோரிக்கையையும் முன்வைக்காமல் புலம்பெயர் அமைப்புக்களின் கட்டளைக்குப் பணிந்து அரசியல் தீர்வை ஓரங்கட்டிச் செயற்பட்டவர்கள் அரசி யல் ஆய்வாளர்கள் அடுத்தடுத்துக் கேள்வி எழுப்பியதன் விளைவாக இப்போது சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார்கள். நிதானமாக ஆராய்ந்து பார்த்தால் இதுவும் அரசியல் தீர்வை ஓரங்கட்டு வதற்கான புதிய தந்திரம் என்பதை விளங்கிக்கொள்ளலாம். அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதைத் தவிர்ப்பதன் மூலம் தனிநாட்டுக் கனவில் மிதக்கும் புலம் பெயர் அமைப்புக்களைத் திருப்திப் படுத்தும் நிலைப்பாட்டிலிருந்து கூட்டமைப்புத் தலைமை இன்னும் விலகவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த சுயாட்சி என்பது தமிழ் மக்களின் அபிலாஷை. அது சமஷ்டியாகவும் இருக்க லாம். பிரதேச சுயாட்சியாகவும் இருக்கலாம். அதை வெறுமனே வாக்குகளுக்காக வலை விரிக்கும் கோஷமாகப் பயன்படுத்துவது தமிழ் மக்களுக்குப் பாதகமான விளைவு-களையே ஏற்படுத்தும்.



**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மாநிலத்தில் சுயாட்சி என்ற கோஷம் வடக்கு கிழக்கு இணைந்த பிரதேச சுயாட்சியையே குறிக்கின்றது. இது அக்கட்சியின் பிரதான இலக்கு. இந்த இலக்கை அடைவதற்காக நடைமுறைச் சாத்தியமான வழிகளையே அக்கட்சி பயன்படுத்துகின்றது. அதனாலேயே பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வு முயற்சியின் ஆரம்பப் புள்ளியாக அக்கட்சி ஏற்கின்றது. படிப்படியாக மேலதிக அதிகாரங்களைப் பெற்று இறுதித் தீர்வை அடையும் நடைமுறையைப் பின்பற்றுகின்றது. இது தான் அரசியல் தீர்வை அடைவதற்கு நடைமுறைச் சாத்தியமான பாதை. இந்தப் பாதை தான் தமிழ் மக்களுக்கு விமோசனத்தைக் கொண்டு வரும்.**

வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டியோ பிரதேச சுயாட்சியோ உடனடியாகச் சாத்தியமானதல்ல. அதற்காக அந்த இலக்கைக் கைவி டவும் கூடாது. முதலில் சாத்தியமான தீர்வை ஏற்றுக் கொண்டு படிப்படியாக இலக்கை நோக்கி முன்னேற வேண்டும். தென்னிலங்கையில் புலமையாளர்களுடன் கருத்துப் பரிமாறலை மேற்கொள்ளல், சிங்கள மக்கள் மத்தியில் அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமான மனோ நிலையை உருவாக்கும் வகையில் செயற்படுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தென்னிலங்கை அரசியல்வழிச் சமூகத்தில் முழுமையான அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்க முடியும். கூட்டமைப்பு இதற்கு மாறாகவே செயற்படுகின்றது.

சமஷ்டித் தீர்வை ஏற்படுத்துவதற்கான நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டம் எதுவும் கூட்டமைப் பிடம் இல்லை. அரசாங்கம் சமஷ்டித் தீர்வை ஏற்காவிட்டால் சர்வதேசத் தலையீடு இடம்பெறும் என்று சொல்கின்றார்கள். சர்வதேசத் தலை யீடு என்பது ஆறு வருடங்களாகச் சொல்லிச் சொல்லி மக்களை ஏமாற்றிய கதை. மீண்டும் அதே கதையைச் சொல்கின்றார்கள். பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்றுக் கொண்டு படிப்படியாக மேலதிக அதிகாரங்களைப் பெறுங்கள் என்று சர்வதேசம் இவர் களுக்கு ஏற்கனவே சொல்லிவிட்டது.

சமஷ்டித் தீர்வை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குச் சாத்தியமான வழிமுறைகளைப் பின்பற்றாமல் அரசாங்கம் இக்கோரிக்கையை ஏற்க வேண்டும் என்றும் தவறினால் சர்வதேசம் தலையிடும் என்றும் எச்சரிக்கைத் தொனியில் பேசுவது சிங்கள மக்களை ஆத்திரமூட்டி அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலையை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டது. ஆறு வருடங்களாக எந்தக் கோரிக்கையும் இல்லாமல் செய்ததை இப்போது சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்துச் செய்கின்றார்கள்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மாநிலத்தில் சுயாட்சி என்ற கோஷம் வடக்கு கிழக்கு இணைந்த பிரதேச சுயாட்சியையே குறிக்கின்றது. இது அக்கட்சியின் பிரதான இலக்கு. இந்த இலக்கை அடைவதற்காக நடைமுறைச் சாத்தியமான வழிகளையே அக்கட்சி பயன்படுத்துகின்றது. அதனாலேயே பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வு முயற்சியின் ஆரம்பப் புள்ளியாக அக்கட்சி ஏற்கின்றது. படிப்படியாக மேலதிக அதிகாரங்களைப் பெற்று இறுதித் தீர்வை அடையும் நடைமுறையைப் பின்பற்றுகின்றது. இது தான் அரசி யல் தீர்வை அடைவதற்கு நடைமுறைச் சாத்தியமான பாதை. இந்தப் பாதை தான் தமிழ் மக்களுக்கு விமோசனத் தைக் கொண்டு வரும்.

தமிழ் மக்கள் நாளாந்த வாழ்வில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக் கின்றார்கள். அந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு தேவை. அப்பிரச்சினைகள் அனைத்தும் இனப்பிரச்சினையின் பக்க விளைவுகள். எனவே, பிரச்சினை களுக்கான தீர்வில் அக்கறை செலுத்து கின்ற அதே வேளை இனப்பிரச்சினை யின் தீர்வுக்கும் சரியான நடைமுறை யைப் பின்பற்றுகின்ற தலைமையே தமிழ் மக்களின் இன்றைய தேவை.

# நாட்டில் ஏற்பட்டுள்ள நல்லாட்சியை உறுதி செய்வது மக்களின் கடமை

## – ரணில் வேண்டுகோள் –



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நல்லாட்சியை எதிர்வரும் 17ஆம் திகதி உறுதி செய்வது மக்களின் கடமையாகும் என பிரதமர் ரணில விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பதுளை பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த மக்கள் சந்திப்பை ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்ணான்டோ ஏற்பாடு செய்திருந்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்சவை அசைக்க முடியாதென கூறிய சந்தர்ப்பத்தில், ஹரின் பெர்ணான்டோ மிகப்பெரிய அர்ப்பணிப்பொன்றை செய்து ராஜபக்ஷ ஆட்சியை துரத்தியடித்தார்.

இந்தச் சேவையை செய்த பதுளை மாவட்டத்தை நான் மறக்க மாட்டேன். பதுளை மாவட்டத்தில் விசேட அபிவிருத்திகளை மேற்கொள்ளவுள்ளேன்.

மகிந்த ராஜபக்ச பதுளை மாவட்டத்தில் வெற்றி பெறுவதற்கு முழு அதிகாரத்தையும் பயன்படுத்தினார். மகிந்த ராஜபக்ஷ பயத்தினாலே ஜனாதிபதி தேர்தல் ஒன்றை அறிவித்தார்.

இதன் போது நாங்கள் பொது வேட்பாளர் ஒருவரை நியமித்தோம். நான் அனைவரும் ஒன்றாக இணைந்தோம். பதுளையில் தான் எங்கள் வெற்றிக்கான பயணத்தை ஆரம்பித்தோம். நாங்கள் நல்லாட்சி ஒன்றை உருவாக்கினோம். நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தினோம். எண்ணெய் விலையை குறைத்தோம். அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்தோம்.

சம்பளங்களை அதிகரித்தோம. நாங்கள் கேட்டது 100 நாட்கள் மாத்திரம். தற்போது 100 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இந்த 100 நாட்களில் நல்லாட்சியும் சுதந்திரமும் ஏற்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் 17ஆம் திகதி இந்த நல்லாட்சியை உறுதி செய்யுமாறு நான் மக்களிடம் கேட்டு கொள்கிறேன். 60 மாதங்களில் புதிய நாட்டை உருவாக்குமாறும் மக்களிடம் கேட்டு கொள்வதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியினர் மோதல்

பொலனறுவை கதுருவெல பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் இடம் பெற்ற மோதலில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

பிரதமர் ரணில் தலைமையில் பொலனறுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், பொலனறுவை மாவட்ட வேட்பாளர் வசந்த சேனாநாயக்க உரையாற்றும்போது அங்கிருந்தவர்கள் அவருக்கு எதிராக கோஷமிட்டுள்ளனர்.

இந்நிலையில் கட்சி ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதலில் இரு ஆண்களும் பெண் ஒருவரும் காயமடைந்து பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் ரணில் அங்கிருந்து சென்ற சில நிமிடங்களின் பின்னரே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# வேகக்கட்டுப்பாட்டு இடங்களில் வேகமாகச்சென்றால் வழக்கு

(கொழும்பு)

"வேகக் கட்டுப்பாட்டு எல்லைகள்" காட்சிப்படுத்தப்பட்டுள்ள வீதிகளில் அதிக வேகத்துடன் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக நேற்று முதல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் சில வீதிகளில் வேகக் கட்டுப்பாட்டு எல்லைகள் பொறிக்கப்பட்ட பதாதைகளை காட்சிப்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த வேகக் கட்டுப்பாடுகளை மீறும் வகையில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு உடனடியாக தண்டப் பத்திரம் விநியோகிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல் கால மனிதஉரிமை மீறல் நடவடிக்கை எடுக்க விசேட குழு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் காலப் பகுதியில் மனித உரிமைகள் மீறப்படுமாயின் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

பிரதேச செயலகங்களில் இதற்கான தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிடுகின்றார்.

பொதுத் தேர்தலை, நீதியானதும் சுதந்திரமானதுமாக நடாத்துவதற்காக பல நடவடிக்கைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

வாக்களிப்பு நிலையங்களில் பொலிஸார் உரிய விதத்தில் செயற்பட தவறும் பட்சத்தில் அது தொடர்பில் தலையீடு செய்வதற்காக குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

# தேர்தல் முடியும் வரை வேட்பாளர்களை விசாரணைக்கு அழைக்க வேண்டாம்

## - தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு -



எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தல் முடிவடையும்வரை வேட்பாளர்களை விசாரணைக்கு அழைக்க வேண்டாமென தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர்களுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது, தமது வேட்பாளர்களை நிதிக்குற்ற தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளதாக எதிரணியினர் குற்றஞ்சுமத்தினர்.

இதனையடுத்து தேர்தல் முடிவடையும்வரை வேட்பாளர்களை எவ்வித விசாரணைக்கும் அழைக்க வேண்டாமென நிதிக்குற்ற விசாரணைப் பிரிவிற்கு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். தாம் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக ஐ.ம.சு. முன்னணியின் அம்பாந்தோட்டை வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அத்துடன், கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் விமல் வீரவன்சவையும் நிதிக்குற்ற விசாரணை பிரிவினர் அழைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்

(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)



X 1

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# கல்விக்கான சமவாய்ப்பை அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும்

## - ஜனாதிபதி உறுதி மொழி -



கல்வித்துறையில் உள்ள எல்லாத் தடைகளையும் அகற்றி, நாட்டின் எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்விக்கான சம வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணத்தோடு இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

பொலனறுவை வலயக் கல்வி அலுவலகத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டத் தொகுதியை கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வித்துறை முன்னேற்றத்திற்காக அரசாங்கம் வழங்கும் எல்லா வசதிகளில் இருந்தும் உச்சபட்சம் பிரயோசனத்தைப் பெற்றுக்கொண்டு நாட்டின் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை வழங்குவதற்கு இத்துறையில் உள்ள சகலரும் அர்ப்பணத்துடன் செயற்பட வேண்டும் என்றார்.

பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து கட்டத் தொகுதியை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு குழுமி இருந்த பணிக் குழாமினருடனும் கலந்துரையாடினார்.

"லக்தருதிரிய" புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வும் இங்கு நடைபெற்றதுடன், 10 பிள்ளைகளுக்கு ஜனாதிபதி இந்த புலமைப் பரிசில்களை கையளித்தார். பொலனறுவை மாவட்டத்தில் குறைந்த வருமானங்களைப் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை பிள்ளைகளுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்னால் 2000 ஆம் ஆண்டு தமது முதலாவது அமைச்சு சம்பளத்தை அன்பளிப்புச் செய்து "லக்தருதிரிய" புலமைப் பரிசில் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மதுபானம் தடை

தேர்தல் பிரசாரத்திற்காக மதுபானம் வழங்குவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எச்சரித்துள்ளார். ஊவா, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் மதுபானத்தை விநியோகம் செய்து அரசியல் பிரசாரம் செய்யும் வேட்பாளர்களுக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளேன் என்றார்.

ஜனரஞ்சகத்
தன்மையை
முதன்மைப்
படுத்தி
பக்கம் சாராமல்
துணிச்சலுடன்
தரமான
அம்சங்களை
அள்ளிவரும்
வாரமலர்.

வாரமலர்
தினமுரசு
13.08.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...




- யாழ்ப்பாணம் கூட்டமைப்புக்கு முள்ளிவாய்க்கால்!!
  அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கும் போட்டிக்களம்
- இனப்படுகொலையின் 25 ஆவது ஆண்டு
- அதிகரித்துச் செல்லும் போதைப் பாவனையும் சீரழியும் மக்களும்
- தேசிய இனமும் தேசியமும்



நல்ல மனம் வாழ்க!

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# இராணுவ உணவகங்களால் பொதுமக்கள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

வன்னிப் பிரதேசத்தில் இராணுவத்தினர் நடாத்தும் வர்த்தக நிலையங்களால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் இராணுவத்தினர் மதுபானச்சாலைகளை நடாத்துவதாகவும் காடுகளில் இராணுவம் மதுபான விடுதிகளை அமைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இராணுவத்தினர் மதுபான விடுதிகளை நடாத்துவது எதற்காக என்றும் அது குறித்து மக்கள் மத்தியில் கடுமையான விமர்சனங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை இராணுவத்தினர் நடாத்தும் உணவகங்களால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழ் உணவக உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

வன்னி நகரங்களில் தமிழ் உணவக உரிமையாளர்களுக்கு போட்டி போடுவதுபோல் இராணுவ உணவகங்கள் காணப்படுவதாகவும் சுற்றுலாப் பிரயாணிகளை இலக்கு வைத்தே அவை அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் இராணுவ உணவகங்களை நாடுவதில்லை என்றபோதும் பேருந்து களில் வரும் மக்களை இர்ராணுவ உணவகங்களில் நிறுத்துமாறு இராணுவத்தினர் வற்புறுத்தியுள்ளனர்.

இதனால் சில பேருந்து ஓட்டுனர்கள் இராணுவ உணவகங்களில் பேருந்துகளை நிறுத்துவதாகவும் இதனால் அருகில் உள்ள தமிழ் உணவக உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போரால் பெரும் இழப்புக்களுக்கு முகம் கொடுத்து வாழ்வை மேம்படுத்தும் நோக்குடன் தமது தொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் இராணுவத்தினரின் வர்த்தக நிலையங்கள் தமிழ் வர்த்தகர்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

வன்னியில் உள்ள சில நகரங்களில் உணவகங்கள் மாத்திரமின்றி வீட்டுப் பொருட்கள், சிகை அலங்கரிப்பு நிலையம், தொலை பேசி விற்பனை நிலையம் என பல வர்த்தக நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது.

மக்களின் இயல்பு வாழ்வுக்கும் வாழ்வாதாரத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும் இராணுவ வர்த்தக நடவடிக்கைகளை கட்டுபபடுத்த வேண்டும் என்று மக்கள் கருதுகின்றனர்.

வன்னி இயக்கச்சியில் இராணுவத்தினர நடாத்தும் உணவகம் ஒன்று உள்ளது.

அங்கு பொதுமக்கள் பயணம் செய்த பேருந்து ஒன்று அவ்விடத்தில் நிறுத்தப்பட்ட போது பெருமளவான மக்கள் உணவகத்திற்குச் செல்லாமல் பேருந்துக்குள் இருந்ததாக கூறபபடுகின்றது.

அத்துடன் மிகவும் கிட்டிய தூரப் பயணங்களில் ஈடுபடும் பேருந்துகளை நிறுத்துவது தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வட பிராந்திய போக்குவரத்துச் சபை அருள் மிகு ஸ்ரீ ஞான வைரவர் கோவில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது. 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு கர்மாரம்பமும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பும் அடுத்த நாள் வெள்ளிக் கிழமை காலை 8 மணிமுதல் 09.30 மணி வரையான முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகம் சிவஸ்ரீ தி.சோமநாதக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன். நல்லை ஆதீன சிவாச்சாரியார் சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் சர்வபோதகம் ஆற்றுகின்றார். (இ)

# ருது சாந்தி விழா

சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம்பதியுறை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான ருதுசாந்தி விழா எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. ஆடிப்பூர நன்னாளில் அபிசேக ஆராதனையுடன் ருதுசாந்தி விழா இடம் பெறவுள்ளது. அபிஷேகம் விசேட பூசை ருது சாந்தி விழா திரு வூஞ்சல் வழிபாடு இடம்பெற்று அம்பாளுக்கு பாத காணிக்கை வழங்கும் வைபவத்துடன் மகேஸ்வர பூசையும் இடம் பெற்று மாலை விசேட பூசையுடன் வீதியுலா என்பன இடம்பெறவுள்ளது. (இ)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



இராமநாதன் ஐங்கரன்

(ஈ.பி.டி.பி.'வலிகாமம் கிழக்கு இணைப்பாளர்)



X

2

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# இலங்கை - இந்திய அணிகளின் டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை - இந்திய அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி இன்று காலி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. மத்தியூஸ் தலைமையிலான இலங்கை அணியில் சங்கக்கார, திரிமன்னே, சந்திமால், உபுல் தரங்க, குஷல் பெரேரா, ஹேரத போன்ற சிறந்த வீரர்கள் களமிறங்குகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற பாகிஸதானுக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் சொந்த மண்ணில் தொடரை இழந்ததால் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கை அணி இந்தியாவை வீழ்த்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

அத்துடன் இரண்டாவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறும் சங்கக்காரவுக்காக டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என இலங்கை வீரர்கள் போராடுவார்கள்.


விராட் ஹோலியின் தலைமையில் தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய அணியில் காயம் காரணமாக தமிழக வீரர் முரளி விஜய் விளையாடவில்லை. இதனால் தவானுடன், ராகுல் ஆரம்பத் துடுபபாட்ட வீரராக களமிறங்குவார்.

மேலும் இன்றைய போட்டியில் 5 பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்குவதற்கு இந்திய அணி திட்டமிட்டுள்ளது. இதனால 3 ஆவது வீரர் வரிசையில் ரோஹித் ஷர்மா அல்லது புஜாரா ஆகியோரில் ஒருவர் இடம்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்கள் தவிர துடுப்பாட்ட நடுத்தர வரிசையில் ரஹானே மற்றும் விக்கெட் காப்பாளர் விர்த்திமான் சகா ஆகியோர் களமிறங்குவர்.

அத்துடன் அஸ்வின், ஹர்பஜன் சிங், அமித் மிஸ்ரா ஆகிய 3 முன்னணி சுழற்பந்து வீரர்களும், வேகப்பந்து வீச்சில் இஷாந்த் சர்மாவும் இடம் பெறுவார். இந்திய அணிக்கு இலங்கையை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது சவாலான ஒன்றாக கருதப்படுகின்றது. இலங்கை மண்ணில் இந்திய அணி டெஸ்ட் தொடரை வென்று 22 ஆண்டுகள் கடந்துள்ளன.

எனினும் இலங்கை சபைத் தலைவர் அணிக்கு எதிரான 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் இந்திய வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். அத்துடன் பாகிஸ்தான் அணியுடன் அண்மையில் நடைபெற்ற போட்டித் தொடரை இலங்கை இழந்தது. இவ்விரண்டு காரணங்களாலும் தொடரை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையுடனும், ஆவலுடனும் இந்திய அணி காத்திருக்கின்றது.

# டோனிக்கு நீதிமன்றம் அழைப்பாணை



இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் டோனியை, இந்து கடவுளகளில் ஒருவரான விஸ்ணுவை போன்று தோற்றமளிக்கும் வகையில் ஒரு வணிக பத்திரிகையில் அட்டை பக்கத்தில் படம் வெளியானது. அதில் கையில் இருந்தது. இது குறித்து சமூக சேவகர் ஒருவர் கர்நாடக மேல் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த மனு நீதிபதி வேணு கோபால் கவுடா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது நீதிபதி கருத்துத் தெரிவிக்கையில், டோனி போன்ற பிரபலங்களுக்கு மக்களின் மத உணர்வுகள் பாதிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் தெரிந்து இருக்க வேண்டும் விளைவுகள் குறித்து தெரிந்து இருந்தும் இதுபோன்ற விளம்பரங்களில அவர் நடிக்கிறாரா? என்று கேள்வி எழுப்பினார்.

பணத்துக்காக பின்விளைவுகள் பற்றி யோசிக்காமல் விளம்பர ஒப்பந்தங்களில் ஈடுபடுகிறார்கள் என்றும் தெரிவித்தார். டோனி தரப்பில் ஆஜரான வக்கீல், டோனி பணம் வாங்கிக் கொண்டு அந்த விளம்பரத்தில் தோன்றவில்லை என்று குறிப்பிட்டார். வழக்கு விசாரணையை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு தள்ளி வைத்த நீதிபதி, டோனி சார்பில் பதில் மனு தாக்கல் செய்யும்படி உத்தர விட்டார்.

# சானியா மிர்சாவுக்கு அபராதம்



இந்தியாவின் டென்னிஸ் இளவரசி சானியா மிர்சா போக்குவரத்து விதிகளை மீறியதால், ஹைதராபாத் போக்குவரத்து பொலிஸார் அவருக்கு அபராதம் விதித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு, ஹைதராபாத்தின் ஜுப்லி ஹில் பகுதியில் நடாத்தப்பட்ட வாகன சோதனையின் போது போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரிகள் சானியா மிர்சாவின் காரின் நம்பர் தகடு போக்குவரத்து விதிகளை மீறும் வகையில் தவறாக இருப்பதைக் கண்டறிந்தனர். இதனை அடுத்து அவருக்கு ரூபாய் 200 அபராதம் விதிக்கப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சானியா மிர்சா தெலுங்கானாவின் தூதராக செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# ரி - 20 உலக கிண்ண போட்டிகள் நடைபெறும் இடங்கள் அறிவிப்பு

இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான போட்டிகள் நடைபெறும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி ஆரம்பித்து ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத தொடருக்கான போட்டிகள் இந்தியாவின் எட்டு நகரங்களில் இடம்பெறும் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

ரி-20 இறுதிப் போட்டி கொல்கத்தா நகரின் ஈடன் கார்டன் மைதானத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தாவைத் தவிர சென்னை, பெங்களூர், தர்மசாலா, மொஹாலி, மும்பை, நாக்பூர் மற்றும் டில்லியிலுள்ள விளயாட்டு மைதானங்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளன. எனினும், அந்த எட்டு இடங்களிலுமுள்ள விளையாட்டு அரங்குகள் சர்வதேச கிரிக்கெட் சபை மற்றும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆகியவை நிர்ணயித்துள்ள தரம் மற்றும் வசதிகள் கொண்டதாக இருக்க வேண்டும் எனவும் இந்திய கிரிக்கெட் சபையின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான போட்டிகள் எங்கெங்கு நடைபெறும் என்ற அறிவிப்பு வெளியானதை அடுத்து, அந்தப் போட்டிக்கான ஆயத்தப் பணிகள் முழுவீச்சில் தொடங்கப்பட்டுள்ளன என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலர் அனுராக் தாகூர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண போட்டியில், ஆடவர் மற்றும் மகளிருக்கான .போட்டிகள் ஒரே சமயத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



'சொல்லின் செல்வர்'

இரா. செல்வவடிவேல்



X 3

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# நடுக்கள வீரராக களம் இறங்கத் தயார்

## கூறுகிறார் மெஸ்சி



ஆர்ஜென்ரீனா நாட்டின் நட்சத்திர கால்பந்து வீரரான லயோனல் மெஸ்சி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார். சமீபகாலமாக மெஸ்சியின் ஆட்டத்தில் தொய்வு காணப்படுகிறது. முன்கள வீரராக (ஸ்டிரைக்கர்) களம் இறங்கும் மெஸ்சி கோல் அடிக்க திணறுகிறார்.

அந்த அணியின் நெய்மர் மற்றும் சுவாரஸ் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். இந்நிலையில் நான் நடுக்கள வீரராக களமிறங்க தயாராக இருப்பதாக மெஸ்சி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், அணியின் வெற்றிக்கு உதவும் என்றால் நான் எந்தவொரு இடத்திலும் (பின்களம், நடுக்களம், (முன்களம்) களமிறங்க தயாராக இருக்கிறேன். ஒவ்வொரு வீரர்களும் தங்களது கடைசிக் காலகட்டத்தில் இக்கட்டான நிலைக்கு தள்ளப்படுவார்கள். இது எனக்கும் பொருந்தும் என்பது உறுதி. ஆகையால், நான் நடுக்கள வீரராக களமிறங்க தயாராக உள்ளேன். அப்படி விளையாடினால் மைதானத்தில் ஏராளமான இடத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். நடுக்களத்தில் மற்றும் முன்களத்தில் விளையாடினால் மகிழ்ச்சி அடைவேன்' என்றார்.

# வீரர்களின் உடல் நலக்குறைவால் ஒரு நாள் போட்டி ஒத்திவைப்பு

தென்னாபிரிக்கா ஏ மற்றும் அவுஸ்ரேலிய ஏ அணிகளுக்கு இடையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த முத்தரப்பு ஒருநாள் போட்டி தென்னாபிரிக்க வீரர்களுக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

இந்தியா, அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா ஏ அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் சென்னை சேப்பாகம் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் போட்டியில் பங்கேற்றுள்ள தென்னாபிரிக்க அணி வீரர்கள் 6 பேர் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். இவர்களது உடல்நிலை நேற்று வரை முழுமையாக குணமடையாததால் நேற்று நடைபெறவிருந்த அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான போட்டி இன்று புதன்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி இறுதிப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பலாலி விண்மீனை வென்றது வல்வை



(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் 11 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் மாலை 4:30 மணியளவில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வைப் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை.

2 ஆவது பாதி ஆட்டத்தில் விண்மீன் அணி கோல் ஒன்றை போட்டு முன்னிலை வகிக்க ஆட்டம் முடிவடைய 2 நிமிடங்கள் இருக்கும் போது வல்வை அணி அசத்தலான கோல் ஒன்றினைப் பெற்று போட்டியை சமநிலைப்படுத்தினர். இரு அணிகளும் சமநிலையில் இருந்தமையால் நடுவர்களினால் தண்ட உதை மூலம் வெற்றியைத தீர்மானிப்பது என முடிவு செய்யப்பட்டது.

தண்ட உதையில் வல்வை அணி ஒரு கோலினைப் பெற 3:2 என்ற கோல் கணக்கில் வல்வை விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

# பொலிகண்டி பாரதி உதைபந்து நேற்றும் நவஜீவன்ஸ் வெற்றி



(பொலிகண்டி)

பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் போட்டியில் நவஜீவன்ஸ விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

சக்கோட்டை சென்சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. போட்டியின் ஆரம்பம் முதலே நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதிக்கமே காணப்பட்டது.

நவஜீவன்ஸ் தொடர்ந்து கோல்களைப் போட்ட வண்ணம் இருநதது. ஆட்ட நேர முடிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நவஜீவன்ஸ் அணி சார்பாக முன்கள வீரர்களான உஷானந் 2 கோல்களையும், பொபி 1 கோலினையும் பெற்றனர். இப் போட்டியின் சிறந்த வீரன் விருதினை நவஜீவன்ஸ் வீரர் பொபி தட்டிச்சென்றார்.

விளையாட்டுச் செய்திகள்

# றக்பி கிண்ணப் போட்டி திருத்துவ கல்லூரி தெரிவு



14 வயதுக்குட்பட்டவர்களுக்கான 12 பேர் கொண்ட றக்பி கிண்ணப் போட்டிகளின் சம்பியனாக, கண்டி திரித்துவ கல்லூரி அணி தெரிவாகியுள்ளது.

சென். தோமஸ் கல்லூரி அணியை வெற்றிகொண்டே, அவ்வணி சம்பியன் பட்டத்தை வென்றது.

றோயல் விளையாட்டுத் தொகுதியில் இப்போட்டி இடம்பெற்றிருந்தது.

ஆரம்பத்தில் ஆதிக்கம் செலுததியிருந்த சென்.தோமஸ் கல்லூரி அணி, 5-0 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலை வகித்திருந்தது. எனினும், சென்.தோமஸ் அணியின் தவறுகளை திரித்துவ கல்லூரி அணி பயன்படுத்திக் கொண்டது.

தொடர்ச்சியாக 10 புள்ளிகளைப் பெற்ற திரித்துவ கல்லூரி அணி, சென். தோமஸ் அணிக்கு எந்த வித புள்ளிகளையும் விட்டுக் கொடுத்திருக்கவில்லை. இதனடிப்படையில், 10:5 என்ற புள்ளிகள் கணக்கில் திரித்துவ கல்லூரி அணி சம்பியனானது.

இத்தொடருக்கான ஷீல்ட் சம்பியன்களாக பிலியந்தல மத்திய கல்லூரியை 33:0 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்திய நுகேகொட சென்.ஜோண்ஸ் கல்லூரி தெரிவானது. இத்தொடரின் பொவ்ள் சம்பியன்களாக, தர்மராஜ கல்லூரியை 10:2 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்திய வெஸ்லி கல்லூரி அணி தெரிவானதோடு, றோயல் கல்லூரியை 17:0 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்திய கிங்ஸ்வூட் கல்லூரி அணிபிளேட் சம்பியன்களாகவும் தெரிவாகின.

இலங்கை பாடசாலைகள் றக்பிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இத் தொடரில், 25 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தாஜுதீன் றக்பி கிண்ணம் தோமஸ் பாடசாலை வெற்றி



சர்ச்சைக்குரியு முறையில் மரணமான றக்பி வீரரான வசீம் தாஜுதீனின் ஞாபகார்த்தமாக இடம்பெற்ற றக்பிக் கிண்ணப் போட்டியில், சென்.தோமஸ் முதல்நிலைப் பாடசாலையின் பழைய மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். கல்கிஸை சென் தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர்களை வெற்றி கொண்டே அவர்கள் சம்பியன் பட்டம் வென்றனர்.

இரண்டாவது வருடமாக இடம்பெற்ற இத்தொடர், கொழும்பு சி.ஆர் அன்ட் எ்.ப்.சி மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

வசீம் தாஜுதீன் அறக்கட்டளையினால் நடாத்தப்பட்ட இத்தொடர், இரண்டாவது வருடமாக இடம் பெற்றிருந்தது

# தேசிய ரென்னிஸ் வெற்றியுடன் ஆரம்பம்

இடம்பெற்றுவரும் ஜூனியர் தேசிய ரென்னிஸ் சம்பியன் ஷிப் போட்டிகளில், முன்னணி வீர,வீராங்கனைகள் வெற்றியுடன் ஆரம்பித்துள்ளனர்.

18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில், முதல்நிலை வீரராக இத்தொடரை ஆரம்பித்த பி. சுரேன், ஷெயான் கருணாரத்னவுக்கெதிரான போட்டியில், 6:4, 6:3 என்ற செட் கணக்கில் இலகுவான வெற்றியுடன் தொடரை ஆரம்பித்தார். 16, 18 வயதுக்குடபட்ட பிரிவுகளுக்கான பெண்கள் பிரிவில், இத்தொடருக்கான முதல்நிலை வீராங்கனையாகவுள்ள மெதிரா சமரசிங்க, 18 வயதுப் பிரிவில் பமொடா ஜெயசேகரவை வீழ்த்தியதோடு, 16 வயதுப் பிரிவில், செனுரியை 6:0, 6:0 என்ற செட் கணக்கில் மிக இலகுவாக வீழ்த்தினார்.

ஆண்களுக்கான 18 வயதுப் பிரிவில் இரண்டாம் நிலை வீரர அனிஷ் விஜேசிங்கவும் வெற்றி பெற்றார். ஆனால், 6 ஆம் நிலை வீரரான அமந்த குணசிங்க, இந்துஜன் செல்வரட்ணராஜாவிடம் தோல்வியடைந்து வெளியேறினார். 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் அவிநத பெரேரா, விகும் ஜெயசூரிய, சவித் வீரசிங்க ஆகியோரும், பெண்கள் பிரிவில் நெத்மி வடுகேயும் வெற்றிபெற்ற ஏனையோராவர்.

14 வயதுப் பிரிவில் முதல் நிலையிலும் 16 வயதுப் பிரிவில் இரண்டாம் நிலையிலும் தரப்படுத்தப்பட்டுள்ள அனிகா செனவிரத்ன, தனது இரண்டு வயதுப பிரிவுப் போட்டிகளிலும் மிகச் சிறப்பான வெற்றிகளைப் பெற்றார்.

14 வயதுப் பிரிவில் வொனாராடி அல்விஸ், 16 வயதுப் பிரிவில் செனிதி வீரசேகர ஆகியோரை எதிர்கொண்ட அவர், இரண்டு போட்டிகளிலும் 6:0, 6:0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.




# தமிழ்க் கட்சிகளின் வாக்கு யுத்தம்

- என்.கே. அஷோக்பரன் கட்டுரையிலிருந்து.

ஐ.நா. யுத்தக் குற்ற விசாரணைகள் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பிலும், இலங்கையின் பெரும் பான்மைத் தேசியக் கட்சிகளுடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணக்கப் போக்குப் பற்றியும் பாரிய விமர்சனங்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூகோள அரசியலை தமிழ் மக்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்த வில்லை. அவ்வாறு பயன்படுத்தியிருந்தால் தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கும் என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வாதம்.

இந்தியா மற்றும் மேற்கு நாடுகளைப் பொறுத்தவரையில் சீன-சார்பு நிலைகொண்ட மகிந்த ராஜபக்ஷவினுடைய ஆட்சியை மாற்ற வேண்டிய தேவை அவைக்கு இருந்ததாகவும், அப்படி ஓர் ஆட்சி மாற்றம் நிகழ தமிழ் மக்களின் வாக்குகள் அத்தியாவசியமானதாக இருந்தது எனவும், தமிழ் மக்களின் வாக்கு களின்றி ஜனவரி 8 மாற்றம் நிகழ்ந்திருக்காது எனவும், இது தமிழ் மக்கள் சர்வதேச சக்திகளுடன் பேரம் பேசுவதற்கு கிடைத்த பொன்னான வாய்ப்பு எனவும்,. இந்தச் சந்தர்ப்பத்தை பேரம் பேசும் வாய்ப்பாகப் பயன்படுத்தி, தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்வதை விடுத்து, எந்த நிபந்தனையுமின்றி மைத்திரிபால



சிறிசேனவை ஆதரித்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியமை தமிழ் தேசியக் கூட்டமைப்பு விட்ட பெரும் பிழை என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வாதிடுகிறது.

ஆனால், ஒருவேளை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு குறித்த பேரத்தைச் செய்திருப்பின் அது வெற்றிகரமான தொன்றாக இருந்திருக்குமா என்பதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் கூட உறுதிபடச் சொல்ல முடியாது. மேலும், அப்படி ஒரு பேரத்துக்காக தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுக்கக் கூடிய சக்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டா என்பதும் ஐயத்துக்குரியதே.

ஒருவேளை தமிழ் மக்கள் வாக்களிக்காது விட்டு ராஜபக்ஷவின் ஆட்சி தொடர்ந்தால், அதன் பின் சர்வதேசத்தினதோ, எதிர்க்கட்சிகளினதோ ஆதரவை எப்படிப் பெறுவது? சர்வதேச சக்திகள் அத்தகையதொரு பேரத்தை எவ்வளவு தூரம் சாத்தியமாக்கியிருக்கும் என்பனவெல்லாம் நிச்சயமற்றவை.

ஆனாலும் இந்த நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாகவோ, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவது தொடர்பாகவோ எந்தவித உறுதிமொழியையும் வழங்காத ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த வெளிப்படையான நிபந்தனையுமின்றி ஆதரவளித்தது ஏன் என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கேள்வியில் நியாயமிருக்கலாம். அதற்கானதொரு விளக்கத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறையும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி ஆட்சியைக் கோருகிறது. ஆனால், மத்தியில் ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புடைய ஐக்கிய தேசியக் கட்சியோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ சமஷ்டியை ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஐ.தே.க. தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்பதை வெளிப்படையாகவே அறிவித்துவிட்டார்.

இந்நிலையில் தம்முடைய சமஷ்டிக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்விதம் சாத்தியமாக்கப் போகிறது? அல்லது அது வெறும் தேர்தல் விஞ்ஞாபன வாக்கியமாகவே மறைந்துவிடுமோ? போன்ற கேள்விகள் தமிழ் வாக்காளர்களிடம் இல்லாமல் இல்லை.

மேலும் தமிழ்க் கட்சிகளிடையேயான தேர்தல் பிரசாரமானது, இம்முறை கொள்கைசார், அறிவுசார் வாதம் என்பதைத் தாண்டி தனிமனிதத் தாக்குதல்கள், இழிவுபடுத்தல்கள் என மிகக் கேவலமானதொரு நிலையை எட்டியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக சமூக ஊடக வெளியில் இந்த மூன்றாந்தரப் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது வெட்கத்தை மட்டுமல்ல, கவலையை யும் தருகிறது. கடந்த ஐந்தாறு தசாப்தங்களாக துயரத்தையே அனுபவித்த ஓர் இனத்தின் பிரதிநிதி களாகப் போகிறவர்கள் இத்தகைய இழிவான பிரசாரத்தை செய்துதான் அவ்வினத்தை பிரதிநிதித்துவப்படுத்தப் போகிறார்கள் என்றால் அது அந்த இனத்துக்கே இழுக்காகும்.

இந்தப் பொதுத் தேர்தலைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் வழங்கவுள்ள தீர்ப்பானது இலங்கையரசுக்கும், சர்வதேசத்துக்கும் மட்டுமல்ல தமிழ்க் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் வழங்கும் தீர்ப்பாக அமையப் போகிறது. தமிழ்க் கட்சிகள் மட்டுமல்ல சகல அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

ஒரு தேர்தலின் வெற்றி என்பது அதிகபட்சமாக 5 வருடகாலமே உயிர்வாழும். மக்களை ஏமாற்ற, ஏமாற்ற உங்களுடைய பலம் வீழ்ந்து கொண்டே இருக்கும். அடுத்த தேர் தலிலே நீங்கள் தோல்வியடையாவிடி னும், நீங்கள் முன்னர் கொண்டிருந்த பலத்தின் வலு குறையத் தொடங்கியிருக்கும். அது தொடர்ந்து குறைந்து கொண்டுமிருக்கும்.

---

# சின்னச் சின்ன...

## லத்தீன் அமெரிக்க நாவல்

உலகப் புகழ்பெற்ற பெரு நாட்டு எழுத்தாளரான மரியோ வர்காஸ் ல்லோஸா சமீபத்தில் ஒரு புத்தகத்தை வெளியிட்டி ருக்கிறார். அது ஒரு துப்பறி யும் நாவலை ஒத்த அமைப்புக் கொண்டது என்றாலும், பெருவின் சமூக அடுக்குகள் பற்றியும், அந்நாட்டில் நிலவும் பற்பல ஊழல்களைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. புது அமைப்பிலான அந்த நாவலின் பெயர் Discreet Hero. காப்ரியெல் கார்ஸியா மார்க்கெஸ் அளவு உலகப் பிரசித்தம் பெறாவிட்டாலும், லத்தீன் அமெரிக்கப் புனைவு களைப் பற்றித் தெரிந்தவர் களுக்கு ல்லோஸாவை நிச்சயம் தெரிந்திருக்கும். அந்த அளவு பிரசித்தி பெற்ற வரே. இவரும் ஃப்ளாபேர் பற்றியும், மாடம் போவரி பற்றியும் தனியாக ஒரு புத்த கமே எழுதி இருக்கிறார்.


## சிறந்த நாவலாசிரியராவதற்கு...

சிறந்த நாவலாசிரியரா வதற்கு அடிப்படையான தகுதிகள் என்னவென்று நோபல் பரிசு பெற்ற வில்லியம் ஃபோக்னர் என்ற நாவலாசிரியரைக் கேட்டதற்கு அவர் சொன்ன பதில்:

"90 சதவீதம் உழைப்பு. 90 சதவீதம் திறமை. 99 சதவீதம் இடைவிடாது எழுதிக்கொண்டே இருப்பது; சம காலத்து எழுத்தாளர்களைவிட நன்றாக எழுதுவதாக எண்ணி திருப்தி அடையாமல் இருப்பது".

## வரலாற்றின் முடிவு

தீபம் நா. பார்த்தசாரதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் போது தன் வாழ்க்கை வர லாற்றை எழுதத் துவங்கினார்.











ஓர் அத்தியாயத்தை எழுதி முடித்து, இரண்டாவது அத்தியாயத்தை எழுதத் தொடங்கினார். அதை முடிக்கும் முன்னே தீபம், தீபமாகி விட்டார்.

## நாற்பது இலட்சம் விற்பனை

"மேற்கு முனையில் ஒரு பரிபூரண அமைதி" என்ற நூலை எழுதியவர் "எரிச் ரிமார்க்" என்பவர், அதை ஒரு பதிப்பகத்து உரிமை யாளரிடம் கொண்டுபோய் கொடுக்க, அவர் அதைப் படித்துக்கூடப் பார்க்காமல் பதிப்பிக்க மறுத்துவிட்டார். ஏமாற்றமடைந்த "எரிச் ரிமார்க்" அதை எரியும் நெருப்பில் தூக்கிப்போட, பாய்ந்து தடுத்து விட்டார் அவரது மனைவி. பின்னர் அந்தப் புத்தகம் நாற்பது லட்சம் பிரதிகள் விற்று சாதனை படைத்தது.

## பதினாறாவது பதிப்பகம்

விஞ்ஞானக் கற்பனைகளை ஆதாரமாக வைத்து முதன் முதலில் நாவல் எழுதியவர் ஜூல்வெர்னி. இவர் எழுதிய முதல் நாவலை வெளியிட எந்தப் பதிப்பகமும் முன்வர வில்லை. பதினைந்து பதிப்பகங்கள் இவர் நாவலை நிராகரித்தன. பதினாறாவது பதிப்பகம் இவர் நாவலை வெளியிட்டதும் அதன் விற் பனை அதிகமாக இருந்தது. பிரெஞ்சு எழுத்தாளரான அவர் கதவைச் சாத்திக்கொண்டு மணிக்கணக்கில் யோசிப்பார். பல மணி நேரம் சிந்தித்த பின் இரண்டு வரிதான் எழுதுவார். ஒரு நாவலை எழுதி முடிக்க ஐந்து ஆண்டு கள் எடுத்துக் கொள்வாராம்.

## முதல் பெண் புனைபெயர்

ஆண் எழுத்தாளர்கள், பெண் பெயரில் கதை எழுது வது இப்போது சாதாரணம். ஆனால், இந்த வழக்கத்துக்கு முன்னோடி வ.வே.சு அய்யர். அவருடைய முதல் சிறுகதை, "குளத்தங்கரை அரசமரம்" (தமிழின் முதல் சிறுகதையும் இதுவே) 1915 இல் "விவேக போதினி" பத்திரிகையில் வெளிவந்தது. எப்படி? சு.பாக்கிய லட்சுமி அம்மாள்" என்ற பெயரில்! (வ.வே.சு அய்யரின் மனைவி பெயர் அது)

## புதிது படைத்தவர்

இன்று பலரும் பயன் படுத்தும் "புரட்சி", "பொது வுடைமை" ஆகிய சொற்களை உண்டாக்கியவர் மகாகவி பாரதியார்தான். "புதிய ருஷ்யா" என்ற கவிதையில், "ஆகாவென்றெழுந்தது பார் "யுகப் புரட்சி" என்றும், "பாரத சமுதாயம்" என்ற கவிதையில் "முப்பது கோடி சனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடமை" என்றும் முதன்முதலாகப் பயன்படுத்தி இருக்கிறார்.


## பாதித்த இந்தியக் காட்சி!

ஆக்ராவின் தாஜ்மகாலோ, காசியின் ஸ்நான கட்டங் களோ, மதுரைக் கோவிலின் கோபுரமோ, திருவனந்தபுரத்து மேற்குத் தொடர்ச்சி மலை களோ என்னுடைய மனத்தில் எவ்வுணர்ச்சியையும் உண்டாக் கவில்லை. என்னை இந்தியா வில் சலனமடையச் செய்தது இந்தியாவின் விவசாயி தான். உலர்ந்த வற்றல் போன்ற உடலின் நிர்வா ணத்தை அரையிலுள்ள கந்தலாடையினால் மறைத்துக் கொண்டு வேலை செய்யும் விவசாயிதான் நான் இந்தியா வில் கண்ட நினைவை விட்டகலாத காட்சி.

காலைக் கடுங்குளிரில் நடுங்கிக் கொண்டும், மத்தியான வெயிலில் வெந்து வியர்த்துக் கொண்டும், சூரியன் மலை வாயிலில் மறையும் போதும் வேலை செய்கின்ற, பரந்த உபகண்டத்தின் வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வழிவழியாக அரை வயிற்றுக் கஞ்சிக்காக உழைக்கும் உழவனே என்னைப் பாதித்த இந்தியக் காட்சி என்று தன் "ஸம்மிங் அப்" நூலில் எழுதினார், உலகப்புகழ் பெற்ற எழுத்தாளர் ஸோமர்செட் மாம்.

# இறப்பைச் சொல்லும் இணையத்தளம்!

40 வயதைத் தாண்டியவர்களின் உடல், மனநிலையை ஆய்வு செய்து, அவர்கள் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இறந்து விடுவார்களா? உயிரோடு இருப்பார்களா? என்று சொல்கிறது ஓர் இணையத்தளம் (www.ubble.co.uk).




இந்த இணையத்தளத்தில் ஆண்களிடம் 11 கேள்விகளும், பெண்களிடம் 13 கேள்விகளும் கேட்கப்படுகின்றன. அந்தக் கேள்விகளுக்கு அளிக்கும் பதில்களின் தன்மைக்கேற்ப 5 ஆண்டுகளில் இறப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா? இல்லையா? என்று சொல்லிவிடுகிறது.

உங்களுக்கு இரத்த அழுத்தம், இதய நோய், நீரிழிவு வியாதி உள்ளதா? உங்களுக்கு மிகவும் நெருக்கமான உறவினர் கடந்த இரண்டு ஆண்டுகளில் இறந்துவிட்டார்களா? குடும்ப வாழ்க்கை எப்படி உள்ளது? நடைப்பயிற்சி செய்வீர்களா? புகை பிடிக்கும் பழக்கம் உள்ளதா? - இப்படி கேள்விகள் கேட்கப்படுகின்றன.

இதில் ஒருவர் சொன்ன பதில்களை வைத்து, இதே போன்று பதில் சொன்னவர்களில் 100 இல் எத்தனை பேர் இறந்துவிட்டார்கள்? என்ற தகவல்களையும் சொல்லிவிடுகிறது. இறப்பைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே இயலாத செயல். என்றாலும், கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கலாம் அல்லவா?

# புத்திசாலிக் கிளி



ஆபிரிக்கக் கிளி ஒன்றைக் கூண்டினுள் வைத்து ஒருவர் வளர்த்து வந்தார். ஒரு முறை அவர் ஆபிரிக்கா செல்லும். போது கிளி, "என் ஜோடிக்கிளி அங்கிருக்கும். அதனிடம் நான் இங்கு கூண்டில் அடைபட்டிருப் பதாகச் சொல்லுங்கள்" என்றது.

அவரும் தன் வேலை முடிந்த பின் காட்டில் தனியாக இருந்த அந்தக் கிளியைக் கண்டு விபரத்தை சொன்னார். அது உடனே கண்ணீர் வடித்துக் கீழே சுருண்டு விழுந்து விட்டது.

"அடடா, இந்தக் கிளி இறந்ததற்கு நாம் காரணமாகி விட்டோமே" என்று வருத்தப்பட்டு ஊருக்கு வந்து கூண்டுக் கிளியிடம் விபரத்தைச் சொன்னார்.

இதைக் கேட்ட அந்தக் கிளியும் கண்ணீர் வடித்துக் கூண்டினுள்ளேயே விழுந்து விட்டது.

"நம்மால், இந்தக் கிளியும் அநியாயமாய் இறந்து போய்விட்டதே" என்ற வருத்தத்துடன் கூண்டைத் திறந்தார்.

உடனே அந்தக் கிளி அங்கிருந்து வெளியேறிப் பறந்து போய் பக்கத்திலிருந்த மரக்கிளையில் அமர்ந்தது. உடனே அவர், "உன் ஜோடிக்கிளி இறந்தது தெரிந்தும் நீ என்னிடம் நடித்துத் தப்பி விட்டாயே!" என்றார்.

அதற்கு அக்கிளி, "என் ஜோடிக் கிளியும் இறக்கவில்லை. கூண்டில் அடைபட்ட நான் தப்பிக்கும் வழியை உங்களிடமே அது சொல்லி அனுப்பியிருக்கிறது" என்று கூறி விட்டுத் தன் ஜோடிக்கிளியைத் தேடிப் பறந்து சென்றது.

# சினிமாவின் கலை: பாகுபலியை முன்வைத்து

- சாரு நிவேதிதா 3


அகிரா குரஸவா, ஜப்பானின் மிகச் சிறந்த இயக்குனர்களில் ஒருவர். 1950ஆம் ஆண்டு வெளிவந்த ரஷோமான் என்ற படத்தின் மூலம் உலகப் புகழ் அடைந்தார். அந்த வெற்றியைத் தொடர்ந்து, 1965 வரை அவர் ஆண்டுக்கு ஒரு படம் என்று எடுத்தார். சரியாகச் சொன்னால், அந்தப் பதினைந்து ஆண்டுகளில் பன்னிரண்டு படங்களை இயக்கினார் குரஸவா. பின்னர் 1975இல், அவர் ஷேக்ஸ்பியரின் லியர் மன்னன் கதையை அடிப்படையாகக் கொண்டு ஒரு படம் எடுக்க விரும்புவதாக அறிவித்தார். அந்தப் படத்துக்கான பணம் அவருக்குக் கிடைக்க பத்து ஆண்டுகள் ஆயிற்று. உலகப் புகழ் பெற்ற இயக்குனருக்கு அந்தக் கதி. அதிலும், பல ஹொலிவுட் படங்கள் அவருடைய படங்களைத் தழுவி அல்லது அவரது பாணியில் எடுக்கப்பட்டவை. அவருடைய Seven Samurai (1954) தான் ஹொலிவுட்டின் Magnificent Seven (1960); குரஸவாவின் Hidden Fortress (1958) தான். ஹொலிவுட்டின் ஸ்டார் வோர்ஸ் (1977). அதேபோல், க்ளிண்ட் ஈஸ்ட்வுட்டின் இரண்டு படங்கள் குரொஸவாவின் படங்களைத் தழுவி எடுக்கப்பட்டவை. ஆனால், குரஸவா தனது படங்களுக்கான கதைகளை ஷேக்ஸ்பியரிலிருந்தும், தஸ்தயேவ்ஸ்கியிடமிருந்தும் எடுத்துக்கொண்டார்.

இப்படியாக ஹொலிவுட்டின் பிரம்மாண்டமான வரலாற்றுப் படங்களுக்கு அகிரா குரஸவாவின் படங்கள் தூண்டுதலாகவும் வழிகாட்டியாகவும் இருந்தன. குரஸவா, இந்தியாவில் பிரபலமாக இருப்பதன் காரணமும் அதுதான். பின்னர் 1985 இல் குரஸவா எடுக்க விரும்பிய லியர் படத்துக்கான பணம் கிடைத்தது. அப்போது அவர் வயது 75. Ran (குழப்பம்) என்ற அந்தப் படம் 60 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டபோது, அன்றைய தினம் (1985) ஜப்பானில் அதிக செலவில் எடுக்கப்பட்ட படம் அதுதான். அந்தக் காரணத்தினால்தான், பாகுபலியைப் பார்த்தபோது எனக்கு Ran ஞாபகம் வந்தது. ஆனால், இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் கலைக்கும் சந்தைப் பொருளுக்கும் உள்ள வித்தியாசத்தைப் போன்றது.

Ran படத்தைப் பார்த்து சுமார் 25 ஆண்டுகள் இருக்கும். அதில் வரும் ஒரு காட்சி இன்றளவும் மனத்தில் நிற்கிறது. அரசன் தன்னுடைய பிள்ளைகளால் விரட்டப்பட்டு தெருவுக்கு வந்துவிடுகிறான். அப்போது, ஒரு காட்டில் குருடன் ஒருவனைச் சந்திக்கிறான். அந்தக் குருடன், ஒரு காலத்தில் அரசனாக இருந்தவன். மற்றொரு அரசனால் தோற்கடிக்கப்பட்டு காட்டுக்கு வந்து வசிக்கிறான். அவனைத் தோற்கடித்த அரசன் மிகவும் குரூரமானவன். அவனுடைய இரண்டு கண்களையும் தோண்டிவிடுகிறான். காட்டில் அந்தக் குருடனின் சந்தோஷம் ஒன்றே ஒன்றுதான். அவனுடைய சகோதரி அவனுக்குக் கொடுத்திருந்த ஒரு புல்லாங்குழல். தன்னிடம் வந்திருப்பவன் பேரரசன் ஹிடட்டோரா என்பது குருடனுக்குத் தெரிந்துவிடுகிறது. அப்போது அவன், "அரசே, தங்களுக்கு இந்தப் பிச்சைக்காரன் தருவதற்கு இந்தப் புல்லாங்குழலின் இசை தவிர இங்கே வேறு எதுவும் இல்லை" என்று சொல்லிவிட்டு ஒரு அற்புதமான பாடலை அதில் வாசிக்கிறான். பிறகு ஹிடட்டோரா அவனைப் பற்றி விசாரிக்கும்போது, அவனுடைய கண்களைக் குருடாக்கியவன் தான் தான் என்று தெரிகிறது. "உன் கண்களைக் குருடாக்கிய என்னை நீ வெறுக்கவில்லையா?" என்று கேட்கிறான் ஹிடட்டோரா. அப்போது அந்தக் குருடன் ஒரு அற்புதமான பதிலைச் சொல்கிறான். அந்தப் பதிலுக்காகவே நீங்கள் சுயமெ படத்தைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். Ethos என்று நான் திரும்பத் திரும்பச் சொல்வது அதுதான். அது வெறும் வசனத்தால் வருவது அல்ல. தர்ஸனத்தால் வருவது.

குரஸவாவைக்கூட விட்டுவிடுவோம். அவர் ஒரு மேதை. Lord of the Rings-ஐ எடுத்துக்கொண்டாலும், அதிலிருந்தும்கூட ராஜமௌலி எதையுமே கற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அந்தப் படத்தில் ஒவ்வொரு தருணமும் மனிதனின் அடிப்படை உணர்வுகளும், மேன்மையான மதிப்பீடுகளும் பலவித உணர்வுகளால் கொந்தளித்துக் குமுறுவதைக் காண்கிறோம். தேவதை உலகைச் சேர்ந்த ஆர்வன் என்ற பெண், மனிதனான அரகோனைக் காதலிக்கிறாள். அப்போது ஆர்வனின் தந்தை அவளிடம், "மரணம் என்றால் உனக்கு என்ன என்று தெரியாது; மனிதர்களின் உலகம் மரணத்தினால் சூழ்ந்தது; ஒரு கட்டத்தில் அவர்கள் அழிந்துவிடுவார்கள்; மரணத்தின் துயரம் உனக்குத் தெரியாது; அவனை மறந்துவிடு" என்று எச்சரிக்கும்போது, அவள் கூறும் பதில் ஒரு உதாரணம். ஆனால், இப்படிப்பட்ட தருணங்கள் பாகுபலியில் இல்லவே இல்லை என்பதோடு, படு சாதாரணமான மொக்கை தெலுங்குப் படத்தைப் போலவே உருவாக்கப்பட்டிருக்கின்றன, கதையும் காட்சிகளும். அதிலும், சமீபகாலத்தில் நாஸருக்கு ஏன் எல்லாப் படங்களிலும் அந்தத் தொங்கு மீசையை ஒட்டவைத்து நம்மைப் படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை. காவியத் தலைவனில் தொடங்கிய சோகம், உத்தம வில்லனில் தொடர்ந்து இப்போது பாகுபலியிலும் தொங்குகிறது. தேர்ந்த நடிகர்களான நாஸரும் ரோகினியும் இடம் பெறும் காட்சிகள், பள்ளிக்கூட ட்ராமாக்களை ஞாபகப்படுத்துவதுபோல் இருப்பதற்குக் காரணம், இயக்குனரிடம் கலை முதிர்ச்சி இல்லை என்பதுதான்.

கம்ப்யூட்டர் கிரா∴பிக்ஸ் என்ற தொழில்நுட்பத்தை எடுத்துக்கொண்டால், அதிலும் ஏமாற்றமே மிஞ்சுகிறது. அரண்மனைகள் எல்லாம் ஏதோ நெருப்புப் பெட்டிகளை அடுக்கியது போன்ற தோற்றத்தைத் தருகின்றன. எல்லோருக்கும் பளபளா வண்ணங்களில் ஆடைகள். வரலாற்றுப் படத்துக்கான



ஹீரோ என்றால் ஆறேகால் அடி உயரமும் ஆஜானுபாகுவான தோற்றமும் இருந்தால் போதும் என்று நினைத்துவிட்டார்கள்போல் தெரிகிறது. பிரபாஸின் முகத்தில் உணர்ச்சிகளே தெரியவில்லை. லோர்ட் ஓ∴ப் தெ ரிங்க்ஸில் மரங்கள்கூட நன்றாக நடித்திருந்தன.

ஒரு நல்ல படத்துக்கு பட்ஜெட் மட்டும் போதாது; கலா சிருஷ்டியும் வேண்டும் என்பதே பாகுபலி உணர்த்தும் உண்மை. சரி, கலை உணர்வை எப்படிப் பெறுவது? மிகவும் சுல்பம். இலக்கியம் பயில வேண்டும்.

## முரசின் இன்றைய பலன்

(12.08.2015 புதன்கிழமை)

மன்மத வருஷம் ஆடி மாதம் 27 ஆம் திகதி.
திரயோதசி திதி. சித்த யோகம்.
புனர் பூச நட்சத்திரம் முன்னிரவு 11.31 வரை. பின் பூசம்.
இராகு காலம 12.04 - 01.34 வரை. சுபநேரம 04.34 - 06.04 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – நம்பகம் மற்றும் திகதிகளைக் கவனித்து கொள்வனவு செய் யுங்கள்.

**ரிஷபம்** – தொழில் நிமித்தம் பிரிவினை ஏற்படலாம்.

**மிதுனம்** – நோய் நீங்க சத்திர சிகிச்சை செய்ய முற்படுதல்.

**கடகம்** – தொலைக்காட்சிப் பெட்டிக்கு தற்காலிக மூடுவிழா கல்வி நிமித்தம ஏற்படும்.

**சிம்மம்** – விற்பனைக்காக வீடுவரும் நபர்களில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**மீனம்** – விரிசலடைந்திருந்த சகோதரர் உறவு மீண்டும் ஏற்படல்.

**கன்னி** – பிரயாணவேளையில் ஆவணங்கள் கொணீடு செல்வதை மறக்க வேண்டாம்.

**கும்பம்** – காலக்கெடு முடிந்த பத்திரங்கள் தண்டனையைத் தரலாம்.

**மகரம்** – ஞாபக இழப்பினால் பொருட்களைத் தவற விட்டுவிடலாம்.

**தனுசு** – ஒவ்வாத உணவுப்பண்டங்களினால் தேக நலம் பாதிக்கப்படலாம்.

**விருச்சிகம்** – காசோலைகள் திரும்புவதினால வங்கித்தொடர்பு கேள்விக்குறியாகி விடலாம்.

**துலாம்** – கல்வியில் சாதனை புரிய நணபர் குழாமினை விட்டு நீங்குதல்.

# இரதோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு சந்தண முதலிச்சிபுலம் ஸ்ரீ நடராஜா முருகமூர்த்தி தேவஸ்தான இரதோற்சவப் பெருவிழா நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவம் சிறப்புற இடம்பெறவுள்ளது.

கடந்த புதனன்று ஹோற்சவபெருவிழா ஆரம்பமாகி 9 ஆம் நாளான நாளை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

(இ)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

காணி அமைச்சு காணிப்பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் மாவட்ட நிலையில் உதவிப் பணிப்பாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தகுதியானவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விப ரங்களை ஜுலை 24ஆம் திகதி வர்த்த மானியில் பார்வையிட முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# போலி வாக்குச்சீட்டுடன் கச்சாயில் மூவர் கைது

சாவகச்சேரி, கச்சாய் பகுதியில் போலி வாக்குச் சீட்டுக்களுடன் வாகனத்தில் சென்ற 3 சந்தேக நபர்களை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்ததாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட வாகனத்திலிருந்தே இந்த போலி வாக்குச் சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் தேர்தல் சுவரொட்டிகள் சிலவற்றையும் கைப்பற்றியதாக பொலிஸார் கூறினர்.

வாகனத்தில் ஒலிபெருக்கியை கட்டியவாறு பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, குறித்த வாகனத்தை மறித்த பொலிஸார், அவ்வாகனத்தை சோதனை செய்தபோதே போலி வாக்குச் சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டன. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச மத விழா ஒருங்கிணைப்பு அலுவலகம் திறந்து வைப்பு

(மன்னார்)




மன்னார் மடு திருத்தலத்தில் அமைக்கப்பட்ட அரச மத விழா ஒருங்கிணைப்பு அலுவலகம், நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை, மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ் பிள்ளை, கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.ஆர்.குணவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டு குறித்த அலுவலகத்தினை வைபவ ரீதயாக திறந்து வைத்தனர்.

மடு திருத்தலத்தில் ஜூன் மாதம் 2ஆம் திகதி மற்றும் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஆகிய இரு தினங்களிலும இடம்பெறும் மடு அன்னையின் திருவிழா அரச திருவிழாவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த இரு திருவிழா தொடர்பாக முன் ஆயத்தங்களை மேற்கொள்ளும் ஓர் அலுவலகமாகவே இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது மடு பிரதேச செயலாளர் சத்தியசோதி, மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்ஸிடி மேல், பொலிஸ் அதிகாரிகள், திணைக்களத்தின் தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறவுள்ள மடு அன்னையின் ஆவணித்திருவிழா தொடர்பான முன் ஆயத்தங்கள் தொடர்பில் ஆராயும் அவசர கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# விலங்கு விசர் நோய் தடுப்பு மருந்து வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றல்

யாழ்ப்பாணம், நாவாந்துறை பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பு ஊசி மருந்தை வழங்குவதற்கான திட்டமொன்றை யாழ்.மாநகரசபை நடைமுறைப்படுத்தவுள்ளது.

அதற்கிணங்க இன்று 12 ஆம் திகதி முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் இடங்கள் மற்றும் கால அட்டவணையினை யாழ்மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இன்று காலை நாவாந்துறை ஆசாத்வீதி, நாவலர் வீதியின் முதலாம் 2 ஆம் குறுக்கு தெரு சேமக்காலை கெனடி வீதியிலும், நாளை 13 ஆம் திகதி வசந்தபுரம் சனசமூக நிலையம், மு.ப 09 மணி முதல் 11 மணி வரை ஆசாத் வீதி, பி.ப 2 மணி தொடக்கம் 4 மணி வரை சனசமூக நிலையம் நித்தியஒளி, மு.ப 9 மணி முதல் மு.ப 11 மணி வரை சனசமூக நிலையம் சூரியஒளி,14 ஆம் திகதி 14 ஆம் திகதி மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை சனசமூக நிலையம் சென் நீக்கிலஸ், மு.ப 2 மணி தொடக்கம் 4 மணி வரை கோவில் ஒழுங்கை நாவாந்துறை, 18 ஆம் திகதி மு.ப. 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை காதி அபூபக்கர் வீதி சந்தி நாவாந்துறை, முப 11.30 மணி தொடக்கம் பிப 1 மணி வரை சன சமூக நிலையம் கணணாபுரம், பி.ப 2 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை 1 ஆம், 2ஆம், 3ஆம் குறுக்குத்தெரு கண்ணாபுரம், 19 ஆம் திகதி மு.ப 9 மணி தொடக்கம மு.ப 11 மணி வரை சோலை புரம், 19 ஆம் திகதி மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை கற்குளம் நாவாந்துறை, பிப 2 மணி தொடக்கம் பி.ப 04 மணி வரை வெள்ளாந்தெரு நாவாந்துறை, வீதி, 20 ஆம் திகதி மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை கொட்டடி சன சமூக நிலையம் சீனிவாசகம், மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை சிவன் பண்ணை வீதி, சீனிவாசகம் வீதி சந்தி, மு.ப 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை கோணந்தோட்டம், 21 ஆம் திகதி மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை, மு.ப 11.30 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரை, பி.ப 2 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை மேலதிக பிரதேசங்களிலும் இடம் பெறும்.

## தேர்தல் பிரசார கூட்டத்தில் கல்வீச்சுத் தாக்குதல்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால யாழ்ப்பாணம், மந்துவில் பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு நடாத்தப்பட்ட தேர்தல் பிரசாரத்தின் போது இனந்தெரியா தோரால் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழ எழுச்சிப் பாடல்களை ஒலிக்கவிட்டதை அடுத்தே, பிரசார மேடையை நோக்கி இந்த தாககுதல் நடாத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து, குறித்த தேர்தல் பிரசாரக் கூட்டம் நிறுத்தப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டவர்களிடம் யுவதியொருவர் கேள்விகள் சிலவற்றை எழுப்பியுள்ளார். அக்கேள்விகளுக்கு அவர்களால் பதிலளிக்க முடியாத நிலையில், இங்கிருந்து பிரசாரம் செய்தவர்கள் புறப்பட்டுச் சென்றனர். இதனால், அந்த பிரசாரக் கூட்டமும் இடைநடுவில் நிறுத் தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



பசுபதி சீவரத்தினம்

(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)



X 6

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# வளலாய் இறங்கு துறையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்



(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில், உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து கடந்த மார்ச 13 ஆம் திகதி மீள்குடியேற்றம் செயயப்பட்ட வளலாய் பகுதியின் கடற கரையில் தேங்கியுள்ள கல் மற்றும் மணல் திட்டுக்களை அகற்றி, இறங்கு துறை (வான்) அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

யூ.எஸ்.எய்ட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சேவாலங்கா தன்னார்வத் தொண்டு நிறுவனம் இப்பணிகளை நடைமுறைப்படுத்தி வருவதாக திட்டமேற்பார்வையாளர் ஒருவர் தெரிவித்தார். வளலாய பகுதியில் மூன்று இறங்கு துறைகளும் இடைக்காடு அக்கரை பகுதியில் ஒரு இறங்குதுறையும் யூ.எஸ்.எய்ட் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிகள் கடந்த மாதம் 29ஆம் திகதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கடற கரையில் காணப்பட்ட பாறைகள், மணல்திட்டுக்கள் என்பன கனரக இயந்திரங்களின் உதவியுடன் அகற்றப்பட்டு வருகின்றது.

இவ் இறங்குதுறை பணிகள் நிறைவடைந்தால், இப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 36 மீனவ குடும்பங்கள் நன்மை பெறுவார்கள் என்பதுடன் ஏனைய பகுதிகளில் தற்காலிகமாக மீன்பிடியில் ஈடுபடும் இப்பகுதியில் பூர்வீக மீனவர்கள் மீளக்குடியமர்த்தப்படுவர்.

# கம்பன் படைத்த இலக்கியம் எமது வாழ்விற்கு வழிகோலுவதாகும்

## கொழும்பு கம்பன் கழக நீதியரசர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் இலக்கியங்களுள் தலையாயது கம்பன் படைத்த இராமாயணம் எமது வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அற வழியில் சிறந்த தீர்வினைக்கான உதவும் சிறந்த இலக்கியமாக கம்பராமாயணம் விளங்குகிறது.

இவ்வாறு அகில இலங்கைக கம்பன் கழகம் யாழ்ப்பாணத்தில நடாத்திய கம்பன் விழாவின் முதல் நாள் நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய கொழும்பு கம்பன் கழக பெருந்தலைவர் நீதியரசர் ஜெ.விஸ்வநாதன் குறிப்பிட்டார்.

நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான கம்பன் விழாவில் நீதியரசர் விஸ்வநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில்;

பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரை இரசித்து சுவைத்து படிக்கக் கூடிய காவியம் கம்பராமாயணம். இதனைப் படிக்குந்தோறும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படும். அறம் வெல்லும், பாவம் தோற்கும் என்ற அடிப்படையைக் கூறும் இந்த இலக்கியம் நாம் வாழ்க்கையில் செய்யத்தக்கது எது? செய்யக் கூடாதது எது? என்பதை எமக்கு கற்றுத் தருகிறது.

கம்பனுடைய இராமாயணத்தை மக்களிடையே எடுத்துச் செல்வதற்காக கம்பன் கழகம் கம்பன் விழாக்களில் பட்டிமன்றம், விவாத அரங்கு, வழக்காடு மன்றம் போன்ற நிகழ்வுகளை நடாத்தி வருகிறது. இந்த நிகழ்வுகளின் ஊடாக நாம் கம்பராமாயணத்தை அறிந்து அதில் உள்ள அறக் கருத்துக்களைப் பின்பற்றி வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ள முடியும் என்றார்.

வைத்திய நிபுணர் எஸ்.ரவிராஜ் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வண.ஜே. ஏ.யேசுதாஸ் அடிகள், மௌலவி எஸ்.அப்துல்சமத் ஆகியோர் ஆசியுரையை வழங்கினர். வடக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தொடக்கவுரையை நிகழ்த்தினார். யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் சிறப்புரை நிகழ்த்தினார்.

இராம நாடகக் கீர்த்தனை - பாகம் 2 கொழும்பு. கம்பன் விழா இறுவட்டு என்பன வெளியிடப்பட்டன. இவற்றின் முதற் பிரதிகளை முறையே தினக்குரல நிறுவுனர் எஸ்.பி.சாமி, வைத்திய நிபுணர் வெ.சுதர்சன், கண்டாவளை பிரதேச செயலர் த.முகுநதன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் அற உரைகளில் தலையாயது என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் ஸ்ரீ பிரசாந்தன், ஆறு திருமுருகன், த. சிவகுமாரன், த.இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (10)

# "உயர்தர மாணவர்களுக்கு ஒத்துழைக்கவும்" பொலிஸாரால் துண்டுப்பிரசுரம் விநியோகம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு அவர்களுக்கு எவ்வித அசௌகரியமும் ஏற்படும் வகையில் நடந்துகொள்ள வேண்டாம் என பொலிஸாரால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே இந்த துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 'மாணவர்களின் எதிர் காலத்தை தீர்மானிக்கும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும் தமது கல்விச் செயற்பாட்டை சிறந்த முறையில் மேறகொள்வதற்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தேர்தல் பிரசார கூட்டங்களிலும் ஆலயங்களின் திருவிழாக்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட நேர அளவில் ஒலிபெருக்கிப் பாவனையை பயன்படுத்த வேண்டும். தேர்தல் பிரசாரங்களுக்கான ஒலிபெருக்கிப் பாவனை, நேர அவகாசம் மற்றும் சத்தத்தின் அளவு என்பன பொலிஸாரால் அறிவுறுத்தப்படுகின்றன. இவற்றைக் கருத்திற்கொண்டு செயற்படுமாறு' அந்த துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# வருடாந்த மஹோற்சவம்

(மீசாலை)

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர் வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளன.

20 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.30 மணிக்கு கொடியேற்றமும் 22 ஆம் திகதி இரவு 7 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் 26 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதுடன் ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது.

பகல் திருவிழாக்கள் காலை 9 மணிக்கு ஆரம்பமாதுடன் மாலைத்திருவிழா 6 மணிக்கும் ஆரம்பமாகும்.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள் தலைமையில் வேதாகம சுரபி சிவப் பிரம்ம ஸ்ரீ குமாரஸ்ரீ சிறீகாந்தக் குருக்கள் மஹோற்சவத்தை நடாத்திவைப்பார். (இ)

# ஆயுர் வேதம்

## தவறான உணவு... மலச்சிக்கல்... மஞ்சல் காமாலை...



குழந்தைகளுக்கு காமாலை வருவதற்கு முக்கிய காரணம் ஜீரண சக்திக் குறைவுதான். கடலை எண்ணெய்யில் செய்த பட்சணங்கள், நிலக்கடலை சாப்பிடுவது, வெளிக்கடைகளிலிருந்து வாங்கி வந்து சாப்பிடும் குளிர்ந்த பழ ரசம், ஐஸ்கிரீம் போன்றவற்றாலும் சரிவர ஜீரணிக்கும் திறமையற்றதாக ஈரல் கேடுற்று காமாலை உண்டாகிறது.

ஆரம்ப நிலையில் சிறிது காய்ச்சலும் இருக்கும். சில குழந்தைகளுக்கு ஜீரணமாகாமல் வயிற்றுப்போக்கு பல முறை உண்டாகும். தொடர்ந்து காமாலை ஏற்படும். ஈரல், குலைக்கட்டி முறறிப் போன நிலையிலும் காமாலை உண்டாகும்.

தவறான உணவாலும், மலச்சிக்கலாலும் ஏற்படும் காமாலை நோய்க்கு முதல் சிகிச்சையாக, சூட்டைக் கிளப்பி விடாததாயும், சுகபேதி உண்டாகக் கூடியதாயும் மருந்து கொடுக்க வேண்டும்.

உலர் திராட்சைப் பழம் 25 எடுத்து 500 மில்லி லீற்றர் தணணீர் விட்டு, 125 மில்லி லீற்றர் ஆகும்வரை காய்ச்சி வடிகட்டி சிலதை வேரின் மேலேயுள்ள பட்டையின் சூரணம் நான்கு சிட்டிகை சேர்த்துக் கொடுத்தால் சுகமாக மலமாகி வெளியாகும். சூட்டைக் கிளப்பிவிடாது.

மணத்தக்காளி இலைச்சாற்றை அரைக் கரண்டி முதல் ஒரு கரண்டி கொடுத்தாலும் மலமிளகி வெளியாகும்.

கரிசலாங்கண்ணி இலைகளைக் கொண்டு வந்து கசக்கிச் சாற்றை வேளை ஒன்றுக்கு ஒரு சிறு கரண்டி வீதம் காலையும் மாலையும் சாப்பிடலாம். உடனே குணமாகும்.

சக்கரைப் பூசணிக்காயின் மேல் ஓட்டையும், உள்பஞ்சையும் நீக்கி இடையிலுள்ள பகுதியை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி நன்றாக வேக வைத்துப் பிழிந்த சாறு அரை அவுன்ஸ் (15 மில்லி லீற்றர்) எடுத்து சீனாக் கற்கண்டு தூளாக்கிக் கலந்து குடிக்கக் கொடுக்க வேண்டும். சிறுநீர் தாராளமாகப் போகும். காமாலையும் நீங்கும்.

கீழாநெல்லியையும், சீரகத்தையும் வெண்ணெய் போல அம்மியிலே அரைத்துச் சுண்டக்காய் அளவு வெள்ளாட்டுப் பாலுடன் கொடுக்க உடனே குணமாகும்.

கடுகு ரோகிணி என்ற கடைச்சரக்கை வாங்கி நன்றாகத் தூளாக்கி மெல்லிய துணியில் அரித்து கண்ணாடிப் போத்தலில் பததிரப்படுத்திக் கொள்ளவும். அவ்வப்போது 1/4 தேக்கரண்டி அளவு கொதித்த தண்ணீரிலிட்டுக் கஷாயமாக்கி 1 – 2 கரண்டி வீதம் தினமும் இரண்டு வேளை கொடுக்க நன்றாக மலம் கழியும்.

மலத்தில் மஞ்சள் நிறம் வந்துவிட்டால் உடலில் மற்ற இடஙகளிலுள்ள மஞ்சள் நிறமும் மாறிவிடும்.

பெரியவர்களுக்கு உண்டாகும் மஞ்சள் காமாலை நீங்க சங்கன் வேர்ப் பட்டை 4 கிராம், அதிமதுரம், வெங்காயம் 16 கிராம், சீரகம 4 கிராம் வாங்கி கல் மண் நீக்கிச் சுத்தம் செய்து, அம்மியில் நனறாக அரைத்துப் பசும் தயிரிலோ எருமைத் தயிரிலோ கலக்கி மூன்று நாள்கள் அதிகாலையில் மட்டும் உண்ண, ஆச்சரியப்படும்படி மஞ்சள் காமாலை நோய் நீங்கும்.

குழந்தைகளுக்குக் கண்டபடி கடைகளில் விற்கப்படும் கடலையெண்ணெய் பட்சணங்களை வாங்கிக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். வீட்டிலேயே தயாரிக்கப்படும் சீடை, முறுக்கு, கொழுக்கட்டை வகைகளை அதிகமாகக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் ஜீரணிக்க முடியாமல் கஷ்டப்படும். கடுமையான மலச்சிக்கல் ஏற்பட்டு காமாலை உண்டாகும். தாய்மார்கள் இவ்விஷயத்தில் அதிக கவனமாக இருக்க வேண்டும்.

# பண்டாரநாயக்கவின் கொள்கைகளை குழிதோண்டிப் புதைத்தவர் மகிந்த

## சந்திரிக்கா சாடல்

(கொழும்பு)

பண்டாரநாயக்கவின் கொள்கைகளை குழிதோண்டிப் புதைத்து சுதந்திரக் கட்சியை கொள்ளையரின் கூடாரமாக மாற்றிய மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வெட்கமின்றி அதிகாரத்துக்கு வர முயற்சிப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

நிட்டம்புவ நகரில் இடம்பெற்ற சிவில் அமைப்புகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாதுளுவாவே சோபித தேரர் உட்பட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இங்கு தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கூறியதாவது,



இவ்வருடம் ஜனவரி 8 ஆம் திகதி நாம் நாட்டு மக்களிடன் இணைந்து மௌனப் புரட்சி ஒன்றின் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டோம். மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான மோசடிக் கும்பலிடமிருந்து நாட்டை மீட்டெடுத்து நல்லாட்சியை பிரகடனப்படுத்திக் கொண்டோம். இந்த மௌனப் புரட்சியில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியினரும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் ஒன்றிணைந்தனர்.

மக்களால் தூக்கி வீசப்பட்ட மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றார். அந்த மோசடிக்காரர்களை இன்னொரு தடவை நாடாளுமன்றம் வர இடமளிக்கமாட்டோம். இவர்களின் ஊழல், மோசடிகளை அடையாளம் கண்டுள்ளோம். அவர்கள் மீது உரிய நேரத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதனையும் சட்ட ரீதியாகவே செய்வோம். பயங்கரவாதத்திலிருந்து நாட்டை உண்மையாக மீட்டவர், இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவாகும்.

அதனை தனது சாதனையாகக் காட்டி மாலை சூடிக்கொண்ட மகிந்த, நாட்டை மீட்ட அந்தத் தளபதியை எவ்வாறு நடத்தினார் என்பதை நாடே அறியும். அவ்வாறான மிலேச்சத்தனமாக நாம் நடந்து கொள்ளமாட்டோம். தேர்தல் முடிந்த பின்னர் சட்டம், ஒழுங்கைப் பேணி சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கத் தவறமாட்டோம்.

இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக பதவி வகித்தவர் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக வர முயற்சிப்பதற்கு வெட்கப்பட வேண்டும். அந்தக் குடும்பத்துக்கு வெட்கம், மானம், ரோசம் என்பன சிறிதளவும் கிடையாது.

எமது கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் பெற்றோலிய வள அமைச்சர்களாக பதவி வகித்த காலத்தில் பல மில்லியன் ரூபாக்களை கப்பமாக அல்லது கமிஷனாகப் பெற்றுக்கொண்டுள்ளனர். உலகச் சந்தையின் விலைக்கு மேலதிகமாக 3 மடங்காக கணக்குக் காட்டியே இந்த கமிஷனைப் பெற்றுள்ளனர். அது தொடர்பான முழுமையான விபரங்கள் ஆவணங்களை பெற்றுள்ளோம். விரைவில் அது குறித்து விசாரணை முன்னெடுக்கப்படும் என்றார்.

- அரசியலமைப்பின் பிரகாரம் -

# பிரதமரையும் அமைச்சர்களையும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு

## நீதியமைச்சர் தெரிவிப்பு

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பிரதமரையும் அமைச்சர்களையும் நியமிப்பார். இவ்விடயத்தில் தலையிடும் அதிகாரம் எவருக்கும் கிடையாது என நீதி அமைச்சரும் ஐ.தே. முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான . விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மகிந்தவிற்கு எதிரான குழுவொன்று இருப்பதை ஜனாதிபதி வெளியிட்டுள்ள விளம்பரம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பிட்டகோட்டேயிலுள்ள ஐ.தே. கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் தலைவராக பதவி வகிக்கின்றார்.

ஆனால் அவர் இந்நாட்டின் ஜனாதிபதி, எனவே அரசியல் கட்சிகளின் யாப்புக்கு அமைய அவர் நடவடிக்கைகளை மேற்கொள்ளமாட்டார். இலங்கையின அரசியலமைப்பிற்கு அமையவே அவரது நடவடிக்கைகள் அமையும். எனவே பொதுத்தேர்தலுக்குப் பின்னர் பிரதமர் மற்றும் அமைச்சர்களை தனது விருப்பின் பிரகாரமே ஜனாதிபதி நியமிப்பார்.

அரசியலமைப்பின் 42ஆவது சரத்தில் இது தெளிவாகக் குறிபபிடப்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதியின் விருப்பிற்கு எதிராக செயற்பட எவருக்கும் அதிகாரம் கிடையாது. அதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றி தொடர்பாக அம்முன்னணியின் தலைவரென்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளம்பரம் ஒன்றை பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளார்.

இதன் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவான குழுவொன்று இருப்பதனையும் மகிந்த ராஜபக்ஷ்வை எதிர்க்கும் நிராகரிக்கும் குழுவொன்றும் இருப்பதும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. எனவே இந்த விளம்பரம் தொடர்பில் ஐ.தே.கட்சி அலட்டிக் கொள்ளவில்லை.

# மகிந்த தலைமையிலான கூட்டணி இலகுவாக வெற்றி பெறும்

## எஸ்.பி. திசாநாயக்க நம்பிக்கை



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வெற்றி பெறுவது மிக இலகுவானதாகும். இதனைத் தடுக்க முடியாது என கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் எஸ்.பி. திசாநாயக்கா தெரிவித்தார். கண்டி, உடுநுவரவில் இடமபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் 100 நாள் ஆட்சிக்கு இடம்கொடுத்தது ரணில் மீதும் ஐ.தே.க. மீதும் எமக்குள்ள பற்றுதல் காரணமாக அல்ல. எமக்குத் தேவையான நேரத்தில் தேர தலை நடாத்தத் திட்டமிட்டோம்.

இப்போது அக்காலம் கனிந்து வந்துள்ளது. பசில் ராஜபக்ஷவை ஒரு நாளைக்கு சிறைக்கு அனுப்பினால் என்ன நடக்கும் என்பதை 18ஆம் திகதிக்குப் பின்னர் பார்த்துக்கொள்ளுங்கள். பசில் ராஜபக்ஷவை ஒரு நாளைக்கு சிறையில் இட்டால் சஜித் பிரேமதாச பத்து மாதங்களுக்கு சிறை செல்வார்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி நடந்த தேர்தலின் பின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார். அந்நேரம் ஐ.தே.க.விற்கு 47 ஆசனங்களும ஸ்ரீ.ல.சு.க.விற்கு 127 ஆசனங்களும், எமது ஐ.ம.சு.கூ.விற்கு 146 ஆசனங்களும் இருந்தன. அண்மித்த காலங்களில் நாட்டின் முழு அபிவிருத்திப் பணிகளையும் இடைநிறுத்தி மக்களின் வெறுப்பைப் பெற்ற நேரத்தில் ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலுக்கு செல்கிறது.

நாட்டில் மிகப் பெரிய நிதி மோசடியைச் செய்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தலில் போட்டி இடுகின்றனர். ஜனவரி 8ஆம் திகதியை அண்மித்த காலம் அப்படி இருக்கவில்லை. இன்று மக்கள் ஐ.தே.க.வை வெறுக்கும் நேரமாகும் என்றார்.

# பிரதமர் பதவியை வழங்குவார் மைத்திரி

## மகிந்த நம்பிக்கை

மைத்திரிபால சிறிசேனவை தான் 1970ஆம் ஆண்டில் இருந்து அறிந்து வைத்திருப்பதாகவும், அவர் தனக்கு பிரதமர் பதவியை வழங்குவார் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட வேட்பாளருமாகிய மகிந்த ராஜபக்ஷ. தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி 9ஆம் திகதி அதிகாலை வெளியேறியது மீண்டும் அரசியலுக்கு வருவதற்கு அல்ல. என்றாலும் மக்களின் வேண்டுகோளை புறக்கணிக்க முடியாத நிலையில் மீண்டும் அரசியலுக்கு பிரவேசித்துள்ளேன். என் மீது மக்கள் அன்று வைத்திருந்த அன்பு இன்னும் அதே போன்று இருக்கிறது.



ஜனாதிபதி ஒருவரை ஒரு முறையா, இரண்டு முறையா, அல்லது மூன்று முறையா தெரிவு செய்வதென்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பதுடன் அவ்வாறில்லாமல் அமெரிக்கா அல்லது பிரான்ஸ் நாடுகளின் அரசியலமைப்புப் படி நாங்கள் அதை வரையறுத்து கொள்ள வேண்டிய தில்லை

எனது ஆட்சிக் காலத்தில் சிறு சிறு தவறுகள் இடம்பெற்றதை ஏற்றுக் கொள்கிறேன். உதாரணமாக சஜித் பிரேமதாஸவின் சகோதரி கள்ள நோட்டுக்களுடன் கைது செய்யப்பட்ட வேளை அவரை விளக்கமறியலில் தடுத்து வைக்காமல் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு பணித்தேன்.

இந்த அரசாங்கம் செயற்பட ஆரம்பித்த காலத்திலிருந்து அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதால் 15 இலட்சம் வேலையில்லாப் பிரச்சினை எழுந்துள்ளதாகவும் அது பாரிய பிரச்சினை என்றும் அவர் தெரிவித்தார். கீழ் மட்ட விவசாயிகள் முதல் முகாமையாளர்கள், பொறியிலாளர்கள் உட்பட அனைவரும் தொழில் இன்றி சிரமப்படுவதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




முருகேசு சந்திரகுமார்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

48 
உருவிலுள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?
1. வேட்டைக்காரன் 2. இடபம்
3. மிதுனம் 4. பெருங்கரடி



49. பரம்புக்கட்டை பயன்படுவது?
1. உழவுத்தொழிலில் 2. மட்பாண்டத்தொழிலில்
3. பிரம்பு பின்னல் தொழிலில் 4. உலோகக்கைத்தொழிலில்

50. கண்டி - கொழும்பு புகையிரதப்பாதையில் இருபெரும் புகையிரதப் பாதைகளைத் தொடுக்கும் புகையிரத நிலையம்?
1. வவுனியா 2. வட்டவளை 3. பொல்கஹவலை 4. பேராதனை

51. கைக்குட்டையின் கரையைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை யாது?
1. விஸ்வத்தையல் 2. நரம்புத்தையல்
3. கம்பளித்தையல் 4. வெட்டுக்குத்துத்தையல்

52. குறித்த பிரதேச மக்களுக்கு நீர் விநியோகத்தடை பற்றிய செய்தியை அறிவிக்கப் பொருத்தமுடையது?
1. வானொலி 2. தொலைக்காட்சி 3. பத்திரிகை 4. ஒலிபெருக்கி

53. பின்வரும் உருக்களில் கறிவேப்பிலையைக் காட்டும் உரு யாது?

1.  2.  3  4. 

54. உடலிறகுத் தேவைப்படும் விற்றமினைப் பெற்றுக்கொடுப்பது
1. பயறு - பருப்பு 2. முட்டை - பால் 3. மரவள்ளி - கடலை 4. கரட் - போஞ்சி

55. கொதிநீரில் இலகுவாக கரைவது?
1. மண்ணெண்ணெய்
2. உப்புக்கட்டி
3. மெழுகுத்துளி
4. கரிக்கட்டி

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1. கரம் 2. உயர்ந்த 3. உன்னைப் போன்ற உயர்ந்த உள்ளம் 4. நீ
5. இரட்டைக்கொம்பு 6. சத்தியனுக்கு (02). 1. கோபம் சிந்தனைக்கு இடையூறு
2. கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல (03). 1. விரும்பாது 2. தடை 3. குறைவு
4. வறுமை/கேடு (04). 1. பரிவாரங்களுடன் 2. நுளம்புகள் 3. நீங்களும்
(05). 1. நல்லறிவு 2. திருமறை 3. அரிது 4. இலக்குமணன்
(06). 1. கற்பகத்தை தொட்டதார், விலங்கு போட்டு வைப்போம் 2. கிட்டிப்புள்ளும் பம்பரமும்
(07). 1. ஏற்றினான் 2. பிராயத்தில் அதிகம் (08). 1. c,a 2. h 3. r
(09). 1. நான் பூக்களை கொண்டு வருவேன் (10). 1. what do you like?
(11). 1. நான் குளிக்கவா (12). 1. அய்யோ கடட்(ட்)ட (13). 01 - 03 வரை விரும்பிய வசனம்
(14). 1.08 2.09 3.08 4.95.00 5.30099
6. 1. பூச்சியம் தசம் பூச்சியம் ஒன்பது 2. இரண்டு தசம் இரண்டு ஐந்து 7.1L 650ml 8.45.00
9.24 10.05 11.09:40 12.204 13.36cm² 14. பி.ப. 3:15
(15). 1.2 2.2 3.2 4.3 5.4 6.1
7.1 8.4 9.1 10.1 11.3 12.1
13.1 14.1 15.4 16.3 17.4 18.3 19.4
20.3

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01)** பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

தந்தை இறந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் இராமன் அடியற்ற மரம் போல் விழுந்தான். சிறிது நேரத்தின் பின் மயக்கம் நீங்கி எழுந்தான். சகோதரர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் கூறிக்கொண்டனர்.

01. உயர்திணை, ஒருமை, படர்க்கை பெயர்ச்சொல்லொன்றை எழுதுக ..............................
02. தெளிவு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லொன்றை எழுதுக ..............................
03. சுழியும் விசிறியும் இடப்பட்டுள்ள ஒரு சொல்லை பந்தியில் இருந்து கண்டுபிடித்து எழுதுக ..............................
04. இப்பந்தியில் கையாளப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக ..............................
05. தகப்பன் எனும் சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக ..............................
06. கோடிடப்பட்ட வாக்கியத்தின் எழுவாய்ச்சொல் எது? ..............................

**(02)** கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

07. பொதுமக்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தங்கள் ............................ மேற்கொள்கின்றார்கள் (பிரயானத்தை, பிரயாணத்தை)
08. சிறுவர்கள் ............................ உடைத்தார்கள் (மின்குமிழை, மின்குமிலை)
09. நாம் கல்விச் ............................ சென்றவேளை அங்கு போயிருந்தோம் (சுற்றுளா, சுற்றுலா)

**(03)** பின்வரும் கூற்று சரியெனின் (சரி) எனவும் பிழையெனின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக

10. 'மனைவியா' உயர்திணை ஒருமைப்பெயர்ச்சொல் ( )
11. வருகின்றனர் என்பது நிகழ்கால பன்மை வினைமுற்று ( )

**(04)** பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக

12. Go home straight ..............................
13. May I go out? ..............................

**(05)** பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக

14. நாம் கைகளைக் கழுவிக் கொள்வோமா? ..............................

**(06)** பின்வரும், ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக

15. (1). Mot.........r cycle (2). B.........FFalo

**(07)** பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக

16. விளையாடப் போவோமா? ..............................

**(08)** பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக

17. 'நெவத என்ன' ..............................

**(09)** வெற்றிடத்துக்குப் பொருத்தமான சரியான விடையை அடைப்புகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக

18. தமிழ்நெடுங்கணக்கில் ............................ மெய் எழுத்துக்கள் உள்ளன (12, 18, 30)

19. இன்று எமது ........................................ மிகவும் சுருங்கி விட்டது (தேசம், வேலை, உலகம்)

**(10) 20 தொடக்கம் 22 வரையுள்ள வினாக்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக**

20. எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்

- இக்கவிதையின் நாலாவது வரியை புள்ளிக்கோட்டில் எழுதுக?

........................................................................

21. காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்

இக்கவிதை எதைப்பற்றி குறிப்பிடுகிறது? ..............................

22. உலை வாயை மூடலாம் ........................................ என்னும் பழமொழியை பூர்த்தி செய்க

**(11) பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் இருக்கும் சொற்களின் கருத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

23. கடைசி மேசையில் அமர்ந்திருந்த ஆதவனுக்கு உதறல் எடுத்தது உதறல் என்பது? ....................

24. காந்தியடிகள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர் ஆவார் ....................

25. அதுதான் ஏற்ற சமயம் என எண்ணி செல்வந்தர் அருகில் சென்றான் ....................

**(12) 26 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களின் வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

26. கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற கணிதச்செயற்பாடுகளுக்கும் உதவும் வகையில் மற்றுமொரு பொறி .................... (கண்டுபிடிக்கப்பட்டன / கண்டுபிடிக்கப்பட்டது)

27. ஆதவனுக்கு வகுப்புத்தலைவன் சத்தியனை நினைத்தபோது ஒரே எரிச்சலாக .................... (இருந்தது / இருந்தான்)

28. இவை மாணவர்களுக்குப் பெரிதும் .................................... (உதவுகின்றது / உதவுகின்றன)

**(13)** உலகில் எங்கு என்ன நடந்தாலும் அதனை உடனுக்குடன் அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கும் ஊடகங்கள் பல உள்ளன. அவற்றுள் பத்திரிகை எத்தனையோ ஆண்டுகளாகத் தனியான இடத்தினை வகித்து வருகிறது. "பத்திரிகை வாசிப்பதன் மூலம் மனிதன் அடையும் பயன்கள்" என்னும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும் எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

29 ........................................................................

30 ........................................................................

31 ........................................................................

**(14) தரப்பட்ட வெற்றிடத்தில் விடையை எழுதுக**

32. இலக்கங்களில் எழுதுக - ஐம்பதாயிரத்து எண்ணூற்று ஐந்து ....................

33. எண்கோலத்தில் பொருத்தமற்ற எண்ணை தெரிவு செய்து எழுதுக
4004, 4008, 4012, 4018, 4016, 4020 ....................

34. 

1). தரப்பட்டுள்ள உருவில் $\frac{3}{5}$ ஐ நிழற்றுக

2). அதில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைத் தசமத்தில் தருக ....................

35. பிஸ்கட் பெட்டியொன்றின் நிறை 2kg 500g ஆகும். அவ்வாறான 3 பெட்டிகளின் நிறையை இரு பெட்டிகளில் இடும்போது ஒரு பெட்டி கொள்ளும் நிறை யாது?

........................................................................




36. பிரபா 2013ஆம் ஆண்டு தனது 14ஆவது பிறந்ததினத்தை ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி கொண்டாடினாள். 2020.08.31ஆம் திகதிக்கு பிரபாவுக்கு எத்தனை வயதாகும்?

........................................................................


37. 750ml தோடம்பழச்சாறு கொண்டுவரப்பட்டு அதனுடன் 850ml நீர் கலக்கப்பட்டு பானமொன்றை தயாரித்து நால்வரிடையே சமனாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. எனின் ஒருவருக்குக் கிடைத்த பானத்தின் அளவை மில்லிலீற்றரில் தருக

........................................................................

38. 


உரு A ஆனது சமபக்க முக்கோணியாகும் எனின் சதுரத்தின் சுற்றளவு எத்தனை சென்ரிமீற்றராகும்?

........................................................................

39. 

(1). இத்திண்மத்தில் காணப்படும் செவ்வக முகங்களின் எண்ணிக்கை யாது?

........................................................................

(2). நேர்விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

........................................................................

40. எழுத்துக்களில் எழுதுக
01. 2.25 .................................... 02. 0.03 ....................................

41. பேருந்து ஒன்று பி.ப 1.00 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு 16:30 மணிக்கு பொலன்னறுவையை அடைந்தது. பயணத்திற்கு செலவிட்ட காலம் எவ்வளவு?

........................................................................


42. வெற்றிடங்களை நிரப்புக 15kg 250g - 8kg 800g = ....................

43. ரூபா 35.00 வீதம் 10 அப்பிள் பழங்களை வாங்கிக்கொண்டு ரூபா 500ஐ வழங்கினால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

........................................................................

44. வரைபில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையையும் வரைபையும் நிரப்புக

| பூக்கள் | பூக்களின் எண்ணிக்கை |
|---|---|
| மல்லிகை | 24 |
| ரோஸா | .................. |
| அலரி | 12 |
| அல்லி | 18 |
| லில்லி | 10 |





**(15) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக**

45. ஒளியை விரும்புவதும் இருளை விரும்பாததுமான பிராணி பின்வருவனவற்றுள் எது?
1. நுளம்பு 2. இலையான் 3. சிலந்தி 4. ஆந்தை

46. இலங்கைக்கே உரிய விலங்கு?
1. கோழி
2. நீர்க்காகம்
3. காட்டுச்செண்பகம்
4. முதலை

47. நீரின் மூலம் பரம்பலுக்கு உட்படும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க
1. புன்னை, ஆம்பல் 2. அல்லி, கொட்டங்காய்
3. புலிநகம், இறப்பர் 4. அவரை, தாமரை

# தேர்தல் களம் 2015



## தாகத்துக்கு தண்ணீர் இல்லை என்றவர் அதே மக்களிடம் எப்படி வாக்குக் கேட்பர்

### சிறீதரனின் தேர்தல் முனைப்புக்கு வேலணை பிரதேச அமைப்பாளர் போல் கண்டனம்



தீவகப்பகுதிக்கு குடிநீர் விநியோகத்தை நிராகரித்தவர்கள் இன்று அதே மக்களிடம் எந்த முகத்துடன் வாக்குக் கேட்க வந்திருக்கிறார்கள் என வேலணை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சி.சிவராஜா தோழர் (போல்) கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்காக தமிழ்க் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி சிறீதரன் வாக்கு கேட்டு தீவகத்தில் இறங்கி இருப்பதை ஆட்சேபித்து நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தீவக மக்களுக்கு குடிநீரை அனுமதிப்பதை சிறீதரன் ஆட்சேபித்திருப்பதை கண்டித்து வெளியான அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இப்போது இந்த மக்களிடம் வாக்கை பெறுவதற்கு வசதியாக நான் தீவகத்தில் பிறந்தவன் இந்த மக்களைவிட்டு தான் ஒரு போதும் விலகி இருககப்போவதில்லை என்கிறார் சிறீதரன்.

அது உண்மையானால் கடந்த பொதுத் தேர்தலுக்கு பின்னரான 5ஆண்டு காலத்தில் இந்த தீவுப்பகுதி மக்களுக்காக சிறீதரன் என்ன சிந்தித்தார் எதனை செய்ய முயற்சித்தார் என்பதை இவ்விடத்தில் கேட்க விரும்புகிறேன்.

தன்னை தமிழ் மண்ணின் மைந்தனாக காட்டிக் கொண்ட சிறீதரன் போரின் இறுதி நாட்களில் தன்னை தற்காத்துக் கொள்ள அங்கிருந்து இரகசியமாக வெளியேறி இந்தியாவில் புகலிடம் தேடிக்கொண்டவர்.

இப்போது இம்முறை பொதுத் தேர்தலில் இறங்கியிருக்கும் முன்னாள் போராளிகளை துரோகிகள் என்றும் இவர்கள் உண்மையான போராளிகள் எனில் சைனைட் உட்கொண்டு யுத்தகளத்திலேயே தற்கொலை செய்திருக்க வேண்டும் என எப்படி இவரால் கூற முடியும்.

இப்படி அவர் கூறுவது உண்மையானால் முதலில் சிறீதரனும் அவருடன் கூடவே தப்பிச்சென்ற அவரது சகோதரனுமே முதலில் தற்கொலை செய்திருக்க வேண்டும்.

தீவக மக்களை பொறுத்தவரை அன்றும் இன்றும் என்றும் இந்த மக்களுடன் தொப்புள கொடி உறவுகளாக இங்கேயே பிறந்து இந்த மக்களின் இன்ப துன்பங்களில் எப்போதும் பங்கெடுத்து அவர்களுக்கான பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பவர்கள் நாங்கள்.


யுத்த சூழலுக்கு முன்னரும் அவ்வாறே அதன் பின்னரும் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தீவக மக்களுக்காக எத்தகைய பணிகளை மேற்கொண்டார் என்பதை இங்குள்ள மக்கள் நன்கறிவார்கள். அதனை நாம் கூறித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

கடந்த காலத்தின் அனுபவங்களை கவனத்திலெடுத்து உண்மையான சரியான தலைவர்களை மக்கள் தேர்ந்து கொள்ள வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## தூர நோக்குள்ள தலைவர்களே உங்கள் தெரிவாக அமைய வேண்டும்

### தேர்தல் பிரசாரத்தில் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.கே.ஜெகன்



தமிழ் மக்கள் ஒவ்வொருவரும எதிர்வரும் 17ஆம் திகதி வழங்கவுள்ள வாக்குகளானது எமது இனத்தின் எதிர்காலத்தை வளப்படுத்துவதற்கான தூர நோக்குள்ள தலைவரகளை தேடும் பதிவுகளாக நிச்சயமாக இருக்கும் மாறாக வெறும் தேசியத்தை பேசிக்கொண்டு மக்களது வாழ்வியலையும் உரிமைகளையும் முடக்கிக்கொண்டிருப்பதறகான தெரிவுகளாக ஒருபோதும் அமையாது. இதை கடந்த காலத்தில் தமிழ் மக்களை ஏமாற்றி தமது வாழ்வியலை வளப்படுத்திக் கொண்டிருப்பவர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலுடன் உருவாக்கப்பட்ட அரசு தமிழ் மக்களுக்கு எத்தகைய நலன்களை பெற்றுக் கொடுத்துள்ளது? வெறுமனே தேர்தல் காலத்தில் மட்டும் வந்து ஜதார்த்தத்திற்கப்பாற்பட்ட வாக்குறுதிகளை மக்களிடம் திணித்து வாக்கு வங்கிகளை நிரப்பிய காலம் முடிவடைந்துவிட்டது. இது மக்கள் தெளிவுடன் மக்கள் சேவையாளர்களை தேர்வு செய்யும் மாற்றத்துக்கான களம்.


மக்களது பணத்தை கோடிக் கணக்கில் சுருட்டி தொழிலதிபரான சரவணபவன் சொல்கின்றார் நாங்கள் இந்த தேர்தலுடன் ஓடி விடுவோம் என்று. நிச்சயமாக அவரது நிறுவனம் குடாநாட்டில் இருக்கும். அதில் எந்த சந்தேகமும் கிடையாது. ஏனெனில் நாங்கள் ஜனநாயக அரசியல் செய்பவர்கள். ஆனால் அவர்களுக்கு எமது கட்சியின் பெயரை கூறாதுவிட்டால் வருமானமே கிடையாது. இவர் கடந்த காலத்தில் பல பாடங்களை கற்றுக் கொண்டும் இன்னும் திருந்தாது மக்களை ஏமாற்றலாம் என நினைக்கின்றார். பாவம் அத்தகையவர்களது நாடாளுமன்ற கனவுகள் கூட இந்த முறை பலிக்க மக்கள் சந்தர்ப்பம் கொடுக்க மாட்டார்கள் என்பதுதான் உண்மை நிலை.

மாற்றம்வரும்போது மாற்றப்படவேண்டியவர்களும் மாற்றப்படுவார்கள். இதனை மக்கள் தற்போது நன்கு புரிந்து கொண்டுள்ளனர். அதனால் அவர்கள் தமது வாழ்வியலை தூக்கி நிறுத்தி விட்டவர்களை தூக்கி நிறுத்துவதற்கு என்றுமே பின்னிற்கப்போவதில்லை. அதனால் தமிழ் மக்கள் இம்முறை தமது கடமையை மக்கள் சேவையாளர்களான எமக்கு செய்வார்கள் என்பது தெளிவாகியுள்ளது.

இந்த கூட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும் வேட்பாளருமான சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) மற்றும் கட்சியின் பல முக்கியஸ்தர்களும் நூற்றுக்கணக்கான மக்களும் கலந்துகொண்டனர்.

## ஐ.தே.கவுடன் சிங்கக்கொடி ஏந்திய சம்பந்தனுக்கு இப்போது ஏன் விரோதம்?

### வேட்பாளர் இரா.செல்வவடிவேல் கேள்வி



ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் சிங்கக்கொடி ஏந்திய சம்பந்தன் இன்று அக்கட்சிக்கெதிரான பிரசாரத்தில் ஏன் இறங்கியுள்ளார் என வேட்பாளர் இரா.செல்வவடிவேல். கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். பேருந்து நிலையத்தில் கடந்தஞாயிறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை தேர்தலில் தமிழ் தேசியத்தின் பெயரால் அபகரிக்க முனையும் கட்சிகளின் தவறான அரசியல் வழிமுறைகளைக் கண்டித்து உரையாற்றிய சொல்லின் செல்வர் மேலும உரையாற்று கையில்,

தமிழ்க் கூட்டமைப்பும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்த நாட்டில் மீண்டும் வெடி குண்டுக் கலாசாரத்தை ஏற்படுத்த முயல்கிறார்கள்.

பெற்றோர்களே! அழிவு யுத்தம் தொடர வேண்டும் என்று நினைக்கிறீர்களா? உங்கள் பிள்ளைகள் உங்களுடன் இருந்து நன்கு கல்வி கற்று வளமான சுதந்திரமான வாழ்வு வாழ வேண்டாமா? யுத்த அனர்த்தங்களில் இருந்து மீண்டு வரும் சூழ்நிலையில் மீண்டும் வெடி வெடிக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்களின் நோக்கம் சுயநல அரசியல் ஒன்று தான். இதனை மக்கள் உணர வேண்டும்.

திம்பு பேச்சு வார்த்தையை அன்று எதிர்த்த சம்பந்தன் ஐயா இன்று திம்பு பேச்சு என்று பேசுவதன் மர்மம் என்ன? ஐ.தே.கவுடன சேர்ந்து சிங்கக் கொடியுயர்த்திய சம்மந்தன் இன்று ஐ.தே.க. க்கு எதிரான கருத்தைக் கூறுவது எதற்காக


தமிழ் மக்களே! ஏமாந்தது போதும் இன்னுமா ஏமாற்றப் போகிறீர்கள் அரசியலுக்குள் மாயப் போகின்றீர்கள். இந்தியாவிலும் லண்டனிலும் குடும்பத்தை பாதுகாப்பாக வைத்திருப்பவர்களுக்கு இங்கு எம் மக்களுடைய அவலம் தெரியுமா? மரணித்த அனைத்து தமிழ் உயிர்களும் மரியாதைக்குரியவை. அவர்களின் ஆவி கூட கூட்டமைப்பை மன்னிக்காது.

யாழ்.போதனா வைத்திய சாலையின் வளர்ச்சிக்கு ஈ.பி.டி.பி. யினர் ஆற்றிய பணிகளை மக்கள் அறிவர் ஏழைக் கூலித் தொழிலாளிகளின் வளமான வாழ்வுக்காக தங்களை தாங்கள் உழைத்தோம். விடுதலைப் புலிகளின் காலத்தில் யுத்த சூழலில கடமையாற்றிய வைத்தியசாலை தொழிலாளர்களுக்கு வன்னி உதவி ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கினோம். அந்த ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தோம் இவற்றை மக்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

வளமான, நிம்மதியான, தன்மானத்துடனான வாழ்வு பெறுவதற்கு வீணைச் சின் னத்தை தெரிவு செய்யுங்கள். புள்ளடியிடுங்கள் டக்ளஸ் தேவானந்தாவின் கரங் களைப் பலப்படுத்துவோம். புதியதோர் வாழ்வு பிறக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.








அண்மையில் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.றொகான் மகேஸ் தலைமையில் சிவில் பாதுகாப்புக் குழு கலந்துரையாடல் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றபோது... (54)

# மன்னார் மறைமாவட்ட ஆயர் பதவி ஓய்வுபெற உத்தேசம்



(மன்னார்)

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசெப் ஆண்டகை, ஆயர் பணியில் இருந்து ஓய்வு பெற விரும்புவதாக கத்தோலிக்கத் திருச்சபைக்கு அறிவித்திருப்பதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.


சுகவீனம் காரணமாகவே, மன்னார் ஆயர் பணியில் இருந்து ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. கடந்த மே மாதம கொழும்பு சென்று கொண்டிருந்த போது, மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் ஆண்டகை, மாரடைப்பினால் பாதிக்கப்பட்டார். இதையடுத்து அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலதிக சிகிச்சைக்காக அவரை சிங்கப்பூர் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே அவர் ஆயர் பணியில் இருந்து ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயர் பணியில் இருந்து ஓய்வுபெறுவதற்கு பாப்பரசர் அனுமதி அளித்த பின்னர், புதிய ஆயர் நியமனம் தொடர்பாகவும் வத்திக்கானில் இருந்து அறிவிப்பு வெளியிடப்படும். அண்மையில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பணியில் இருந்து கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை ஆண்டகை விருப்ப ஓய்வு பெறறிருநதார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்களை அரவணைத்து மெய்யான சேவை செய்பவர்கள் ஈ.பி.டி.பி.யினரே

## ஈ.பி.டி.பி.யின் வேட்பாளர் சிவகுரு பலகிருஸ்ணன்



(யாழ்ப்பாணம்)

மக்களை அரவணைத்து மெய்யான சேவைகளை உள்ளுணர்வோடு செய்தவர்கள் ஈ.பி.டி.யினரே எனவே யாழ். குடாநாட்டு மக்கள் பொய்யான பசப்பு வார்த்தைகளுக்கு அகப்படாது ஒன்றுதிரண்டு அனைத்து தமிழ் மக்களும் ஈ.பி.டி.யின் வீணைச் சின்னத்திற்கு வாக்களிக்க ஒன்று திரளுங்கள் என 2015 நாடாளுமன்ற வேட்பாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஸணன் இவ்வாறு தெரிவித்தார்.

வலி.மேறகு பிரதேச பொன்னாலை மக்களுடனான மாபெரும் சந்திப்பில் கலந்து கொண்ட வேட்பாளரும் முன்னாள் வலி. மேற்கு பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் மேலும் பேசுகையில்,

கடந்த 20 வருடங்களில் நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரித்தவர்கள் நல்லாட்சிக்கு எவ்வகையிலும் வித்திடவில்லை. நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியவர்கள் சுகபோக வாழ்க்கைகளும். வெளிநாட்டு வாழ்க்கைக்கும் நிதியினை திரட்டுவதற்கும் தயாராகிவிடுவர்.

இவர்கள் கடந்த காலத்தில் ஒரு சில அரசிடம் இருந்து பெற்று வழங்கியுள்ளனர். அதுவும் தமது சொந்த உறவுகளுக்கே வழங்கியுள்ளன. ஆனால் எமது செயலாளர் நாயகமும் நாமும் மக்களுடன் பின்னிப்பிணைந்த வகையில் மக்களுக்கான பணிகளை வேலைவாய்ப்பை, அபிவிருத்தித்திட்டங்களை, வாழ்வாதார மற்றும் ஏனைய பல வற்றையும் முன்னெடுத்து வருகிறோம் என தெரிவித்தார்.(92)

# அதிர்ஸ்டலாப சீட்டிழுப்பில் புன்னாலைக் கட்டுவன் வாசிக்கு 50 ஆயிரம் பணப் பரிசு

கடந்த 4 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப் பெற்ற நியத்த ஜெய சீட்டிழுப்பில் புன்னாலைக கட்டுவனைச் சேர்ந்த ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா பரிசாகக் கிடைத்துள்ளது. 3 இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் பொருந்திக் கொண்டதினால் இவ்வதிர்ஷ்டப் பணத்துக்கு இவர் உரியவரானார்.

சுன்னாகம் காங்கேசன் துறை வீதியில் அதிர்ஷ்டச் சீட்டுக்கள் விற்பனை செய்யும் வயித்திலிங்கம் நடராசா என்பவரி டம் இவவதிர்ஷ்டசாலி இச்சீட்டினைப் பெற்றிருந்தார். கடந்த 1ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப் பெற்ற சனித்தாவ சீட்டிழுப்பிலும் சங்கானைவாசி யொருவர் ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசினைப பெற்றிருந்தார். நான்கு நாட்களுக்குள் ஒன்றரை இலட்சம் ரூபா பணப் பரிசுக்குரிய இரண்டு சீட்டுக்களையும் மேற்படி விற்பனையாளரிடமிருந்தே இவ்விருவரம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (137)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



சிவகுரு பாலகிருஷ்ணன்

(ஈ.பி.டி.பி. வலிகாமம் மேற்கு இணைப்பாளர்)

X 9

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# புலமைப்பரிசில் பரீட்சை 3,40,926 மாணவர்கள்


(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு நடைபெறவுள்ள 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 3 இலட்சத்து 40 ஆயிரத்து 926 மாணவர்கள் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

இந்நிலையில் 2 ஆயிரத்து 907 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

இம் முறை இடம்பெறவுள்ள பரீட்சையில் 2 இலட்சத்து 54 ஆயிரத்து 373 மாணவர்கள்



சிங்கள மொழி மூலமும் 86 ஆயிரத்து 553 மாணவர்கள் தமிழ் மொழி மூலமும் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யோகாசனங்கள் அடங்கிய பட விளக்க அட்டை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாவலர் மூணி மண்டபத்தில் யோகாசனங்கள் அடங்கிய பட விளக்க அட்டை கடந்த ஞாயிற் றுக்கிழமை வெளியிடப்பட்டது.

யோகாசனப் போதனாசிரியரான என்.சிவனேஸ்வரராஜா இப் பட விளக்க அட்டையை வெளியிட இதன் முதற் பிரதியை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ம.கருணாநிதி பெற்றுக் கொண்டார்.

மாணவர்கள் பயனடையும் வகையிலும் இவ் விளக்கக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் சூரிய நமஸ்காரம் உட்பட நாற்பதுக்கும் மேற்பட்ட யோகாசனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் வருடம் ஐம்பதுக்கும் அதிகமானோர் பயிற்சியை முடித்து வெளியேறிய நிலையில் இவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (137)

## தலை...

ஆய்வை மேற்கொள்ளுமாறு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இந்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதுகுறித்து சீன செய்தி நிறுவனமான சினஹுவா, பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேராவிடம், கேள்வி எழுப்பியிருந்தது.

இத்தகைய செய்திகள் வெளிவந்திருந்தாலும், இந்தத் திட்டம் தொடர்பாக இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை. எதிர்வரும் 17 ஆம் திகதி நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்றால், இந்தத் திட்டத்தை இந்தியா அதிகாரபூர்வமாக முன்வைக்கும் போது, அதுகுறித்து எமது அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்.

எவ்வாறாயினும், இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடுவதற்கு முன்னதாக, இந்தத் திட்டத்தினால், இருநாடுகளிலும் சமூக, பொருளாதார ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சாதக, பாதக காரணிகள் குறித்து, க்வனமாக ஆராயப்படும்.

இது ஒரு மிகப்பெரிய திட்டமாக இருக்கும் என்பதால், எந்தவொரு முடிவையும் எடுக்க முன்னர், முற்றுமுழுதாக ஆராயப்படும். என்றும் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

# சிங்கக்கொடி ஏந்திய சம்பந்தன் புலிக்கொடி ஏந்த மறுத்தது ஏன்?

## அங்கஜன் கேள்வி

(யாழ்ப்பாணம்)

தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளருமான மாவை சேனாதிராசா அரசியல் நேர்மை அற்றவர் என்று குற்றம் சாட்டியிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளரான அங்கஜன் இராமநாதன், வெளியிலே தேசியம் பேசித் திரியும் மாவை சேனாதிராசா, மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது அவரை இரகசியமாக சந்தித்து அவரது மகள் இந்தியாவில் பல்கலைக்கழகம் ஒன்றில் புலமைப்பரிசில் பெற்று இலவசமாக படிப்பதற்கு சலுகை பெற்றுக்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

பிரசித்தி பெற்ற இந்திய பல்கலைக்கழகம் ஒன்று இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கிய இரண்டு புலமைப்பரிசில்களுக்கான கோட்டாக்களில் ஒன்றையே அவர் இவ்வாறு தனது மகளுக்கு பெற்றுக்கொடுத்ததாக கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை கொட்டைக்காட்டில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவிட்டபுரத்தில் மாவை சேனாதிராசாவின் காணி எப்பொழுதோ படையினர் வசம் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் அங்கு அவரது குடும்பத்தினர் இன்னமும் குடியேறவில்லை என்றும் கூறிய அங்கஜன், ஆனால் ஏனைய மக்களை மீள்குடியேற்றத்துக்காக விடுவிக்கப்பட்ட வலி.வடக்கு பகுதிகளில் குடியேறுமாறு அவர் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

தனது குடும்பத்தை பாதுகாப்பாக வெளிநாட்டில் வைத்துவிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களுக்கு அவர் உபதேசம் செய்வதாகவும் அங்கஜன் குற்றம் சாட்டினார்.

அதேபோல, தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் பேச்சளவில் தான் தமிழ்த் தேசியம் கதைப்பதாகவும், ஆனால் அவர் முற்றுமுழுதாக சிங்கள தேசியத்துடனேயே நின்று வருவதாகவும் கூறிய அங்கஜன், சிங்கள தேசியக் கொடியைப் பிடித்த சம்பந்தன் என்றாவது புலிக் கொடியை தூக்கி இருக்கிறாரா? என்றும் கேள்வி எழுப்பினார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் அரசாங்கத்துடன் சமாதான உடன்படிக்கை செய்தபோது தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றே வலியுறுத்தினார் என்றும் அதேபோலவே அதிகாரம் பற்றி பேசுவதற்கு முன்னர் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று தானும் வலியுறுத்தி வருவதாகவும் அங்கஜன் இந்தக் கூட்டத்தில் கூறினார்.

## மீண்டும்..

வார்த்தை பயனளிக்காத நிலையில் நான், இந்தியாவில் குடும்பம், பிள்ளைகளுடன் இருந்த சம்பந்தனுக்கு தொடர்பு எடுத்தபோது மனைவிதான் பதிலளித்தார். சம்பந்தரை கதைக்க அழைப்பதாக தெரிவித்த போதும் அவர் பேசவில்லை.

தொலைபேசியும் துண்டிக் கப்பட்டுவிட்டது. இவ்வாறு தான் சுரேஷ் பிரேமச்சந்திரனது தொலைபேசியும் துண்டிக்கப் பட்டிருந்தது. மாவையார் தான் அனுதாபமாகப் பேசினார்.

இறுதிப்போர் நிறைவடையும் வரை இவர்கள் இந்தியாவில் தமது சொத்துக்களுடன் இருந்தார்களே தவிர எமது ஒன்றரை இலட்சம் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற இவர்கள் சுயலாபத்திற்காக எதுவுமே செய்யாதிருந்தார்கள். இதுதான் உண்மை.

பிரித்தானியப் பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது மக்களை ஏமாற்றும் வகையில் மாவிட்டபுரத்தில் போராட்டம் செய்தார்கள். ஏன் கமரூன். சென்ற இடத்தில் போராட்டம் செய்திருக்கலாம் தானே. சபாபதிப்பிள்ளை முகாமிற்கு கமரூன் செல்லும் போது அங்கு மக்கள் இல்லை. எல்லாரையும் மாவிட்டபுரம் போராட்டத்திற்கென தமது செலவில் மக்களை அனுப்பி விட்டார்கள். இது மககளை ஏமாற்றும் துரோகம். இதை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஐ.நா. விசாரணை என்றார்கள். ஆனால் உள்ளக விசாரணைக்கு இன்று உடந்தை போகிறார்கள். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மனத்தால் இணைநந்து 'காதல் கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள்.

அது மட்டுமல்லாமல் வெளியுலகிற்கு மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர விடாது முடக்குகின்றார்கள். தமிழினத்தை விற்க, பொய் கூறுகின்றார்கள். தமது அரசியல் இருப்புக்கு கேள்விக்குறி ஏற்பட்டுள்ளமையால் அப்பட்டமான பொய்களைக் கூறுகின்றார்கள்.

பாவம் மாவையார் மகிந்த குடும்பத்துடன் வளைந்து கை கொடுத்து பல்லைக் காட்டி விட்டு இப்போது அப்புகைப் படங்களை நாம் வெளியிட்டவுடன் கடுப்பாகி பொய் கூறுகின்றார். மக்களை ஏமாற்றுக் காரர்களாக்குகிறார்கள்.

முள்ளிவாய்க்கால் படுகொலையை மூடிமறைக்கும் ராஜபக்ஷ அரசின் செயற்பாடுகளுக்கு கூட்டணியாகியுள்ளார் சுமந்திரன். ராஜபக்ஷவுடன் கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பவர்களை மக்கள் இதன் மூலம் புரிந்து கொள்ளவேண்டும்.

இவர்கள் உலகத் தலைவர்களான மன்மோகன் சிங், நரேந்திரமோடி, கமரூன், ஜோன்கெரி போன்றவர்கள் இந்த கூட்டமைப்பின் தலைவர்கள் எனக் கூறுபவர்களைச் சந்தித்தபோது மாகாண சபைக்கான நிதியுதவியைக் கூட்டித்தர உதவி புரியுங்கள். 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்த உதவுங்கள் எனக்கேட்கிறார்கள் தவிர சமஷ்டி சுயாட்சி பற்றி பேசவே இல்லை.

இப்போது தேர்தல் என்றவுடன் மட்டும் சமஷ்டி என்று மக்களை ஏமாற்றுகிறார்கள். ஒரு நாடு இரு தேசம் என்பது சம்பந்தனுக்கு புரியவில்லை என்றால் பதவி விலகி என்னிடம் வந்தால் வகுப்பு எடுக்கலாம். அதை விட்டு மக்களை எவ்வளவு காலம் ஏமாற்றப் போகிறார்களோ என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும் என்றார். (இ,25)

## டோனி...

உட்பட அவரது குடும்ப உறுப்பினர்களும் இவ்விஜயத்தில் கலந்துகொண்டுள்ளனர். கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய பிளேயர் குடும்பத்தினர் சிவில் விமானமொன்றில் அநுராதபுரத்துக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் அழைப்பின் பேரில் இவர் இலங்கை விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

## புலிகளிடம்...

நிவாட் கப்ரால் உள்ளிட்ட முக் கியஸ்தர்கள் இதில் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு இராணுவத் தலைமையகத்தில், 2 கொள்கலன்களில் பத்திரப்படுத்தப்பட்டிருந்த மேற்படி தங்கம், 16 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கப்பலேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடக்கில்...

கொண்டும் அரசுடனான இணக்க அரசியலின் ஊடாகவும் குடாநாட்டில் படைத்தரப்பினர் வசமிருந்த 17 ஆயிரத்து 522 ஏக்கர் நிலப்பரப்பை விடுவித்து அங்கு மக்களை மீளக்குடியேற்றியுள்ளோம். இது, மக்களிடம் நாம் வழங்கிய வாக்குறுதிகளை செயற்படுத்திக் காட்டியுள்ளதன் வெளிப்பாடு என்றும் தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும், குடாநாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையே காணப்படுகின்றது. இதேவகையில் தான், இங்குள்ள இரு நலன்புரி முகாம்களைச் சேர்ந்த மக்களும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலை இருந்து வருகிறது.

இங்குள்ள மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகளையும், துயரங்களையும் நான் நன்கு அறிவேன். அந்த வகையில்தான், இந்நலன்புரி முகாம்களில் வாழும் மக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு உடனடியாகவே சேதமடைந்துள்ள குடியிருப்புகளின் கூரைகளைப் புனரமைப்பது, சுத்தமான குடிநீர் வசதியைப் பெற்றுக் கொடுப்பது,

மலசலகூடங்களின் வசதிகளை மேலும் பெற்றுக் கொடுப்பது, மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது என்பனவற்றுடன் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படும் வரையிலும் அல்லது தற்போதிருக்கின்ற காணிகளைக் கொள்வனவு செய்து அவற்றை குடியிருக்கும் மக்களுக்கு உரித்தாக்குவது வரையில், அந்த மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பது உள்ளிட்ட விடயங்களில் உரிய கவனம் செலுத்தப்படுமென கூறியதோடு, தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வை பெறுவதைப் போல், நாளாந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எமது அரசியல் முயற்சியாக இருந்து வந்துள்ளது என்றும் கூறினார்.

இதனிடையே இக்குடியிருப்புகளில் வாழும் மக்களது சுகாதாரம், பிள்ளைகளின் கல்வி, விளையாட்டு உள்ளிட்ட விடயங்களிலும் குறிப்பாக, சுயதொழில், வேலைவாய்ப்பு உள்ளிட்ட ஏனைய விடயங்களிலும் நாம் மிகுந்த அவதானம் செலுத்தி வருகிறோம். மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என்ற எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என்றும் சுட்டிக்காட்டிய டக்ளஸ் தேவானந்தா, தேவைக்கு அதிகமாகவும் மக்களுடைய இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாகவும் படையினர் நிலை கொண்டிருப்பதை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதே எமது நிலைப்பாடு எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மக்கள், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஒருமித்த வாக்குப் பலத்தை வழங்கி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரை வெற்றிபெறச் செய்வதன் ஊடாகவே நாம் எமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர முடியும் என்றும் கூற்றுடன் வீணையின் வெற்றி நிச்சயம் விடியலைத் தரும் என்றும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் இராமநாதன் ஐங்கரனும் உடனிருந்தார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# கூகிளின் புதிய நிர்வாக அதிகாரியாக முதல் தடவையாக தமிழர் நியமனம்




இணையத்தள சேவையில் முன்னணி வகிக்கும் கூகுளின் புதிய நிறுவனத்திற்கு தலைமை செயல் அதிகாரியாக சென்னையைச் சேர்ந்த சுந்தர் பிச்சை நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்பு அண்டரோய்ட் இயங்குதளத்திற்கு தலைமை செயல் அதிகாரியாக இருந்த அண்டிரூபின் பதவி விலகிய நிலையில், அதன் தலைமை செயல அதிகாரியாக சுந்தர் பிச்சையப்பா நியமிக்கப்பட்டிருந்தார்.

ஜூலை 12.1972 இல் சென்னையில் பிறந்த சுந்தரராஜன் பிச்சை தனது ஆரம்பக் கல்வியை சென்னையில் கற்றுள்ளார். ஐ.ஐ.டி. கரக்பூரில் பொறியியல் பயின்ற சுந்தர் பிச்சை, பின்னர் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ். பட்டம் பெற்றார்.

2011ஆம் ஆண்டு க்ரோம் இயங்குதளம் பற்றி செயல் விளக்கம் அளித்தார் சுந்தர் பிச்சை. பின்னர் 2012 ஆம் ஆண்டு மக்களின் பாவனைக்கு வந்தது கூகிள் குரோம். மார்ச் 13 2013 அன்று சுந்தர் பிச்சையின் மேற்பார்வையில் அண்ட்ரோய்டு இயங்குதளம் கூகிளுடன் இணைக்கப்பட்டது.

சுந்தர் பிச்சைக்கு பல்வேறு தொழில்நுட்ப ஜாம்பவான்கள் வாழ்த்து தெரிவித்த வண்ணம் உள்ளனர். இதில், மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தற்போதைய தலைமை நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வரும் சத்யா நடெல்லா தகுதிக்கேற்ற பணியில் நியமிக்கப்பட்டுள்ளமைக்காக சுந்தர் பிச்சையை வாழ்த்தியுள்ளார்.

# மகிந்த மீது கண்டனம் அர்ஜுன சீற்றம்



ரகல் வீரர் வசீம் தாஜுதீனின் மரணம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலைக் கண்ணீர் வடிக்கிறார் என முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து நாம் பேசினோம். இதனை மரணம் என்று சொன்னார்கள். நாம் கொலை என்று சொன்னோம். இருப்பினும் தற்பொழுது, பரிசோதனையின் பின்னர் அந்த விளையாட்டு வீரர் ஆயுதங்களினால் தாக்கப்பட்டுத் தான் மரணம் ஏற்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. நேற்று முன்தினம் அவரின் சடலமும் மீண்டும் தோண்டப்பட்டு பரிசோதனை நடாத்தப்படுகின்றது.

அவர் இந்த நாட்டின் தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வீரர். மகிந்த மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் மீண்டும் விசாரணைகளை ஆரம்பிக்கப் போவதாக கூறியுள்ளதை ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது.

இந்த வீரரின் மரணம் 2012 ஆம் ஆண்டு நடைபெற்றது. 2014 வரை மகிந்த ராஜபக்ஷ தான் இந்த நாட்டில் ஜனாதிபதியாக இருந்தார். இருந்தும் அவர் எந்தவொரு பிரேத பரிசோதனையையும் நடத்தவில்லை.

இவர் கடந்த காலத்தில் மறைத்த விடயங்கள் இழுத்து இழுத்து வெளியில் வரத் தொடங்கியுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# சர்வதேச கண்காணிப்பாளர்கள் கொழும்பு வருகை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் இறுதிக்குழு இன்று வரவுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தெற்காசிய தேர்தல் அதிகாரிகள் சங்கத்தின் கண்காணிப்பாளர்கள் 29 பேரே நேற்று வந்துள்ளதாக அந்தத திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வெளிநாட்டு கண்காணிப்பாளர் குழுவொன்று வருகை தந்த அதேவேளை, அவர்களின் இரண்டாவது குழுவே நேற்று வந்ததாக தேர்தல்கள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் மற்றும் பொது நலவாய அமைப்பின் கண்காணிப்பாளர்கள் கடந்த வாரம் வருகை தந்துள்ளதுடன், அவர்களது பணிகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்கால வன்செயல் இதுவரை 966 முறைப்பாடுகள்





நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2015 வேட்புமனுத் தாக்கல் செய்து இன்றுவரை பெப்ரல் அமைப்பிற்கு 966 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பின் இணைப்பாளர் நந்தினி செல்லத்துரை ஐ.பி.சி. தமிழிற்கு தெரிவித்தார்.

இவற்றில் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பாக 151 முறைப்பாடுகளும் தேர்தல் வன்முறை சம்பவமாக 133 முறைப்பாடுகளும் பாரதூர தாக்குதல் சம்பந்தமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோர் 57 பேரும் அரச வழங்களை துஸ்பிரயோகம் செய்தமை தொடர்பில் 128 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பிலும் முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பின் இணைப்பாளர் நந்தினி செல்லத்துரை தெரிவித்தார்.

# அரச நிகழ்வுகளில் கலந்து கொள்ளத் தடை




(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அரசாங்க முஸ்லிம். பாடசாலைகளுக்கும் ஓகஸ்ட் 17, 18, 19 ஆகிய மூன்று நாட்களுக்கு விடுமுறை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுற்று நிருபம் ஒன்றின் மூலம் கல்வி அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 17-19 வரை சகல அரச முஸ்லிம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குவதாகவும், ஓகஸ்ட் 20ஆம் திகதி மீண்டும் அரச முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அச்சுற்றுநிருபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சடலம் மீட்பு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிபி.ரத்நாயக்கவின் வாகன சாரதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு 07 மலலசேகர மாவத்தையில் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிபி.ரதநாயக்கவின் வீட்டில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தற்கொலை செய்து கொள்வதாக கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு அவர் நஞ்சருந்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

52 வயதுடைய நப்ரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

TONER HOUSE

உங்கள் வீடுகள், நிறுவனங்கள், மற்றும் வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்புக் கமெராக்களை இன்றே பொருத்திடுங்கள் ...

ClearVid CMOS sensor

4 Ch Packege — 29900/=

| | |
|---|---|
| 4 Ch DVR | 1 |
| 800 TVL CMOS Camera | 4 |
| 500GB HDD | 1 |
| BNC | 8 |
| DC Jack | 4 |
| Power pack 12V5A | 1 |
| Camera Stand | 2 |
| 3C 2V Cable | 50M |
| Power Cable | 50M |

8 Ch Packege — 46900/=

| | |
|---|---|
| 8 Ch DVR | 1 |
| 800 TVL CMOS Camera | 8 |
| 01TB HDD | 1 |
| BNC | 16 |
| DC Jack | 8 |
| Power pack 12V10A | 1 |
| Camera Stand | 4 |
| 3C 2V Cable | 100M |
| Power Cable | 100M |

free mobile view
free internet view

Effio

4 Ch Packege — 46900/=

| | |
|---|---|
| 4 Ch HD DVR | 1 |
| 750 TVL SONY Camera | 4 |
| 500GB HDD | 1 |
| BNC | 8 |
| DC Jack | 4 |
| Power pack 12V5A | 1 |
| Camera Stand | 4 |
| 3C 2V Cable | 50M |
| Power Cable | 50M |

8 Ch Packege — 79900/=

| | |
|---|---|
| 8 Ch HD DVR | 1 |
| 750 TVL SONY Camera | 8 |
| 01TB HDD | 1 |
| BNC | 16 |
| DC Jack | 8 |
| Power pack 12V10A | 1 |
| Camera Stand | 8 |
| 3C 2V Cable | 100M |
| Power Cable | 100M |

free mobile view
free internet view

AHD Analog High Definition

4 Ch Packege — 49900/=

| | |
|---|---|
| 4 Ch AHD DVR | 1 |
| 1.3MP 960P AHD Camera | 4 |
| 500GB HDD | 1 |
| BNC | 8 |
| DC Jack | 4 |
| Power pack 12V5A | 1 |
| Camera Stand | 2 |
| 3C 2V Cable | 50M |
| Power Cable | 50M |

8 Ch Packege — 89900/=

| | |
|---|---|
| 8 Ch DVR | 1 |
| 1.3MP 960P AHD Camera | 8 |
| 01TB HDD | 1 |
| BNC | 16 |
| DC Jack | 8 |
| Power pack 12V10A | 1 |
| Camera Stand | 4 |
| 3C 2V Cable | 100M |
| Power Cable | 100M |

free mobile view
free internet view

DVR , HDDVR, AHDDVR
Sony Effio Cameras, Cmos Camers
AHD (1.0MP, 1.3MP) Cameras
IP (1.0MP, 2.0MP) Cameras
PTZ Cameras, PTZ Stands
Power pack (12V 1A - 30A)
BNC Connector DC Jack
DVR Rack, DVR Cabinet .
போன்றவற்றை உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிநவீன cctv camera, alarm system போன்றவற்றை வட பிராந்தியத்தில் மிக குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் எம்மால் நிறுவிக் கொடுக்கப்படும்.

குறிப்பு:- உங்கள் கணனிகளிலும் கைத்தொலைபேசிகளிலும் பார்வையிடும் வசதியும். ஒரு வருடத்திற்கான பராமரிப்பு சேவையும் இலவசமாக வழங்கப்படும்.

No. 195/2, Parameswara Junction, Palaly Road. T.P: 021 300 3399 Mob: 0775 427 426

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஆகஸ்ட் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை ரூ. 2.00

# மாலை முரசு

தேர்தல் கால மாலைப் பதிப்பு

12.08.2015 | புதன்கிழமை | பக்கங்கள் – 4

அழிவா! – ஆக்கமா!! மக்கள் தீர்ப்புக்கு இன்னமும் **4** நாட்கள் மட்டுமே!

## எங்களை காப்பாற்றுங்கள் சிறையிலிருந்து ஓர் கடிதம்

ஐயா சிறீகாந்தாவுக்கு!

ஐயா தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து உங்களை சந்திக்க முடியாமலிருப்பதாக எனது அம்மா கூறினார். நீங்களும் தேர்தலில் ஒரு வேட்பாளராக போட்டியிடுவதாகவும் சொன்னா.

அதைக் கேட்டு மகிழ்ச்சி கொள்வதா? அழுவதா? என்டு எனக்கு ஒண்டுமே தெரியவில்லை. உங்களால் குற்றங்களிலிருந்து காப்பற்றப்பட்டவர்களும், அவர்களின் உறவுகளும் உங்களுக்கு வாக்களிப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் எனக்கில்லை.

ஏன் என்றால் என்னதான் குற்றம் செய்திருந்தாலும் ஏன் கொலையே செய்திருந்தாலும் கெட்டிக்காரரான நீங்கள் கை நீட்டி பணம் வாங்கிவிட்டால் விசுவாசமாக வாதாடி வெற்றிபெறுவதில் சத்தியமாகச் சொல்கின்றேன் யாழ்ப்பாணத்தில் உங்களை அடித்துக் கொள்ள யாரும் இல்லை.



கற்பழிப்பு குற்றத்தில் ஊசியையும், நூலையும் உதாரணம் காட்டி, பாதிக்கப்பட்ட பெண்ணையே குற்றத்திற்கு உடந்தை என்று நிறுபித்து விடு தலை வேண்டிக் கொடுத்த கஜேந்திர குமாரின் பேரனான ஜி.ஜி. ஐயாவுக்கு பிறகு யாழ்ப்பாணத்தில கிறிமினல் வழக்குகளை துணிச்சலோடு பொறுப்பேற்கும் நீங்கள் தான் குற்றவாளிகளின் தெய்வம்..

இதை நான் உங்கள் முகத்துக்காகவோ, எனக்காக வாதாடும் லோயஉ எண்டதாலோ சொல்லேலை. உண்மையிலேயே நீங்கள் திறமையான வழக்கறிஞர்தான். யாழ்ப்பாணத்தில இருக்கிற கிறிமினல்களைக் கேட்டால் அவர்கள் சொல்வார்கள்.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறை வெடிக்கும் – அழிவு ஏற்படும்

# இனவாதம் கக்கும் சம்பந்தர்

# மீண்டும் முள்ளிவாய்க்காலா?



தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தேர் தல் பரப்புரைக் கூட்டம் ஒன்று நேற்று முந்தினம் வவுனியா நகரசபை மைதானத்தில் நடை பெற்றது. தமிழ் தேசியக் கூட்மைப்பின் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர் கள் தேர்தல் வேட்பாளர்கள் போன்ற முக் கியஸ்தர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் அவர்களின் தலைவர் சம்பந்தர் ஆற்றிய உரையானது அனைத்து அரசியல் வட்டாரங்களையும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

ஏக்கத்தில் மக்கள்

வரும் 17ஆந் திகதி இடம் பெறவிருக்கும் தேர்தல் முடிவடைந்த பின்னர் நாம் முன்வைத்த திட்டத்திற்கு அமையவிருக்கும் அரசாங்கம் இனப்பிரச் சினைக் கான தீர்வினை முன்வைக்காவிட் டால் நாட்டில் வன்முறை வெடித்து தமிழினத் திற்கு அழிவு ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும் எனத் தெரிவித்தார்.



மூத்த தலைவர் எனச் சொல்லப்படும் சம்பந்தரின் இந்த இனவாதப் பேச்சு தமிழ்த் தேசியச் கூட்டமைப்பினரின் இயலாமையையே வெளிப்படுத்தி நிற்பதாக கருதப் படுகிறது.

ஏற்கனவே இவர்களின் வடகிழக்கு இணைந்த சமஸ்டி அடிப்படையிலான தீர்வே காணப்பட வேண்டும் என்கிற கருத்து (02 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிக்க மாட்டோம்!

### காணமற்போனவர்களின் உறவுகள்

17 ஆந் திகதி வரும் பொதுத் தேர்தலில் தாம் யாருக்கும் வாக்களிக்கப் போவதில்லை என காணமற் போனவர்களின் உறவுகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தம் முடிவடைந்து 6 ஆண்டுகளாகியும் காணமற் போன தமது உறவுகள் தொடர்பில் எந்தவிதமான தகவல்களும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் மன வேதனையுடன் தெரிவித்த அவர்கள், தேர்தல் காலங்களில் மட்டும் தம்மிடம் வரும் அரசியல் வாதிகள் வெறும் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கி விட்டு செல்லுகின்றனர் எனவும் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

காலத்திற்கு காலம் வரும் தேர்தல் காலங்களில் மட்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தம்மிடம் வருவதாகவும், காணமற்போன எமது உறவுகள் தொடர்பில் அந்தந்த தேர்தல்களின் பின் சரியான தகவல்களைப் பெற்றுத்தருவதர்கவும் கூறி விட்டுச் செல்கின்றனர்.

ஆனால் அதன் பின்னர் அவர்களை எமது பகுதிகளில் காணமுடிவதில்லை. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம் பெற்ற அனைத்துத் தேர்தல் காலங்களில்

(02 ஆம் பக்கம் பார்க்க)


## அழிவைத் தந்தது கூட்டமைப்பே சுருதி மாறும் விஜயகலா



கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் இருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்ட 5 பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களுக்கான எந்தவிதமான ஆக்க பூர்வமான சேவைகளையும் செய்யவில்லை. எதிர்ப்பு அரசியலை மட்டுமே மேற்கொண்டு வரும் இவர்களால் தொடரும் காலங்களிலும் மக்களுக்காக எதுவுமே செய்ய முடியாது.

கடந்தமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்கள் செய்யாத பலவற்றை என்னால் செய்ய முடிந்திருக்கிறது. இவ்வாறு நேற்று முந்தினம் கிளிநொச்சியில் இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஐ.தே.காவின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார். கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல், ஆட்சிப்பீடம் ஏறிய ஐக்கிய தேசிய கட்சி பிரதமரான ரணில் விக்கிரமசிங்க ஆகிய நிகழ்வுகளை அடுத்து, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே தனது எதிரி எனவும், (02 ஆம் பக்கம் பார்க்க)

# 10 இலட்சம் தமிழரின் வாக்குரிமை மறித்த பொன்னம்பலமும் பேரன் கஜேந்திரகுமாரும்



தமிழன் அரசியலிலும் சமுகத்திலும், பொருளாதாரத்திலும் உயர்நிலை கொண்டிருந்த இலங்கை அரசியல் வரலாற்றில் தன்னுடைய வாதத்திறமையால் குற்றவாளிகளை விடுதலை செய்து பெரும் பொருளீட்டி வந்த வக்கீல் ஜி.ஜி பொன்னம்பலம் அரசியலுக்குள் பிரவேசித்தார். தன்னுடைய கோணல் புத்தியால் வக்கீல் தொழிலில் கொடி கட்டிப்பறந்த ஜி.ஜி அரசியலில் ஒரு வெடி குண்டைப் போட்டார். 20 வீத்திற்கும் குறைவாக இருந்த தமிழ் மக்களுக்கு பாராளுமன்றத்தில் 50 வீதம் இடம் ஒதுக்கீட்டைக் கேட்டதுதான்.

இது தமிழ் மக்கள் மத்தியில் தனக்கு ஒரு அரசியல் கவர்ச்சியைத் தரும் என்று அவர் நம்பினார். அப்போதைய சூழ்நிலையில் அது தமிழ் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றதுடன், சிங்கள அரசியல் வாதிகள் மத்தியில் கடும் அதிருப்தியை உண்டாக்கியது. இது ஒரு நிறைவேற முடியாத வெற்றுக் கோசம் என்று உரைத்த தமிழ் மக்கள் அடுத்துவந்த பொதுத் தேர்தலில் ஜி.ஜியையும் அவரது கல்வியையும் செல்வாக்குடன் பாராளுமன்றம் அனுப்பினர். ஆனால் தனது கபட நோக்கம் நிறைவேறியதும் அப்போதைய அரசில் இணைந்து சுகபோகங்களை அனுபவிக்கத் தொடங்கினார்.

ஆனாலும் ஜி.ஜி பொன்னம்பலத்தின் அரசியல் ஏகபோகத்திற்கு அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தடையாக இருந்தது. இதனால் அந்த மக்களின் வாக்குரிமையை பறிக்க டி.எஸ் சேனநாயக்காவுடன் இணைந்து சதித்திட்டம் தீட்டினார் ஜி.ஜி பொன்னம்பலம். இதன் விளைவாக 10 இலச்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாக்குரிமை மறிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டனர்.

இதனை எதிர்த்து தந்தை செல்வா ஜி.ஜி பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார். தமிழரசுக் கட்சியை தாபித்தார்.

ஜி.ஜி பொன்னம்பலம் தமிழருக்கு எதிராக செய்த துரோகங்களுக்கும், காட்டிக் கொடுப்புகளுக்கும் பரிசாக சிங்கள அரசாங்கங்கள் பரிசாக அளித்த பென்ஸ் கார்கள் இவர்களது வீட்டு பங்களாக்களில் இன்னும் காட்சிக்கு உள்ளன. தேர்தல் காலங்களில் அவற்றை இவர்கள் இடம் மாற்றுவதும் மறைப்பதும் என்னவோ, அனைவருக்கும் தெரியும்.

இவையெல்லாம் இப்படி இருக்க தமிழனின் தியாகம், கௌரவம், அர்ப்பணிப்பு இவற்றையெல்லாம் மறந்து விட்டு, தனது தமிழ்க் காங்கிரஸ் கட்சி தமிழனுக்கு செய்த துரோகத்தை தமிழன் மறந்து விட்டான் என்று நினைத்துக் கொண்டு, ஒரு தேசம் ஒரு நாடு என்ற பொய்யான வேசத்துடன் களம் இறங்கியுள்ளார் ஜி.ஜியின் பேரன் கஜேந்திரகுமார் அவர்கள்.

வாக்காளர்கள் ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தேசம் என்பது தமிழ் வழக்கில் உள்ள சமஸ்கிருத சொல், நாடு என்பது சுத்தமான தமிழ் சொல் தேசம், நாடு இரண்டுக்கும் உள்ள வித்தியாசம்



பூனைக்கும் ஊயுவு க்கும் உள் ள வித்தியாசம் தான் என்பதை தெளிவாக புரிந்து கொண்டால் முடிவுகள் தெளிவாக அமையும்.

### இனவாதம்...

தென்னிலங்கை தேசியக் கட்சிகள் மத்தியில் எதிர்க்கப்பட்டுள்ளதுடன்சிங்களப் பேரினவாதிகளின் அச் சுறுத்தலுக்கும் ஆளாகியுள்ளது.

இந்த நிலையில் சம்பந்தர் மேலும் ஒரு படி மேலே சென்று வவுனியாக் கூட்டத்தில் ஆற்றிய வவுனியா உரை தென்னிலங்கையில் மட்டுமல்லாது அவர்களது கட்சியினர் இடையேயும் கூட பெரும் கருத்து மோதல்களையும் ஏற்படுத்தியுள்ளது.

1977ஆம் தேர்தலில் சம்பந்தர் அவர்களின் முன்னவர்களான தமிழர் விடுதலைக் கூட்டனியின் தலைவர்கள் மேடைகளில் ஆற்றிய இது போன்ற இனவாத உரைகளே தமிழ் இனத்திற்கு பாரிய அழிவை ஏற்படுத்தியதுடன் முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கும் வழிவகுத்திருந்தது.

இதே பாணியிலான சம்பந்தர் போன்றவர்களின் கருத்துக்களும் மேடைப்பேச்சுக்களும் மீண்டும் ஒரு அழிவிற்கு வழி வகுத்து விடுமோ என பொது மக்கள் பலர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

### குரோதங்கள்...

ஹென்றி மஹேந்திரன் தலைமையிலான குழுவினர் பகிரங்கமாக உடைத்தெறிந்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள், இனங்களுக்கிடையில் தேவையற்ற முறுகலைத் தோற்றுவிக்கும் என்பது யதார்த்தமானது. ஆகையினால், பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளாமல் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதனால் தேவையற்ற இனமுறுகலே தோன்றும் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். வாக்கு வேட்டைக்காக பாமர மக்களின் வாழ்க்கையை ஈடுவைக்க நினைக்கும் சிலரினால், பல்லின சமூகத்தின் நல்லுறவு கேள்விக்குட்படுத்தப்படும் என்பதை அனைத்துக் கட்சிகளும், அரசியல்வாதிகளும் நன்குணர வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

### அழிவைத்...

அவர்களை யாழ் மாவட்டத்தில் இருந்து விரட்டி அடிப்பேன் எனவும் தம்பட்டம் அடித்து வந்த விஜயகலா கடந்த சில நாட்களாக தமிழ் கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருவது தென்னிலங்கை மாற்றங்களின் எதிரொளியே ஆகும்.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி அமைக்கும் ரணில் விக்கிரமசிங்க பெருன்பான்மையுடன் பிரதமராவார் என்ற எதிர்பார்ப்பில் இருந்த விஜயகலா ஐக்கிய தேசியக் கட்சியுடன் இசைந்து செயற்படுவார்கள் என எண்ணப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை விமர்சித்து வந்தது தெரிந்ததே.

### வக்களிக்க...

மட்டும் எம்மிடம் வந்து பொய்யான வாக்குறுதிகளை எமக்கு அளித்து விட்டு செல்லுகின்ற இவர்களை நாம் இனியும் நம்பத் தயாராகவில்லை.

எமது இரத்த உறவுகளை இழந்து பரிதவித்து, சிரமத்துடன் வாழும் எமக்கு எப்போது தீர்வு கிட்டுமென நாம் ஏங்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இந்தஅரசியல்வாதிகளோ வாக்குசேகரிப்பதற்காக எம்மிடம் வந்து தமது தேவைகள் முடிந்தவுடன் காணாமற் போய்விடுகின்றார்கள்.

எமது உணர்வுகள் இவர்களால் எப்போதும் புரிந்து கொள்ளப்படுவதில்லை. கடந்த ஜனவரியில் எம்மிடம் வந்த இவர்கள் மீண்டும் இப்போதுதான் வந்திருக்கிறார்கள். தொடர்ந்தும் இவர்களை நாம் நம்பப்போவதும் இல்லை, தேர்தலில் வாக்களிக்கப்போவதும் இல்லை எனவும் காணமற் போனவர்கள் உறவுகள் சார்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுவரொட்டிகளை கிழித்து...

தம்மீது கரிசனையோடும், தமு பிள்ளைகளை மீட்டுத் தருகின்ற முயற்சியோடும்தான் இருக்கின்றார் என்று நம்பியிருந்திருக்கினமுங்கோ.
வடிவேலுவின்ர நகைச்சுவை ஒன்று இருக்கிறது எப்புடியெண்டால், அடி அடியெண்டு அடிச்சவுங்கள் ஒரு ஆட்டோவில ஏற்றும்போது கொண்டுபோய் வீட்டில விடப்போறாங்கள் எண்டு நம்பி ஏறினால், கொண்டுபோய் ஒரு மூத்திரச் சந்தில வச்சி அடிக்கிறாங்கள் எண்டு சொல்லுவார்.
அதுபோலை காணாமல்போனவர்களின் உறவுகள் அண்ணாச்சியை நம்பி ஆர்ப்பாட்டம் நடத்திச்சினமுங்கோ, ஆனால் அண்ணாச்சி காணாமல் போனவர்களின் உறவுகளை பச்சைப்புல் என்ற விடுதிக்கு வந்து காணாமல் போனவர்களின் விபரங்களை பதிவு செய்யுங்கோ, கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்போறம் எண்டு அழைத்திருக்கிறாருங்கோ.
ஆஹா ஜனாதிபதிக்கு மகஜர் கொடுத்ததைத் தொடர்ந்து அங்குஜன் கூப்பிடுறாரே ஏதும் நல்ல செய்திதான் எண்டு அங்க போனால் அங்கு ஒரு குதிரைக் கொண்டக்காரி சொல்லியிருக்கிறா வந்த நீங்கள் கொஞ்சம் இருங்கோ, அங்குஜன் வருவார் அவர் உங்களொடு கொஞ்சம் கதைச்சாப் பிறகு உங்களுக்கு பிரியாணி சாப்பாடு கிடைக்கும் சாப்பிட்டிட்டுப் போங்கோ எண்டாளாமுங்கோ.
இது வடிவேலுவை மூத்திர்ச் சந்தில. இறக்கின கதைதான் எண்டதைப் புரிஞ்சு கொண்ட காணாமல் போனவர்களின் உறவுகள், நாங்கள் என்ன சாப்பிடவே வந்த நாங்கள் பதிவுகளை எடுத்து என்ன செய்யப்போறீங்கள் எண்டு கோபத்தோடு கேட்டதுக்கு அந்த குதிரைக் கொண்டைக்காரி சொன்னாலாம், தேர்தல் முடிஞ்சதும் அங்குஜன் அண்ணாச்சி இருபத்தி அஞ்சாம் திகதிபோலை காணாமல் போனவர்களில் கொஞ்சப்பேரை விடுதை செய்து தருவார் எண்டாமுங்கோ.
சனத்துக்கு கோபம்வந்து அவளுக்கு அடிச்சுப் போட்டுதுகளாம். நாங்களே பல வருசங்களாக தேடிக் கொண்டு திரியிறம் இவள் ஏதோ தங்கட அலுவலகத்துக்குள்ள பிள்ளைகளை வைத்திருப்பதுபோல் தேர்தல் முடிஞ்சதும் ஒரு கிழமையில விடுவிப்பினம் எண்டு சொல்லுறாளே எண்டுதானாமுங்கோ பிரச்சனை பட்டிச்சினமாமுங்கோ.
அதைத் தொடர்ந்து பொலிஸ்காரரர் வந்து பிரச்சனை பெரிசாகவும் அந்த இடத்துக்கு வந்த அண்ணாச்சிஅ ங்குஜன் சொன்னதுதானுங்கோ உலக மகா நடிப்பும் பகிடியுமாமுங்கோ.
நான் அழைப்பு விடுக்கவில்லை. அந்த குதிரைவால் யார் எண்டு தனக்குத் தெரியாது எண்டும். இதெல்லாம் அரசியலில் தனக்குப் பிடிக்காதவர்கள் யாரோ செய்யும் சதி எண்ணடாராமுங்கோ. அடப்பாவி, ஜனாதிபதி வரும்போது இந்த குதிரைவால் கொண்டக்காரிதானே முன்னுக்கு நிண்டு ஆர்ப்பாட்டம் செய்தவள், பிறகு ஜனாதிபதிக்கு முன்னால வந்து நிண்டுகொண்டு எல்லாத்தையும் அங்குஜன் அண்ணா செய்வார், எல்லாத்தையும் அங்குஜன் அண்ணாவின் ஊடாச் செய்யுங்கள், அங்குஜன் அண்ணாச்சிதான் உங்கள் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்த்துவைப்பார் என்று சொல்லிக் கொண்டிருந்தவா. அப்போதெல்லாம் அதைக் கேட்டுக் கொண்டு சிரிச்சுக் கொண்டுதானே அண்ணாச்சி இருந்தவர். இப்ப கூட அந்த குதிரைக் கொண்டக்காரி சனம் அடிக்கும்போது நான் யார்? தெரியுமோ அங்குஜனின்ர ஆள் எண்டுதான் சொன்னவள்.
ஆப்புடி எண்டால் அவளுக்கு எதிராக அங்குஜன் பொலிசில முறைப்பாடு செய்வாரோ எண்டெல்லாம் சனம் குழம்பிட்டுதாமுங்கோ.
அண்ணாச்சி எப்புடியெல்லாம் யாழ்ப்பாணத்துச் சனத்தை ஏமாற்றப்பார்க்கிறார் எண்டு உதுதானுங்கோ சுத்தமான பொலிரிக்ஸ் புரியுதோ?

## மொக்கரின் முனகல் 10

# மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில சுயாட்சி மாற்றமற்ற டக்ளசின் நிலைப்பாடும்

## கேலி செய்த கூட்டமைப்பு

எங்கட விக்கி ஐயா கிளிநொச்சி தமிழ்ச் சங்கக் கூட்டத்தில ஒரு அருமையான உண்மையை எல்லோ சொன்னவர். எனக்கு அத வாசிச்சு உடம்பெல்லாம் புல்லரிச்சு போச்சுது பாருங்கோ. நான் வாசிக்கக் கேட்டு மொக்கியும் பூரிச்சு போனாள். அது என்னெண்டால் பாருங்கோ, "அரசியல் வாதி எண்டால் பொய் சொல்லித்தான் ஆக வேணும்"" இத வேற யாரும் சொல்லியிருந்தால் நான் சந்தோஷப்படமாட்டன். ஏனெண்டால் அவே பொய்யில புரண்டு, பொய்யில வளந்த பரம்பரை பெரியவை பாருங்கோ. ஆனால் விக்கி ஐயா ஒரு நீதவானா இருந்தவர். பெரிய சமய பிரசங்கியார். அவரே பொய் சொல்லவேணும் எண்டு சொல்லேக்க அது ஒரு அற்புதமான விஷயம்தானே.

56 இல செல்வநாயகம் ஐயா தமிழரசு கட்சியில கேட்க வெளிக்கிட்ட காலம் தொடக்கம் நாங்கள் பொய்யைத்தவிர வேற எந்தவொரு மெய்யையுமே கேட்டது கிடையாது. கட்சியின் பெயரே பெரிய பொய் எண்டு முந்தி படிச்சவங்கள் சொல்லுவாங்கள். .தமிழில தமிழரசுக் கட்சி எண்டுவினம். உண்மையில அது இங்கிலிசில Tamil state party tamil rule party எண்டுதான் சொல்லவேணும் எண்டு எனக்கு அந்தக் காலத்திலேயே பக்கத்தில இருந்த படிச்ச பெரியவங்கள் சொன்னவ்ங்கள். ஆனால் இவை இங்கிலிசில பெடறல் பாட்டி எண்டுதான் சொல்லுறவை. எங்கட ராணி அப்புக்காத்து பொன்னம்பலம் ஐயா இதை அடிக்கடி கூட்டத்தில விளக்கமா சொன்னவர். அப்பவே மொக்கனுக்கு விளங்கீட்டுது. இவங்கள் எப்படிப்பட்ட பொய்யனுகள் எண்டு. பெடறல் எண்டால் சரியான தமிழ் கூட்டாட்சி கட்சி எண்டு எனக்கு சொல்லித்தந்தவே.

இதைத்தான் டக்கிளஸ் தம்பியும் இணக்க அரசியல் எண்டு வெளிக்கிட்ட காலத்தில மத்தியில கூட்டாட்சி மாநிலத்தில சுய ஆட்சி எண்டு சொன்னவர். அத எங்கட கூட்டமைப்புக்காரர் எல்லாரும் கேலி பண்ணி கெக்கட்டம் போட்டு சிரிச்சவை. அதுதான் தங்கட கொள்கை எண்டு அவைக்கே விளங்கேல்ல. விளங்கினவங்கள் எல்லாரும் துலைஞ்சு போக விளக்கம் இல்லாத என்னைப் போல மொக்கன்கள்தான் இப்ப இருந்து கொடும்பாவி எரிக்கினம். ஆட்டம் போடினம். கூட்டம் கூடினம். இவங்களுக்கு ஒரு அறிவும் இல்ல. ஆளுமையும் இல்ல. மொத்தத்தில ஒண்டுமே இல்ல.

அறிவும் ஆளுமையும் உள்ள பொடியங்கள் எல்லாம் வேளைக்கு போய் சேந்திட்டாங்கள். இது தமிழ்ச்சாதியின்ர விதி. தம்பி சிவகுமாரன்தான்



எங்கட பொடியங்கள் எல்லோருக்கும் ஒரு முன்னோடி தலைவன். அவன்ர அழகை பற்றி மொக்கியும் பொச்சடிச்சு பொச்சடிச்சு புழுகுவாள். அவன்ர ஆளுமையை பற்றி இந்த மொக்கனுக்கு தெரிஞ்சதை சொல்லுறன் கேளுங்கோ. அவன் ஆசுபத்திரியில சங்கிலியில பிணைச்சபடியே செத்துப்போயிட்டான். அப்ப யாழ்ப்பாணத்தில ஆரியசிங்க என்றொரு ஸ்ரீ இருந்தவர். ஒரு கம்பீரமான மனுஷன் பாருங்கோ. சிவகுமாரன் சாகும்தறுவாயில ஆரியசிங்க அவனப் பாக்கிறதுக்கு எண்டு ஆசுபத்திரிக்கு வந்தவர். அவன்ர தோற்றத்தைப் பார்த்து ஏதோ எண்ணத்தில தொப்பியைக் கழட்டி தலையைக் குனிஞ்சு மரியாதை செலுத்தினவர். அது மட்டுமல்லாம அவருடைய கண்களில் இருந்து கண்ணீர் வந்தது எண்டும் டாக்குத்தர்மார் சொன்னவே. அதுதான் பாருங்கோ ஆளுமை. இண்டைக்கு யார் ஒருத்தன் இப்பிடி இந்த ஆளுமையோட இருக்கிறான். வேறு விஷயமும் சொல்லுறன் கேளுங்கோ. சிவகுமாரன் அநுராதபுரம் மறியலுக்குள்ள இருந்த காலத்தில சிங்களமறியல்காரங்கள்தான் பாருங்கோ தம்பிக்கு குளிக்கிறதுக்கு தண்ணி நிரப்பி

விடுறவங்கள். உடுப்புத் தோய்க்கிறதுக்கும் அவங்கள்தான்

வெளிக்கிட்டவங்கள் பாருங்கோ. ஆனா எங்கட தமிழ்ப்

பொடியங்கள் நாங்கள்தான் செய்ய வேணும் எண்டு மறிச்சுப் போட்டாங்கள். அப்ப பாருங்கோ, J.V.P பொடியங்களும் அநுராதபுரம் மறியலுக்குள்ள அடைபட் டுக் கிடந்தவங்கள். அவங்களும் தம்பி சிவகுமாரன்ல இனியில்ல எண்ட அன்பு. அப்படிப்பட்ட ஆளுமை இருக்கிறவங்கள் இனி எப்பதான் வரப்போறாங்களோ.

இப்ப இருக்கிறவைக்கு பதவிமோகம் ஒண்டுதான் கிடக்கு. வேறு

ஒண்டுமே இல்ல. அப்ப விடுதலைக்கு எண்டு வெளிக்கிட்ட பொடியங்கள் குடிக்கிறதும் இல்ல. புகைக்கிறதும் இல்ல. குடிச்சவங்கள் புகைச்சவங்களும் பிறகு அறவே விட்டுட்டாங்கள். இண்டைக்கு தம்பி சிவகுமாரனோட

பழகினவையோட ஒரு கொஞ்சப் பேர்தான் இருக்கினம். அதில் எங்கட

டக்ளஸ் தம்பியும் ஒருத்தர். எங்கட பேப்பர்காரனுகள், கட்சித்

தலைமைக்காரனுகள் எல்லாரும் பெரும் தலைவர் எண்டு ஏத்திவைச்ச வேலுப்பிள்ளையின்ர பொடியன்கூட தம்பி சிவகுமாரனைத்தான் தன்னுடைய் முன்னோடி தலைவர் எண்டு சொல்லிவைச்சார். உடுவில் தர்மலிங்கத்தாருன்ர பொடியன் சித்தார்த்தன் சாக்காட்டப்பட்ட சபாரத்தினம் போன்ற இயக்கத் தலைவர்மார் எல்லாரும் சிவகுமாரனைத்தானே முன்வைச்சுத் தொடங்கினவை. இண்டைக்கு எல்லாரும் மதிக்கிற தலைவர் எண்டு எங்களுக்குள்ள யார் இருக்கினம். சரி இதெல்லாம் பழைய கதை. இருந்தாலும் தெரிஞ்ச நல்ல விஷயங்களை மொக்கனுக்கு சொல்லவேணும் போல கிடக்குது. பொய்கள் கனகாலம் சீவிக்கிறது இல்ல. எத்தனையோ கொள்கைப் பிடிப்புள்ள பெடியங்கள் எல்லாரும் இருக்க எங்கட பேப்பர்காரங்கள் 40 வருஷத்திற்கு முந்தியே மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன் எண்ட 3 பேரைத்தான் தூக்கிப்

பிடிச்சவே. ஆனால் பழம் பழுத்தால் வெளவால் வரும். தமிழீழம் தானாய் வரும் எண்டு மேடையில முழங்க முந்தி வீடி இழுத்துப்போட்டு மேடையில ஏறினவரைத்தானே பேப்பர்காரர் தூக்கிவைச்சவே.

மற்றவர் மேடையில ஏறமுந்தி பட்டு வேட்டி சால்வைக்கு அத்தர் வீசிப்போட்டு மேடையில கவிதை பாடினவேதான் எங்கட இளந்தலைவர்மார் எண்டு பேப்பர காரன்கள் புளுகி வைச்சாங்கள். இதையெல்லாம் அந்த நேரம் கேட்டுக் கேட்டு பார்த்து பார்த்து மொக்கனுக்கு மூளை கொதிக்கும். ஒரு விளம்பர மும் இல்லாம இலட்சியத்தை இறுக்கமாய் பிடிச்சுக்கொண்டிருந்த பொடியங்கள்தான் இண்டைக்கும் நிண்டு பிடிக்கிறாங்கள். இண்டைக்கு மாவை சேனாதிராசாவும் இருக்கிறார்தான் பாருங்கோ. ஆனா குடும்பம் இந்தியாவில இவர் இஞ்ச ஆர் ஆர் என்ன பாடோ கடவுளுக்குத்தான் வெளிச்சம். இந்தப் போலி வேஷங்கள் எல்லாம் இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான் எண்டு ஊரில பரவலா கதை அடிபடுகுது.

70 வயதில உடுப்பிட்டி சிங்கன், சிவசிதம்பரம் வட்டுக்கோட்டைத் தளபதி அமிர்தலிங்கம் போன்ற

பெரியவை எல்லாம் மண்ணை கௌவிச்சினம். அதைப்போல தான் இந்த ஆவணியில நடக்கப்போகுது எண்டு ஊரில கதையும் அடிபடத் தொடங்கிட்டுது. ஆனா இதுகளெல்லாம் விளங்காம எலக்ஷனுல நிண்டு எல்லாம் வெண்டு தருவினமாம் எண்டு எங்களுக்கு கதைவிடுகினமாம் கதை.

ஒரு பாட்டொண்டு காதில கேட்டுகுது

"சுயநலம் பெரிதா பொதுநலம் பெரிதா இந்த சொல்லின் உண்மை தன்னை எண்ணிப் பாரடா...""

---

**எங்களை...**

என்னுடைய மனவருத்தம் என்ன வெண்டால் ஐயா நீங்கள் எம்.பி.யாகி கொழும்பிலை பாராளுமன்றத்துக்குப் போனால், உங்களை நம்பி இங்கே சிறைக்குள்ள இருக்கும் எங்கட நிலைமை என்னாகும் என்பதுதான்.

உங்களை நம்பி கன காசையும் அம்மா செலவு செய்து போட்டா. இன்னொரு புதிய ஆளை பிடிக்கிறதெண்டால் அதுக்கு காசும் இல்லை. உங்களைப் போல் கிரிமினல் மூளை உள்ளவர்களும் இல்லை.

ஆகவே ஐயா தயவு செய்து எங்களை கைவிட்டுப் போட்டு பாராளுமன்றத்துக்குப் போகாதீங்கோ. நான் மட்டுமில்லை. இங்கே இருக்கின்ற பல குற்றவாளிகளும் ஐயா பாராளுமன்றம் போறதை விரும்பவில்லை. இந்தக் கோரிக்கையை நான் மட்டுமில்லை முன்னாள் குற்றவாளிகளும், எதிர்காலத்தில குற்றவாளிகளாக வரப்போகின்றவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

எங்களுடைய இந்த அன்புக் கோரிக்கையை நிராகரித்துப் போட்டு. பாராளுமன்றத்துக்குப் போகத்தான் போறன் எண்டு நீங்கள் முடிவு செய்வீர்களானால், உங்களுக்குப் பதிலா உங்கட கூட் டாளி ஐயா சுமந்திரனையாவது யாழ்ப்பாணத்திலை விட்டிட்டு போங்கோ.

நீங்களும் இல்லாமல் அவரும் இல்லாமல் நாங்கள் கைவிடப்படுவோமானால், எங்களை யார் ஐயா காப்பாத்திறது..

எங்களுடைய பிராத்தனையெல் லாம் நீங்கள் ரெண்டு பேருமே பாராளு மன்றத்துக்கெல்லாம் போகாமல் எங்களுடனேயே இருக்க வேணும் எண்ட்து தான். பிளீஸ் புரிஞ்சு கொள்ளுங்கோ ஐயா.

இப்படிக்கு
உங்களையே நம்பி
விடுதலைக்காக காத்திருக்கும்
அப்பாவி ஐயாசாமி....

# சுவரொட்டிகளை கிழித்து... புரியாணிகளை கொடுத்து...



## எம் பி ஆவாராம் அங்கஜன் - புலம்புகிறான் பாமரன்

வணக்கமுங்கோ. பார்ளிமெண்ட் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தான் எந்தக் கட்சிக்கும் ஆதரவாக பிரசாரப் பணிகளில் ஈடுபடப் போவதில்லை என்றும், நடு நிலையாக இருக்கப்போவதாகவும் கூறியிருந்தாருங்கோ.

அடடா நம்ம ஜனாதிபதி புதிய பொலிடிக்ஸ் கலாசாரம் ஒன்றை அறிமுகப்படுத்திறார் எண்டு நானும் வாயைப் பிளந்துதான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேனுங்கோ. ஜனாதிபதியின்ர போட்டோவை யாரும் வாக்குச் சேகரிக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதும் தடை செய்யப்பட்டிருக்க வேணுமுங்கோ. ஆனால் அதை ஏனோ ஜனாதிபதி செய்யவில்லையுங்கோ. தென் இலங்கையில் அவ்வளவாக ஜனாதிபதியின் போட்டோவை யாரும் பிரசாரத்துக்கு ஈடுபடுத்தாட்டினும், யாழ்ப்பாணத்தில வெற்றிலையில போட்டிபோடும் அண்ணாச்சி அங்கஜன் ஜனாதிபதி மைத்திரியின்ர போட்டோவையும் தன்னுடைய போட்டோவையும் சேர்த்துப் போட்டுத் தானுங்கோ முழுக்க முழுக்க தனது பிரசாரங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறாருங்கோ.

ஆனால் பாருங்கோ அன்மையில ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு திடீரென்று வருகைதந்து



கைலாசப் பிள்ளையார் கோயிலில பூஜையிலையும் கலந்து கொண்டிருந்தாருங்கோ. அவர் யாழ்ப்பாணத்தக்குள் வரும்போது இரவோடு இரவாக ஜனாதிபதியையும் தன்னையும் சேர்த்து அங்கஜன் அண்ணாச்சி ஒட்டியிருந்த சுவரொட்டிகளை கிழிச்சுப் போட்டினமுங்கோ.

ஏன் எண்டால் அப்புடி சுவரொட்டி ஒட்டியிருப்பதை ஜனாதிபதி பார்த்துவிடக் கூடாதாமுங்கோ. எப்புடி இருக்குது விளையாட்டு, ஜனாதிபதியின்ர போட்டோவை போட்டு யாழ் மக்களுக்கு காட்டுவாராம் ஆனால் ஜனாதிபதிக்கு காட்டமாட்டாராம்.

அது மட்டுமில்லையுங்கோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின்ர வெற்றிலைச் சின்னத்திலதான் வாக்கு கேக்கிறார். ஆனால் இது ஜனாதிபதி மைத்திரிபாலவின்ர வெற்றிலைச் சின்னமாமுங்கோ. வெற்றிலைச் சின்னம் தன்னுடைய சின்னம் என்று ஜன்ாதிபதியே சொல்லமாட்டார் ஆனால் அண்ணாச்சி அப்புடிச் சொல்லுறாருங்கோ.

யாழ்ப்பாணச் சனத்தை எந்தளவுக்கு முட்டாள் பயல்கள் எண்டு அண்ணாச்சி நினைத்துக் கொண்டிருக்கிறார் பார்த்தியளோ. நீங்கள் நினைப்பியல் இவர் சுவரொட்டிகளை கிழிச்சுப் போட்டாலும் அது ஜனாதிபதிக்கு தெரியாதோ எண்டு. எனக்கும் அப்படி ஒரு டவுட் இருக்குதுங்கோ.

யாழ்ப்பாணத்தில எப்புடி பிரசாரங்கள் இருக்குது எண்டும், அதிலையும் அங்கஜன் அண்ணாச்சி என்னமாதிரி நடந்து கொள்ளுறார் எண்டதையும் ஜனாதிபதி தெரிந்து கொள்ளாமல் இருப்பாரோ எண்டு. நீங்கள் நினைப்பது சரிதானுங்கோ.

நமது சந்தேகம் சரிதான் எண்டாலுமுங்கோ, இவங்கள் எல்லாரும் சேர்ந்துதான் யாழ்ப்பாணத்தாரை பேய்க்காட்டலாம் எண்டு நம்புறாங்கள் போல.

இல்லாட்டில் ஜனாதிபதியின்ர போட்டோவை பயன்படுத்துவது தவறு என்றால் உடனடியாக திருத்தியிருக்கவெல்லோ வேணும்.

இதுமட்டுமில்லையுங்கோ யாழ்ப்பாணத்தில உறவுகளை தொலைச்சுப்போட்டு கண்ணீரும் கம்பளையுமாக வாழ்ந்து கொண்டிருக்கும் காணாமல் போனவர்களின் உறவினர்களை ஜனாதிபதி வரும்போது ஆர்ப்பாட்டம் செய்யும்படியும், அவரிடம் மகஜர் ஒன்றை கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் சொல்லியிருக்கினமுங்கோ.

காணாமல் போனவர்களின் உற்வுகளும் வழமைபோல் வந்து அழுது, ஆவேசமாகக் கத்தி, மகஜரையும் கொடுத்திச்சினமுங்கோ. அடடா அண்ணாச்சி (02 ஆம் பக்கம் பார்க்க)

# குரோதங்களின் கூக்குரலாகும் கூட்டமைப்பு மேடைகள்

அரசியல் மேடைகளில் ஆக்ரோக்ஷமாகப் பேசுகின்றோம் என்ற தோரணையில், குரோதங்களை வெளிப்படுத்தும் அரசியல்வாதிகளைத் தற்போது அதிகமாகவே காணக்கூடியதாகவிருக்கிறது. பொதுவாகவே அரசியல் மேடைகளில் தம்நிலை மறந்து பேசுகின்ற அரசியல்வாதிகளைத்தான் நாம் காண்கின்றோம். இம்முறை பொதுத்தேர்தல் பிரசார மேடை என்பது குரோதங்களின் கூக்குரலாகவே பார்க்கப்படுகின்றது.

இந்தக் கூக்குரலை கூடுதலாக தேசிக்கோசம் இடுபவஉகளே ஒருசாரார் மேற்கொள்வதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. சிங்கள மக்கள் மத்தியில் பேசுகின்ற இனவாதக் கட்சிகள், தமிழர்களையும் அவர்களது கோரிக்கைகளையும் நாட்டினைப் பிரிக்கும் துரோகத்தனம் என்பது போன்று பேசிவருகின்றன. அதேபோல், வடக்கு கிழக்கிலே பேசுகின்ற தமிழ் தேசிய அரசியல் தலைவர்கள், தெற்கிலுள்ள சிங்களத் தலைமைகளை விமர்சித்து, ஆளாளுக்குக் கருத்துக்கூறி வருகின்றனர்.

இதைவிடக் கேவலமான முறையில், தங்களுக்குத் தாங்களே துரோகிப் பட்டங்களைச் சுமத்தி, வாக்கு வேட்டையில் இறக்கியிருக்கும் தமிழ்த் தலைமைகள்ளைப் பற்றியும் அதிகம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஒரே கூட்டணியில் வாக்குச் சேகரித்து நாடாளுமன்றுக்குச் சென்ற அரசியல் வாதிகள், இம்முறை தேர்தலில் வெவ்வேறு தரப்பாக இருப்பதன் காரணமாக ஒருவருக்கு ஒருவர் குரோதங்களைப் பரப்பி வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

ஒன்றாக இருக்கும் போது சாதிக்க முடியாததை தனித்தனியாக இருக்கும் போது சாதித்துவிடலாம் எனப் பிரசாரம் செய்வது அனைவர் மத்தியிலும் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

மக்கள் மத்தியில் துவேசங்களைத் தூண்டிவிட்டு குளிர்காய நினைக்கும் அரசியல் வாதிகளின் கடைகளே வழமைபோல சூடாக இருக்கின்றன. தங்களுடைய வாக்கு வங்கியினை நிரப்பிக் கொள்வதற்காக இனங்களிடையே குரோதங்களை வளர்ப்பது நியாயமானதல்ல.

அந்தவகையில், கல்முனை தனியார் பஸ் நிலையத்திலிருந்து சாத்தான்கேணி மைதானம் வழியாக பொதுச் சந்தைக்குச் செல்லும் வீதிக்கு எம்.எஸ்.காரியப்பர் வீதி எனப் பெயர் சூட்டுவதற்காக வைக்கப்பட்டிருந்த கல்வெட்டினை தமிழஉ விடுதலைக் கூட்டணியின் ஒரு அங்கமான டெலோ கட்சியின் பொதுச் செயலாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான(2ம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பின் தேர்தல் வரம்பு மீறல்கள்

அரச சொத்துக்களை துஸ்பிரயோகம் செய்வதுடன் தவறான பிரச்சாரங்களையும் மேற்கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேர்தல் நெறிமுறைகள்ளை மீறி, பெரும் வரம்பு மீறல்களில் ஈடுபட்டு வருவதாக நீதியானதும் சுதந்திரமானதுக்குமான தேர்தல் கண்காணிப்பிற்கான சுயாதீன அமைப்பான கபே அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ வாலிபர் சங்க மண்டபத்தில் திங்கட் கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்திதென்னக்கோன் இதனைத் தெரிவிவத்தார். மேலும் அம்மாநாட்டில் அவர் உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியில் இருந்த உள்ளூராட்சி சபைகளின் அங்கத்தவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன் படுத்துவதுடன் பல தேர்தல் விதிமுறை மீறல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

